# பூபாள ராகங்கள்

## சிறுகதைத் தொகுதி
## 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

robert terry
fluent in property

SALES

LETTING

COMMERCIAL

VALUATION

MORTGAGE SOLUTIONS

21st anniversary


# robert terry
## ESTATE AGENTS
www.robertterry.co.uk

**- Sales - Letting - Commercial Mortgages -**
**- Management - Commercial Leasing -**
**- Business Transfers - Life Assurances -**

We at Robert Terry & Co are delighted to offer a complete property service to you whatever your property matter is

We also arrange mortgages for all types of clients including problem cases
(foreign nationals and CCJ's or default)
We also arrange Buy to Let mortgages

நீங்கள் வீடு வாங்கவோ அல்லது விற்கவோ
சகல விதமான சேவைகளையும் செய்து தருவோம்.
வீடுகள் வாங்க கடன் வசதிகள் செய்து தருவதோடு
நீங்கள் வீடுகளை வாங்கி வாடகைக்கு விடவும்
ஒழுங்கு செய்து தருகிறோம்.




**Pinner Branch**
398-400 Rayners Lane, Pinner
Middx HA5 5DY
Tel: 020 8429 4000 Fax: 020 8429 0550

**Harrow Branch**
21 Masons Avenue, Wealdstone,
Harrow, Middx HA3 5AH
Tel: 020 8863 6666 Fax: 020 8863 6665

Printed by VASAN PRINTERS 020 8646 2885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூபாள ராகங்கள்
# சிறுகதைத் தொகுதி - 2005

**வெளியீடு**
கம்பர்மலை வித்தியாலயம் - கொம்மந்தறை
பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம்
"Selva Sikaram" 72, Minterne Waye
Hayes, Middlesex, UB4 OPF
London, U.K.

நவஜோதி:
லண்டன்
22-07-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பூபாள ராகங்கள் சிறுகதைத் தொகுதி - 2005
- சிறுகதைகள்
- பதிப்பாசிரியர் - மகாலிங்கம் சுதாகரன்
- பதிப்புரிமை - பதிப்பாசிரியரின் அனுமதியுடன் பழைய மாணவர் சங்கத்திற்கே
- முதலாம் பதிப்பு - 25-06-2006
- அட்டைப் படம் - ஆர்.பிரசன்னா
- அச்சுப் பதிப்பு - தரஞ்ஜி பிரின்ட்ஸ்
  நாவின்ன
  மஹரகம
  இலங்கை
- வெளியீடு - கம்பர்மலை வித்தியாலயம்
  கொம்மந்தறை
  பழைய மாணவர் சங்கம்
  ஐக்கிய இராச்சியம்
  T.P 00442086465105
  00447947471529
  E mail: info@poobalaragangal.com
- விலை - ரூபா 200/- (இலங்கை நாணயம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## புலம்பெயர் இலக்கிய ஆர்வத்தின் புதிய பரிமாணம்

இலண்டன் வாழ் தமிழ் மக்களின் வருடாந்தக் கலாசார நிகழ்ச்சி நிரலில் இன்று ஓர் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றிருப்பது 'பூபாள ராகங்கள்' கலைவிழா நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை ஆண்டுதோறும் வெகு சிறப்பாக நடாத்திவரும் யாழ் கம்பர்மலை வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையினரும் - இந்த விழாவிற்கான சர்வதேச ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றும் சகோதரர் சுதாகரனும் - முதற்கண், நமது பாராட்டுதல்களுக்கு உரியவராவார்கள்.

1983ஆம் ஆண்டில் ஜூலை மாதம் இடம்பெற்ற இனப்படு கொலைகளைத் தொடர்ந்து, இலங்கையிலிருந்து நாம் புலம் பெயர்ந்து வந்த போது - கொடுமைகளும், கொடூரங்களும், இறப்புக்களும், இழப்புக்களும், கவலைகளும், கண்ணீரும் வாழ்வின் பேறுகளாக விரவிக் கிடந்த ஒரு சூழலைவிட்டு வெளியேறி வந்த போது - எங்கள் உயிர்களை மட்டும் காப்பாற்றிக்கொள்ளும் ஒரே நோக்கத்தோடு ஓடிவந்த போது - எங்கள் ஆஸ்திகளையோ, உடமைகளையோ எங்களோடு உடன் எடுத்து வரவில்லை. மாறாக நாங்கள் பாரம்பரியமாகப் பேணி வந்த இன, மத, கலாசாரப் பண்புகளையும் - நாம் கற்ற கல்வியையுமே - உடன் எடுத்து வந்தோம்.

இவ்வாறு புலம்பெயர்ந்த நம்மவரில் ஒரு சாரார் தாம் புகுந்த பூமியின் கலாசாரத்தோடு ஒன்றி இணைந்துவிட்ட போதிலும் - பெரும்பாலான எமது மக்கள் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ் மக்களின் பாரம்பரியமான பண்புகளையும், மொழியையும், கலாசாரச் சின்னங்களையும் பாதுகாப்பதற்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

இப் புலம்பெயர் மண்ணின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை களுக்கிடையில் - மாறுபட்ட கலாசார முரண்பாடுகளுக்கு மத்தியில் - நமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆத்மார்த்த உணர்வு கொண்டவர்களில் யாழ். கம்பர்மலை வித்தியாலயப் பழைய மாணவர்கள் ஒரு முன்னோடியாக விளங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை வளர்த்தெடுத்த தாயான கல்விக்கூடத்தை மறவாது - அந்தத் தாயைக் கோயிலாகப் போற்றி - அத்தாயைத் தாங்கி வளர்த்து வரும் பண்பு - நாம் போற்றிப் பாடவேண்டிய பண்பு. இவர்களது முயற்சிகளும், பிரயாசைகளும், பிரயத்தனங் களும் பாராட்டப்பட வேண்டியவை மட்டுமல்ல; நமது புலம்பெயர் வாழ்க்கை வரலாற்றில் பதிவுசெய்யப்பட வேண்டியவையே!

தமிழ் மக்களின் பாரம்பரியமான கலை, கலாசார நிகழ்வு களோடு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான ஒரு களம் அமைத்துக் கொடுப்பதும் 'பூபாள ராகங்கள்' விழாவின் ஒரு அங்கமாக விரிவடைந்திருக்கிறது. இப்பரிமாண வளர்ச்சியின் ஒரு பீடமே 2004ஆம் ஆண்டில் முதன் முதலாக உலகமெல்லாம் வதியும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக இலங்கைத் 'தினக்குரல்' பத்திரிகையுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட உலகளாவிய தமிழ்ச் சிறுகதைப் போட்டி, இலக்கிய உலகில் இது ஒரு முன்னோடி முயற்சி. புலம்பெயர்ந்த தமிழனின் மொழிப்பற்றை உலகத்திற்கு இனங்காட்டிய அரியதொரு முயற்சி. தமிழ் இலக்கிய உலகிற்கு இம் முயற்சி அளித்துவரும் பங்கு கணிசமானது; காத்திரமானது.

சென்ற 2005ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உலகளாவிய இரண்டாவது சிறுகதைப் போட்டியின் நடுவர்களில் ஒருவராகப் பணியாற்றிய சந்தர்ப்பத்தை எனக்குக் கிடைத்த பேறாகவே கருதுகிறேன். உலகின் பல நாடுகளிலுமிருந்தும் இப் போட்டிக்கு வந்த கதைகளின் எண்ணிக்கை 255.

வெவ்வேறு பகைப்புலங்களில் - வெவ்வேறு பின்னணிகளில் - வெவ்வேறு தடங்களில் - வெவ்வேறு உருவங்களில் - வெவ்வேறு உள்ளடக்கங்களில் - வெவ்வேறு உத்திகளில் - பலதரப்பட்ட பாத்திர அமைப்புக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இக் கதைகளை - உய்த்து, உணர்ந்து, உள்வாங்குவதே ஓர் அற்புத மான அனுபவம். இவற்றில் பரிசு பெறத் தகுதியானவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதின்மூன்று கதைகள் இந்த நூலில் இடம்பெறுகின்றன.

இவற்றை இன்றைய உலகின் மிகச் சிறந்த கதைகள் என்று பேரிகை முழக்க நான் முயற்சிக்கவில்லை. இவற்றில் சிறப்பான சிறுகதைகள் உண்டு; சிறுகதையின் இலக்கணத்திற்குள் அடங்காத எழுத்துக்களும் உண்டு. ஆனால், பதின்மூன்று எழுத்தாளர்களின் பதின்மூன்று ஆக்கங்களை - பதின்மூன்று நோக்குகளை - வாசகர்கள் இங்கே காணலாம். பலதரப்பட்ட அனுபவங்கள், பலவகையான எண்ண ஓட்டங்கள், வேறுபட்ட உணர்வுகள், வித்தியாசமான மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைகள், கலை வளம், கருத்து வளம், கதையம்சம் ஆகியன உங்கள் இதயங்களை நிச்சயமாக நெருடச் செய்யும்.

முதல் மூன்று பரிசில்களையும் பெற்றிருக்கும் கதைகளை சற்று விரிவாகப் பார்ப்போம்.

இலங்கையில் யுத்தம் முடிந்து 'சமாதானம்' நிலவிய ஒரு காலகட்டத்தில் நடைபெறுவதாக எழுதப்பட்ட கதை 'பொறி'. வீடியோ கடையில் வேலைபார்க்கும் கதாநாயகன் தனது வீட்டில் எலிகளின் தொல்லை தாங்க முடியாமல் அவற்றைப் பொறிவைத்துக் கொன்று வருகிறான். அக் கட்டத்தில் சீருடை அணிந்த இராணுவத்தினர் அவனது கடைக்கு வந்து ஒரு நீலப்படத்தில் நூறு பிரதிகள் அடித்துத் தருமாறு கேட்கின்றனர். அப்பிரதிகள் தனது மண்ணின் பாடசாலை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விநியோகம் செய்யப்படப் போகிறது என்பதை உணர்ந்த கதாநாயகன் அதை அடித்துக் கொடுக்க மறுத்துவிடுகிறான். இவர்கள் மேற்கொள்ளும் கலாசார அழிப்போடு ஒப்பிடும் போது அவனது எலி வேட்டை துச்சமாகப் படுகிறது. இதுவே கதையின் சாராம்சம்.

போரினால் ஏற்படக்கூடிய அழிவைக் காட்டிலும், இக் கீழ்த்தரமான கலாசார அழிப்பு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் காட்டும் சமூகப் பிரக்ஞை கொண்ட கதை இது. ஸ்கூட்டர், செல்போன், தியேட்டர் என்று அமர்க்களப்படுத்தும் பல்கலைக்கழக மாணவி அபிநயா இந்தக் கதைக்குத் தேவையான ஒரு பாத்திரமா?

ஒரு சமூகத்தின் அடித்தளத்தை - ஆதார சுருதியை - அழிப்பதற்கு துப்பாக்கிதான் ஏந்த வேண்டும் என்று இல்லை. அச்சமூகத்தின் கலாசார விழுமியங்களை - பண்பாட்டுப் பாரம்பரியங்களை - இன்னொரு சமூகத்தினரால் திட்டமிட்டே சீரழித்துவிடலாம் என்ற பயங்கர உண்மை உள்ளத்தை உறுத்திக் கொண்டிருப்பது இப் "பொறி" ஏற்படுத்தும் தாக்கம். இதுவே இக் கதையின் சிறப்பு.

சிறுகதைக்கென்று உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஓர் இலக்கணம் உண்டு.

"சிறுகதை என்றால் அதில் ஒரு ஆரம்பம், ஒரு நடு, ஒரு முடிவு இருக்க வேண்டும். கதையின் ஆரம்பத்தில் ஒரு பிரச்சினை அல்லது போராட்டம் இடம்பெற வேண்டும்; நடுவில் அப்பிரச்சினை ஒரு சிக்கலாக வளர வேண்டும்; முடிவில் அச் சிக்கல் தீர்க்கப்பட்டு அப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்லது முடிவு காணப்பட வேண்டும்" என்கிறார் சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படும் பிரெஞ்சு மேதை மாப்பஸான். இதுவே இன்று உலகரீதியாகப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் சிறுகதையின் இலக்கணமாகும்.

இந்த இலக்கணத்திற்கமைய இன்றைய இலங்கையின் சமூக, அரசியல் யதார்த்தத்தைச் சித்திரிக்கும் கதை "வட திசைக் காற்று". பிரச்சினை: செய்யாத குற்றத்திற்காக அப்பாவியான ஒரு இளைஞன் பதினாறு வருடங்கள் பூசா கடுஞ்சிறையில் அடைபட்டுக்கிடப்பது. சிக்கல்: விடுதலை பெற்றும் 'பயங்கரவாதி' எனப் பட்டம் சூட்டப்பட்டும், நண்பர்களால் புறக்கணிக்கப்பட்டும், உறவினர்களால் ஒதுக்கப்பட்டும், பொலிஸாரால் துரத்தப்பட்டும் திண்டாடுவது. தீர்வு: கொழும்புக்கு வேலை தேடிப் போவதாகப் பொய் கூறிவிட்டு, விடுதலைப் போராளியாக மாறும் தீர்மானத்துடன் வடக்கே வன்னியை நோக்கிப் பயணிப்பது.

கதையமைப்பு, உருவம், உள்ளடக்கம், உத்திமுறை யாவும் கூர்மையாக அவதானிக்கப்பட்டு - சமூகப் புரிந்துணர்வுடனும் - பிரக்ஞைபூர்வமான மொழி நடையுடனும் - எழுதப்பட்டிருக்கும் மிகச் சிறப்பான சிறுகதை "வட திசைக் காற்று".

கதையில் இடம்பெறும் சம்பவங்களைப் பற்றி மட்டும் சிந்திப்பதுடன் நிறுத்திவிடாது, கதையின் அடித்தளமாக அமையும் இன்றைய அரசியல் - சமூக அவலநிலை பற்றியும் நம்மைச் சிந்திக்கச் செய்யும் காத்திரம் இக் கதைக்கு உண்டு.

பிறப்பிலிருந்தே உடலும், மூளை வளர்ச்சியும் ஊனமடைந்து, சக்கர நாற்காலியில் காலத்தைக் கழிக்கும் ஒரு சிறுவனின் உள்ளுணர்வுகளை சொல்லோவியமாக வடித்திருக்கும் துன்பியல் சித்திரம் "யார்க்கெடுத்துரைப்பேன்?"

இவ்வாறு ஊனமுற்றோர்கள் பல்வேறு வழிகளில் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள முடியும் என்பது நிருபணமாகி வரும் இக்காலகட்டத்தில் (இவர்களுக்கான பிரத்தியேக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி கூட இன்று உண்டு) - இச் சிறுவனின் எதிர்காலத்தை "இருண்ட பாலைவன"மாக்கிக் காட்டுவது வாழ்க்கையை நம்பிக்கையுடன் அணுக முயற்சிக்கும் (Positive approach to life) செயலாகாது.

"மனித வாழ்வின் ஊனங்களை உள்ளத்தால் உணர்ந்து, அவர்களுக்கும் ஒரு சிறப்பான எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டுவதே முற்போக்குப் படைப்பிலக்கியவாதியின் முக்கிய கடமைகளுள் ஒன்று" என்கிறார் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் சோமஸெட் மோம் (Somerset Maugham: Introduction to "Of Human Bondage").



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிற்போக்கான (Negative) அணுகுமுறையைத் தவிர - கதாசிரியரின் சொல்லாட்சி, பொருத்தமான படிமங்கள், உவமைகள், உருவகங்கள், உவமானங்கள் கதை முழுவதும் செறிந்து, நிறைந்து சிறப்பூட்டுகின்றன.

இதைத் தொடர்ந்து இடம்பெறுபவை ஆறுதல் பரிசில்கள் பெறும் பத்துக் கதைகள். இரு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அழிவின் விளைவான மனித அவலத்தைத் துடைக்கும் பணிக்காக இலண்டனிலிருந்து சென்ற வைத்தியக்குழுவில் ஒருவரான - புலம்பெயர்ந்து வந்த இரண்டாம் தலைமுறையின் இளம் வைத்தியர் அபிராவின் அனுபவங்களையும், எண்ணங்களையும், அவரது இறுதி முடிவையும் பதிவு செய்யும் கதை "அப்பாவின் நாடு". மனித இரக்கமும், மனிதத்துவமும், மக்கள் சேவையின் மாண்பும் இங்கே சுடர்விடுகின்றன.

இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் கிராமமொன்றின மத்தியில் ஆற்றங்கரையோரமாக அமைந்த ஒரு இஸ்லாமிய பள்ளிவாசல். அப்பிரதேசத்தில் நடைபெற்ற இந்து-முஸ்லிம் இனக் கலவரத்தில் அத்தொழுகைத் தலம் அழிக்கப்பட்டிருக்கும் என்ற எண்ணத்தோடு பல ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கே வரும் கதாநாயகனுக்கு அத்தலம் உருப்படியாக, புதிதாக வெண்சாந்து பூசப்பட்டிருப்பதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. அதை விடப்பெரிய ஆச்சரியம் அத்தலத்தைப் பராமரிப்பவர் நெற்றியில் விபூதியணிந்த வயதான ஒரு சைவர். "இது ஆண்டவன் வாழும் இல்லம் ஐயா; மார்க்கம் என்பது என்ன? ஒருவன் நிம்மதியாக வாழ்வதற்கு வழிகாட்டுவது. அத்தகைய, ஒரு மார்க்கத்துக்குச் சொந்தமான பள்ளிவாசலை பிறிதொரு மார்க்கத்தைப் பின்பற்றும் ஒரு சாரார் இடிக்கலாமா? கூடாது ஐயா; கூடவே கூடாது. நாங்க இதை இடிச்சா கடவுள் பழி எங்கள் மீது இறங்குமே தவிர எங்களுக்குப் பாவ விமோசனம் இல்லாமல் போகும்" என்ற அந்த வயதானவரின் வார்த்தைகள் நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றன. மற்றுமொரு சிறப்பான கதை இந்த "ஆற்றங்கரை அப்பா".

வெளிநாடு செல்வதற்கான 'விசா' எடுப்பதற்காக, கர்ப்பவதி யான தனது மகளுக்குப் பதிலாக தூதுவராலயத்தின் முன்னால் அதிகாலையிலிருந்து குளிரையும், மழையையும், வசைச் சொற்களையும், வன்முறைகளையும் பொறுத்துக் கொண்டு வரிசையில் நின்ற செல்லத்துரைக்கு பின்னர் அதுவே தொழிலாகி விடுகிறது. "ஒரு விடியல் பொழுதில்....." சமகால யதார்த்தம்.

கிராமியப் பின்புலத்தில், நுணுக்கமான சமூக அவதானிப்புடன், கிராமப்புறத்துப் பேச்சு வழக்கை அருமையாகக் கையாண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை "வல்லூறும் கோழிக்குஞ்சுகளும்". போர்க்காலப் பின்னணியில், வயதான ஒரு தம்பதிகளின் வாழ்க்கையில் ஒரு நாள் நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி இது.

வெய்யில் தீயெனக் காயும் வரண்டுபோன பிரதேசத்தில், கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுத்து வந்த ஒரே ஒரு கிணறும் வற்றிப்போன பின் - என்றாவது ஒரு நாள் அந்தக் கிணற்றில் திரும்பவும் நீர் சுரக்காதா என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் அண்ணாச்சியின் கதை "அண்ணாச்சிக் கிணறு".

போர்க்காலச் சூழலில் அவதிப்படும் வட இலங்கையின் ஒரு கிராமத்து மக்களுக்கு வெப்பத்தில், வயிற்றுப் பசியோடு வைத்தியம் செய்துவந்த டாக்டர் கொழும்புக்கு மாற்றலாகி வருகிறார். அங்கே குளிரூட்டப்பட்ட 'ஏர் கண்டிஷன்' அறையில் வேலை பார்த்தும் கீழே வேலைபார்க்கும் ஊழியரின் இளக்காரப் பேச்சும், அரசியல் புள்ளிகளின் கையாட்களின் இனவாதப் போக்கும் அவரது தொழிலையே வெறுப்படையச் செய்கிறது. அந்த வேலையை விட்டுவிட்டு, தன்னை மதிக்கத் தெரிந்த மக்களிடமே திரும்பிவிட முடிவெடுக்கிறார். இதுவே "அக்கரைப் பச்சை" கதை. கதையம்சம், உருவாக்கம், உரைநடை யாவும் சிறப்பு.

வறுமையிலே வாடும் தமிழ் வாத்தியார். கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சாப்பாடும், மாலையில் 'மியூசிக்கல் ஷோ'வுமாக வாழ்க்கை நடத்தும் அவரது மகன். அவருக்குக் கிடைக்கும் பென்ஷன் மேலதிகப் பணத்தையெல்லாம் புது வீடு கட்டத் தொடங்கியிருக்கும் மகனிடமே கொடுத்து விட்டு வறுமை யிலேயே கஷ்டங்களை மீண்டும் அனுபவித்துக் கொண்டிருக்கும் வாத்தியாரின் கதை "தந்தை மனம்". "பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு" என்ற தத்துவத்தின் விளக்கம்.

யுத்த காலச் சூழலில் சாதாரண மக்கள் படும் துன்பங்களை - யுத்தத்தின் கொடூரங்களை - குருதி கொட்டும் அவலங்களை - காடாகிப் போய்விட்ட கிராமங்களை - கருகிப் போய்விட்ட வாழ்க்கைக் கனவுகளை - துல்லியமாக, சரளமான மொழி வன்மையுடன் படம் பிடித்துக் காட்டும் கதை "சொல்லில் எழுதிய வாழ்வு". இம் மக்களின் அவலமான வாழ்க்கை கதையில் தூக்கலாக நிற்க - என்றுதான் உண்மையான சமாதானம் கிட்டுமோ என்ற ஏக்கம் கேள்வியாகத் தொக்கி நிற்கிறது.

"வியாபாரிகள்" என்ற கதையில் சூம்பி வளைந்த கையோடு ரெக்ஸின் உறைகள் விற்கும் இளைஞன் - அறுவாள் மீசையோடு பொம்மைகள் விற்கும் மனிதன் - ஆகிய வித்தியாசமான பாத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்ப்புக்களைச் சந்திக்கிறோம். அந்த அறுவாள் மீசைக்காரனின் குரூரமான இயல்பைச் சகிக்க முடியாத கதாநாயகன் 'மார்க்கெட் டுக்குப்' போவதை நிறுத்திவிடுகிறான். உயர்வான எழுத்துவன்மை சாரமற்ற ஒரு கதையில் வீணடிக்கப்படுவதற்கான சிறந்த உதாரணம்.

"கிணற்று நீர்" - கிணற்றையும் அதன் சுற்றாடலையும் விவரிக்கும் சிறப்பான ஒரு சொல்லோவியமே தவிர சிறுகதையே அல்ல. "சிறுகதை என்றால் சின்னதாக இருக்க வேண்டும், அங்கே ஒரு கதையும் இருக்க வேண்டும்" என்பார் பேராசிரியர் கல்கி. கதை இல்லாத வர்ணனைகள் எத்தனைதான் சிறப்பாக எழுதப் பட்டிருப்பினும் சிறுகதை ஆகமாட்டா.

இச் சிறுகதைப் போட்டியில் பங்கு பெறுவதற்காக உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், தமது காலத்தையும், நேரத்தையும், கற்பனையையும், சிந்தனையையும் செலவிட்டு 255 எழுத்தாளர்கள் கதைகளை அனுப்பிவைத்திருந்தார்கள். இவர்கள் காட்டிய ஆர்வமும், துடிப்பும் எங்கள் தமிழ்மொழி என்றுமே அழியாது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளையும், வாழ்த்துக் களையும், வணக்கத்தையும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"
என்று அன்று வேண்டினார் பாரதியார்.
"துருவங்கள் சென்றாலும்
தமிழ் கொண்டு சேர்ப்போம்"
எனப் பதிலிறுக்கிறார்கள் எமது இன்றைய உறவுகள்.

**எஸ்.தியாகராஜா**

**M.B.B.S, B.C Psych, Ph.D**

24 GRAND DRIVE
RAYNES PARK
LONDON SW20 OJT
U.K.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

உலகப் பரப்பெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்த ஒரு கல்விக்கூடமாக, ஈழத் திருநாட்டின் யாழ். மாவட்டத்திலே உள்ள விவசாயப் பாரம்பரியம் மிக்க கொம்மந்தறை கிராமத்தில் அமைந்துள்ள கம்பர்மலை வித்தியாலயம் விளங்குகிறது. இவ்வித்தியாலயத்தின் பெயரை சர்வதேசத் தமிழர்கள் உச்சரிக்க வைத்த பெருமை **"பூபாள ராகங்கள்"** என்ற கலை விழாவையே சாரும். கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து லண்டன் மாநகரில் நடத்தப்பட்டுவரும் இவ்விழாவின் மூலம் பல பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் "பூபாள ராகங்கள் - 2004"இல் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியப்பணி. "பூபாள ராகங்கள்- 2004" விழாக் குழுவும், 'தினக்குரல்' பத்திரிகையும் இணைந்து உலகளாவிய ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டி வெற்றி பெற்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து பரிசுபெற்ற பதின்மூன்று கதைகளும் "பூபாள ராகங்கள் சிறுகதைத் தொகுதி - 2004" என்ற பெயரில் நூலாகவும் வெளியிடப்பட்டது.

"பூபாள ராகங்கள்" இலக்கியப் பணியில் வெற்றி கொண்ட கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளை, தொடர்ந்தும் தனது "பூபாள ராகங்கள்" கலை விழாவில் சிறுகதைப் போட்டியை நடாத்த தீர்மானித்தது. அதன் பிரகாரம் "பூபாள ராகங்கள் - 2005" விழாக்குழுவும், தினக்குரல் பத்திரிகையும் இணைந்து இரண்டாவது உலகளாவிய சிறுகதைப் போட்டியை நடத்தின. "பூபாள ராகங்கள் - 2005" விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அந்தச் சிறுகதைப் போட்டிக்கு உலகெங்கும் இருந்து 255 கதைகள் வந்து சேர்ந்தன. கடந்த ஆண்டை விட அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொண்டமை மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கலந்து கொண்ட 255 போட்டியாளர்களில் 230 பேர் இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்பவர்கள். ஏனைய 25 பேர் இலங்கைக்கு வெளியே, பல நாடுகளிலும் வாழும் தமிழ் பேசும் எழுத்தார்வம் மிக்கவர்கள். போட்டியாளர்களில் 119 ஆண்களும், 136 பெண்களும் அடங்குகின்றனர்.

விழாக்குழுவால் நியமனமான 6 நடுவர்கள் ஊடாக 20 தரமான கதைகள் தேர்வு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 13 சிறந்த கதைகளுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி முடிவுகள் "பூபாள ராகங்கள் - 2005" விழாவில் அறிவிக்கப் பட்டதோடு, "பூபாள ராகங்கள் - 2005" விழா மலரின் ஊடாகவும், தொடர்ந்து 'ஞாயிறு தினக்குரல்' பத்திரிகை ஊடாகவும் வெளியிடப் பட்டது. ஆனால், எதிர்பாராத விதமாக வெற்றி பெற்ற போட்டியாளர் களில் இருவர் போட்டி விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கொண்டமையால், அவர்களுக்கான பரிசில்கள் ரத்துச் செய்யப் பட்டன. இலக்கிய உலகில் இவ்வாறான தவறுகள் நிகழாமல் இருக்க ஒவ்வொரு எழுத்தாளரும் ஒத்துழைக்க வேண்டும் என வினயமாக வேண்டிக் கொள்கிறேன்.

அதன் பின்னர் மீண்டும் வெற்றியீட்டியவர்களின் விபரங்கள் தர ஒழுங்கின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டு, பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அந்த ஒழுங்கில் வெற்றிபெற்ற 13 போட்டியாளர்களின் சிறுகதைகளையும் உள்ளடக்கி "பூபாள ராகங்கள் சிறுகதைத் தொகுதி - 2005" வெளியிடப்படுகிறது. இரண்டாவது தொகுதியாக வெளிவரும் இம் மலர் எழுத்தார்வம் மிக்கவர்களின் நம்பிக்கையைப் பெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இவ்வாறான சிறுகதைத் தொகுதி காலத்தின் தேவை கருதி தொடர்ந்தும் வெளியிடப்பட வேண்டும் என்பதே எனது அவா. அப்போது தான் தமிழ் இலக்கிய உலகில் "பூபாள ராகங்கள்" என்ற முத்திரை குத்தப்படும்.

"பூபாள ராகங்கள் - 2005" இரண்டாவது உலகளாவிய சிறுகதைப் போட்டியை ஏற்பாடு செய்ய என்னுடன் ஒத்துழைத்த விழாக்குழு உறுப்பினர்களுக்கும், எங்கள் பழைய மாணவர் சங்கத்தை கடந்த எட்டு ஆண்டுகளாக லண்டனில் தலைமை தாங்கி நடாத்தும் தலைவர் திரு.இ.இரகுநாதன் அவர்களுக்கும் இளையவர் களாகிய எங்களை வழிநடத்தும் சங்கத்தின் காப்பாளர்கள் திரு. மற்றும் திருமதி துரைராசா ஆசிரியர்களுக்கும், சிறுகதைப் போட்டிக்கு ஆதரவு வழங்கிய 'தினக்குரல்' பத்திரிகைக்கும், அனுசரணை வழங்கிய FLIGHTSЯUS (UK) நிறுவனத்திற்கும், நடுவர் குழுவில் கடமையாற்றிய லண்டனில் வாழும் எழுத்தாளர்கள் திருமதி மாதவி சிவலீலன், டாக்டர் எஸ்.தியாகராஜா, திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் மற்றும் இலங்கையில் வாழும் திரு.சிதம்பரப் பிள்ளை சிவகுமார், திருமதி வசந்தி தயாபரன், திரு.கே.விஜயன் ஆகியோருக்கும், என்னுடன் போட்டிக்கான இணைப்பாளராய் இணைந்து கொண்ட 'தினக்குரல்' உதவி விளம்பர முகாமையாளர் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் அவர்களுக்கும், போட்டி விதி முறைகளை மீறியவர்கள் பற்றி அறியத்தந்த எழுத்தாளர்களுக்கும் நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அட்டைப் படத்தை கற்பனைத்திறனுடன் அமைத்த ஆர்.பிரசன்னாவுக்கும், இந்நூலை அச்சிட்டு வழங்கிய அச்சகத் தினருக்கும் மிக்க நன்றிகள். குறிப்பாக இந்நூலுக்கு அறிமுகவுரையை அனுமானித்து எழுதித் தந்த கலாநிதி எஸ்.தியாகராஜா அவர்களுக்கு அன்பான நன்றிகள். இதற்கு உதவிய அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

எமது பழைய மாணவர் சங்கத்தால் வெளியிடப்படும் இந்த இரண்டாவது சிறுகதைத் தொகுப்பிற்கும் பதிப்புரை எழுதுவதை பெரும்பாக்கியமாகக் கருதி, அந்தச் சந்தர்ப்பத்தை எனக்குத் தந்த "பூபாள ராகங்கள் - 2005" விழாக்குழுவுக்கு மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

"SELVA SIKARAM",
72,MINTERNE WAYE,
HAYES,
MIDDLESEX,
UB4 0PF,
LONDON,
U.K.

**மகாலிங்கம் சுதாகரன்**
விழா அமைப்பாளர்
"பூபாள ராகங்கள்"
சர்வதேச ஒருங்கிணைப்பாளர்
பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்
கம்பர்மலை வித்தியாலயம்
கொம்மந்தறை
08.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதாசிரியர்கள் பற்றி.....

**தாட்சாயணி** (பக். 01 - 07)

**தொ**ண்ணூறுகளின் இறுதியில் எழுத ஆரம்பித்த தாட்சாயணி குறுகிய காலத்துள் தனது கனதிமிக்க கதைகள் மூலம் விமர்சகர் களின் கவனிப்பைப் பெற்றவர். தனது கதைகளுக்காக அதிகளவில் பரிசுகளையும், விருதுகளையும் பெற்ற இவரது முதலாவது சிறு கதைத் தொகுதியான 'ஒரு மரணமும் சில மனிதர்களும்' ஞானம் 2004 விருதினைப் பெற்று, மணிமேகலைப் பிரசுரமாக வெளிக் கொணரப்பட்டமை குறிப்பிடற்பாலது. மிக விரைவில் கொழும்பு மீரா பதிப்பகத்தினூடாக தனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி யினை அறுவடைசெய்ய உள்ள பிரேமினி சபாரத்தினம் எனும் இயற் பெயரையுடைய செல்வி தாட்சாயணி ஒரு பட்டதாரி ஆசிரியை ஆவார்.

**மு.சிவலிங்கம்** (பக். 08 - 20)

**ப**ல சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களை வென்ற மு.சிவலிங்கம் மலையக எழுத்தாளர்களுள் மிக முக்கியமானவர். 1992ஆம் ஆண்டு இவரது "மலைகளின் மக்கள்" என்ற சிறுகதைத் தொகுதிக்கு அரச சாகித்ய விருதும், விபவி இலக்கிய மன்றத்தின் விருதும், 'தேயிலை தேசம்' என்ற இவரது மொழிபெயர்ப்பு நூலுக்கு 2004ஆம் ஆண்டில் சாகித்ய விருதும் கிடைத்தமை இவரது ஆற்றலிற்கான ஆதாரமாக விளங்குகின்றன.

**சாந்தினி வரதராஜன்** (பக். 21 - 34)

**க**டந்த எட்டாண்டுகட்கு மேலாக எழுதிவரும் சாந்தினியின் பல ஆக்கங்கள் ஐரோப்பிய வானொலிகளிலும், கனடா வானொலியிலும் ஒலிபரப்பானதோடு, ஈழமுரசு, பூவரசு, எரிமலை, காலம், வெளிச்சம், குமுதம், தீராநதி போன்ற பத்திரிகை சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி யுள்ளன. பதிவுகள் இணைய இதழிலும் இவரது பல ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளமையும் குறிப்பிடற்பாலது. தற்போது ஜேர்மனியில் வசித்து வருகிறார்.

**சாரங்கா தயாநந்தன்** (பக். 35 - 42)

**தொ**ண்ணூறுகளின் இறுதியில் எழுத ஆரம்பித்து குறுகிய காலத்துள் கவனிப்பைப் பெற்ற மற்றுமொரு எழுத்தாளரான சாரங்காவின் முதலாவது சிறுகதைத் தொகுதியான 'ஏன் பெண்ணென்று' 'ஞானம் விருது 2003' பெற்று கொழும்பு மீரா பதிப்பகத்தினூடாக வெளிக கொணரப்பட்டது. ஈழத்தின் அநேக பிரசுரகளத்திலும் சாரங்காவின் ஆக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குணாளினி தயாநந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இயற்பெயரையுடைய திருமதி சாரங்கா தற்போது இலண்டனில் வசித்து வருகிறார்.

**ஜுனைதா ஷெரீப்** (பக். 43 - 53)

கடந்த பல வருடங்களாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுவரும் இரத்மலானையைச் சேர்ந்த ஜுனைதா ஷெரீப் எழுதிய இரு நூல்களுக்கு தேசிய/மாகாண சாகித்ய விருதுகள் கிடைத்துள்ளன. சிறுகதை, நாவல், வானொலி நாடகம் ஆகிய பரிமாணங்களில் கணிசமானதும், காத்திரமானதுமான பங்களிப்புகளை இவர் வழங்கி யுள்ளார்.

**சோ.ராமேஸ்வரன்** (பக். 54 - 65)

ஈழத்து எழுத்தாளர்களுள் கணிசமான நூல்களை வெளிக் கொணர்ந்தவர்கள் என்ற பெருமைக்குரிய விரல்விட்டு எண்ணக் கூடிய சிலருள் முக்கியமானவர். இது வரை 14 நாவல்கள், 6 சிறுகதைத் தொகுதிகள், 4 சிறுவர் நவீனங்கள் உட்பட முப்பதுக்கு மேற்பட்ட நூல்களின் சொந்தக்காரர். இவரது சிறுகதை தொகுதிகள்/ நாவல்கள் சில ஆங்கில, சிங்கள மொழிகளிலும் மொழிமாற்றஞ் செய்யப்பட்டுள்ளன. தேசிய சாகித்ய விருது உட்பட பல விருது களையும், பரிசுகளையும் வென்றுள்ள இவர் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் தகவல் வெளியீட்டு உத்தியோகத்தராகப் பணிபுரிந்து வருகிறார்.

**முல்லைமணி** (பக். 66 - 73)

ஈழத்துப் புனைகதைஞர்களில் முல்லைமணியின் பங்கும், பணியும் மிக முக்கியமானவை. தனது கனதிமிக்க நாவல்கள் மூலமும், பண்டார வன்னியன் நாடகம் மூலமும் தனக்கென ஓர் அடையாள த்தை இனங்காட்டியிருப்பவர். தேசிய சாகித்ய, வட கிழக்கு மாகாண மற்றும் வீரகேசரி பத்திரிகையின் விருதுகளை ஒவ்வொன்றும் தலா இரு தடவைகள் பெற்றிருப்பவர். தமிழ்மணி, கலாபூஷணம் உட்பட பல பட்டங்களை தனதாக்கிக்கொண்ட முல்லைமணி, வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் விருதினையும் பெற்றிருக்கிறார். ஐந்து தசாப்தங் களாக எழுதிவரும் முல்லைமணி அவர்களின் பன்னிரு ஆக்கங்கள் இது வரை நூலுருப்பெற்றுள்ளன. அதிபராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து, ஓய்வு பெற்றவர்.

**உமாதரணி** (பக். 74 - 81)

உமாதரணி என்ற புனைபெயரில் எழுதிவரும் உமா பெங்களூரில் வசித்துவருகிறார். சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் மிக்கவர். கல்வி, அமுதசுரபி உள்ளிட்ட இதழ்களில் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் 'தமிழ்நேயம்' அமைப்பு நடாத்திய சிறுகதைப் போட்டியிலும் பரிசு பெற்றுள்ளார்.

**மணிவாசகன்** (பக். 82 - 92)

**பு**னைகதை எழுதுவதில் தீவிர ஆர்வமிக்க மணிவாசகன் இலண்டனில் வசித்து வந்தாலும், தாயக மண்ணில் மிகுந்த ஈடுபாடு உடையவர். மெய்யனுபவங்களையும், பிறர்வாயிலாகக் கேட்டறிந்தவற்றையும் தனது படைப்பிலக்கியங்களில் கலாரீதியாக கூறவல்லவர்.

**இரா.பரமேஸ்வரன்** (பக். 93 - 100)

**கொ**ழும்பு 05, அன்டர்சன் தொடர் மாடியில் வசித்துவரும் இரா. பரமேஸ்வரன் சிறுகதைகள் புனைவதுடன், கட்டுரைகள் எழுதுவதிலும் ஈடுபாடுடையவர். ஈழத்தின் முன்னணி தேசிய பத்திரிகைகள் அனைத்திலும் எழுதியுள்ள இவர் கட்டுரைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் உட்பட பல பரிசில்களை வென்றுள்ளார்.

**அ.நிஷாந்தன்** (பக்.101 - 107)

**ம**ன்னாரில் வசித்துவரும் நிஷாந்தன் சிறுகதை எழுதுவதில் தீவிர ஈடுபாடுடையவர். போர்க்கால அனுபவங்களை மிக அற்புதமாக இவர் தன் கதைகளில் பதிவு செய்யவல்லவர். அதற்கு இத் தொகுதியில் இடம்பெற்ற சிறுகதையே சான்று.

**என்.சொக்கன்** (பக். 108 - 115)

**எ**ன்.சொக்கன் என்ற புனைபெயரில் எழுதும் நாக சுப்பிரமணியன் பெங்களூரில் வசிக்கின்றார். கதைகளை நவீனத்துவத்துடன் எழுதுவதில் ஆர்வம் மிக்கவர். இற்றை வரை சுமார் எழுபத்தைந்து சிறுகதைகளையும், இரு தொடர் கதைகளையும் எழுதியுள்ளார். இரண்டு சிறுகதைத் தொகுதிகள் உட்பட 10 நூல்கள் வெளியாகி யுள்ளன. கனடாவிலிருந்து வெளியாகும் 'காலம்' இதழ் நடாத்திய உலக சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு வென்றவர். ஆனந்த விகடன், கல்கி, அமுதசுரபி உள்ளிட்ட இதழ்களின் சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

**ம.திலகபாமா** (பக். 116 - 120)

**சி**வகாசி மதி மருத்துவமனையில் பணிபுரியும் திலகபாமா சிறு கதைகள் கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம்மிக்கவர். தமிழகத்தின் பெரும்பாலான பத்திரிகை, சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. அதிர்வை ஏற்படுத்தும் சிறு கதைகளைப் புனைவதில் புகழ் பெற்று விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூபாள ராகங்கள் மீட்டுவோர்


*பொறி* 01

தாட்சாயணி

*வட திசைக் காற்று.....* 08

மு.சிவலிங்கம்

*யார்க்கெடுத்துரைப்பேன்?* 21

சாந்தினி வரதராஜன்

*அப்பாவின் நாடு* 35

சாரங்கா தயாநந்தன்

*ஆற்றங்கரை அப்பா* 43

ஜுனைதா ஷெரீப்

*ஒரு விடியல் பொழுதில்.....* 54

சோ.ராமேஸ்வரன்

*வல்லூறும் கோழிக் குஞ்சும்* 66

முல்லைமணி

*அண்ணாச்சிக் கிணறு* 74

உமாதரணி

*அக்கரைப் பச்சை* 82

மணிவாசகன்

*தந்தை மனம்* 93

இரா.பரமேஸ்வரன்

*சொல்லில் எழுதிய வாழ்வு* 101

அ.நிஷாந்தன்

*வியாபாரிகள்* 108

என்.சொக்கன்

*கிணற்று நீர்* 116

ம.திலகபாமா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறி

## தாட்சாயணி

இரவில் அமைதியாய் உறங்கியெழ முடிவதில்லை. இரவு இரைச்சல்களால் நிரம்பியிருக்கிறது. இன்றைய இரவுகளுக்கும், அன்றைய இரவுகளுக்குமிடையே எவ்வளவு வித்தியாசம்.....? எத்தனை பேதம்......? தூக்கமற்ற இரவுகளே விதியென்றானது போல, அமைதியான ஆழ்நிலைத் தூக்கத்தை அணுகுவதில் கூட இத்தனை சிக்கலா.....? முன்பென்றால், சடச்சட...... சடச்சட..... சத்தங்கள்..... கூவி வரும் ஷெல்கள்..... வானத்தில் வீறிடும் விமானங்கள்..... வாகன ரோந்துகளுக்குப் போட்டியாய் ஊளை யிட்டுக் குரைக்கும் நாய்கள்..... இப்போது அதெல்லாம் இல்லை. ஆனால், வேறு விதமான இரைச்சல் பரவியிருக்கிறது இங்கு.

யுத்தம் அற்றுப் போன சமாதான காலம் எவ்வளவு சந்தோஷக் காற்றைச் சுமந்து வந்திருக்கிறது. இழப்புகள், வேதனைகள், இடப்பெயர்வுகள் அனைத்தும் ஓய்ந்து எல்லாரையும் போல நாங்களும்.....

சிணுங்..... சிணுங்..... செல்லிடத் தொலைபேசியின் சிணுங்கல நரேந்திரனின் சிந்தனையைக் குறுக்கறுக்கிறது. மேசையிலிருந்த தொலைபேசியை ஓடிவந்து எடுக்கிறாள் அபிநயா. சட்டென்று அவள் முகத்தில் பிரகாசம்.

“அண்ணீ..... பிரெண்ட்ஸ் எல்லாரும் தியேட்டரிலை ‘திருப்பாச்சி’ பாக்கப் போகீனை..... நானும் போட்டு வாறன்.....”

பதிலுக்கு நிற்காமல் உள்ளே ஓடிப் போன அவள் உடை மாற்றி ஆயத்தமாவதை உணர முடிகிறது.

**முதல் பரிசுக் கதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையைப் புரட்டியபடி இருந்த நரேந்திரன், பத்திரிகையை ஒரு புறம் வைத்துவிட்டு கதிரையில் சாய்கிறான்.

நாலைந்து வருடங்களுக்கு முன் இங்கே. இப்படி ஒரு நிலைமை வருமென்று யாரும் சொல்லியிருந்தால் கூட நம்பி யிருப்போமா என்பதே ஆச்சரியமாக இருந்தது.

திடுமென்று 'சென்ட்' வாசனை தூக்கியடிக்க வெளியே வந்த அபிநயா 'அண்ணா போட்டு வாறன்' என்றவாறே ஸ்கூட்டரை எட்டி உதைத்தாள்.

ஒரு பல்கலைக்கழக மாணவியாக ஸ்கூட்டர், செல்போன், தியேட்டர் என்று அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கின்ற அபிநயா வின் நிலையைப் பார்த்து பெருமைப்படுவதா அல்லது பரிதாபப்படுவதா என்று புரியவில்லை. உலகத்தரத்துக்கு எமது யாழ்ப்பாணமும் வந்துவிட்டது என்று பெருமிதப்படத்தான் வேண்டும். ஆனால்.....? ஆனால்..... இடையில் குறுக்கிடுவது எது.....? உலகின் அதி தீவிர தொழில்நுட்ப வேகம் இன்னும் என்னென்ன மாற்றங்களை இங்கு விதைக்குமோ.....? எமது கலாசார பண்பாடுகள் எந்த அளவிற்குப் போய்விடுமோ.....?

"ஞாயிற்றுக்கிழமை தானை அவள் போட்டு வரட்டுமன்....."

உள்ளேயிருந்து வந்த சுமதி அவனது பார்வையின் போக்கை யுணர்ந்து சொன்னாள்.

"ம்..... ம்..... நான் சொல்லியென்ன நிக்கவா போறாள்....."

இவன் முணுமுணுத்தபடி மீண்டும் பத்திரிகையைக் கையில் எடுத்தான்.

"இளம் பிள்ளையள், இப்ப தியேட்டருக்குப் போகாமல் எப்ப போகப் போகுதுகள்....." சுமதி தன்பாட்டில் திரும்பினாள்.

உள்ளே எதுவோ பொறிந்து விழும் ஒலி சடசடத்தது. ஏணைக்குள் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை வீறிட்டு அழ ஆரம்பித்தது.

"பேந்தும் வநதிட்டுதப்பா எலி....."

சுமதி பதறியவாறே போய்க் குழந்தையை வாரியெடுத்தாள். இவன் வழக்கமாய் எலி விரட்டுவதற்கென்று வைத்திருந்த தடியை எடுத்து மூலை முடுக்குகளில் தாவியோடிய எலியை விரட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலமாக எலிகளுக்கும் இவனுக்கும் இடையே விரோதம் வலுத்திருந்தது. கூரை முகடுகளுக்கிடையே வரிசையாய் பவனி போகும் எலிகள் யாரும் கவனிக்காத தருணங்களில் ஏதேனும் ஒரு குழாயைப் பற்றிக் கொண்டு கீழே இறங்கிவிடுகின்றன. அதற்குப் பின் அவை எதை நாசமாக்குகின்றன என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை. ஒரு நாளைக்கு அரிசிப்பையில் துளை போட்டு அரிசியைக் காலியாக்கி விடும். இன்னொரு நாளில் பருப்பு..... இவையெல்லாம் போதாதென்று, சுமதியுடையதும், அபியுடையதும் சேலைகளைக் கூட தின்று தீர்த்திருக்கின்றன அந்த எலிகள். ஒவ்வொரு சேலையும், எந்தெந்த ரகத்தைச் சேர்ந்தவை என்று சுமதிக்கும் அபிநயாவுக்கும் தெரியுமோ இல்லையோ..... அந்த எலிகள் மட்டும் அவை பற்றி மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றன. அப்படி ஒரு நாள் அபிநயாவுக்கும், அவள் தோழிகளுக்குமிடையே ஒரு சேலை பற்றி வாக்குவாதம் நடந்த போது, அதைத் தீர்த்து வைப்பதற்கான நடுவராக எலியைக் கூப்பிடலாம் என்று அவனுக்குத் தோன்றிற்று.

ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு எதிர்பார்ப்புகளோடு விடியும். ஆனால், இவனுக்கோ, ஒவ்வொரு நாளும், எலிகளுடனான ஒவ்வொரு பிரச்சினையுடனே விடிகிறது. அதேபோல இரவுகளிலும், எலிகளின் தொந்தரவு தாங்க முடியாத தாகிப் போகிறது. அமைதியற்ற இரவு...... இந்த அமைதியின்மைக்குக் காரணம் கூரைமேல் கிறீச்சிடும் எலிகளாகித் தான் போகின்றன. முகடுகளுக்கிடையே கொழுத்து உருண்டோடுகின்ற எலிகளும்...... அவை உருட்டித் தள்ளும் பொருட்களுமாக இரவு அல்லோலகல்லோலப்படும். ஆர்ப்பரித்த இரைச்சலோடு ஒலிக்கும் தொலைக்காட்சியை அபிநயா நிறுத்தி விட்டுப் போன பிறகும் கூட, அடம்பிடிக்கும் தூக்கத்தை சமரசம் செய்து கைப்பிடித்த பின்னும், கூரைகளுக்கிடையே திடுதிப்பென்று உருவாகும் சத்தங்கள் தூக்கத்தைத் தூர விலகச் செய்து விடுகின்றன.

எலிகளின் பெருக்கம், பாம்புகளையும் தேடி வரச் செய்து விட்டது. கொழுத்து விளைந்திருக்கும் எலிகளைத் துரத்தும் பாம்புகளும் இடையிடையே முகட்டோடுகளுக்கிடையில் எட்டிப் பார்க்கும். வீடே காடாகிப் போன உணர்வோடுதான் இரவுகள் நகர்கின்றன.

"நிம்மதியில்லாத சீவியமாய் போச்சுது மனிசருக்கு....." இவனும் எலிகளுமாய் மல்லாடும் சத்தத்தில் குழந்தை உறக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைந்து கத்தத் தொடங்கிவிடும். அதைச் சமாதானப்படுத்துவது வேறு பெரும்பாடாகிவிட்டது. இப்போது எலிகளுக்கிடையே எப்படி சமரசத்தை ஏற்படுத்துவது என்பது தான் தெரியாமலிருந்தது. இத்தனை கால யுத்தம் கூட சில வருடங்களாக சமாதானப் பாதையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இவனும், எலிகளும் சமாதானமாய்ப் போக முடியாதா என்ன.......?

"பூனை ஒண்டு வளத்தா என்ன.....?"

சுமதி எலியினால் பொறுக்க முடியாத ஆக்கினைகள் நேர்கிற போது கேட்பாள்.

பூனையா.....? இவனுக்குப் பூனை என்றாலே அருவருப்பு, எலியைச் சமாளிக்க பூனையை வளர்த்து பிறகு பூனையைச் சமாளிக்க எங்கு போவது.....?

"அதொண்டும் வேண்டாம்..... பாப்பம்....."

இவன் எலிகளை அடிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்தான். பொருட்களை மிகக் கவனமாகப் பூட்டி வைக்கச் சொன்னான். என்ன செய்யலாம் என்று நாள் முழுக்க கடையில இருந்தவாறு யோசித்தான். இவன் யோசித்துக் கொண்டிருப்பதைக் கண்ட சந்திரன் தான் இவனுக்கு அந்த வழியைக் காண்பித்தான். அதற்குப் பின் சற்றுக் கூடத் தாமதிக்காமல் இவன் ஒரு பொறியை வாங்கிக் கொண்டான்.

இனிமேல் இந்த எலிகளோடு இவன் மல்லுக்கு நிற்கத் தேவையில்லை. அவை தாமாகவே தமது மரணத்தைத் தேடிப் போக வேண்டியதுதான். கொஞ்ச நாட்களில் இந்த வீட்டிலிருக்கின்ற எலி வம்சத்தையே பூண்டோடு அழித்துவிடலாம். அடுத்த சில நாட்களில் அவன் எலிகளின் அட்டகாசத்தை ஒரு வித சகிப்புத் தன்மையோடு தாங்கிக் கொண்டான். இனியெப்போதும் இவ்வாறான தொல்லை இருக்கப் போவதில்லை என்பது உள் மனதில் படிவுற்றிருந்தது.

'இன்னும் கொஞ்ச நாட்கள் தானே. நீங்கள் விரும்பிய பாட்டுக்கு ஆட்டம் போடுங்கள்......' என்று அலட்சியமான கர்வத்தோடு, அவற்றை நோட்டமிட்டான். சுயலாபத்தை மீறிய ஒரு சின்ன அனுதாபம் அவன் மனதின் மூலையில் எட்டிப் பார்க்காமலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றொன்றாய் எலிகள் செத்துக் கொண்டு வந்தன. இரவுகளின் தொல்லை குறைந்து கொண்டு வந்தது. ஒவ்வொரு நாளும், காலையில் பொறியில் சிக்கிச் செத்திருக்கும் எலிகளைப் பார்க்கையில் பரிதாபமாய்த் தான் இருக்கும். ஆனால், பரிதாபம் பார்த்தால் கடைசியில் நட்டம் அவர்களுக்குத் தானே. இடைக் கிடையே கூரையிலிருந்து சில பிஞ்சு சுண்டெலிகள் பொத்தென்று கீழே விழும். மென்சிவப்பு நிறத்தில் மிருதுவான தோலோடு அவை தரையில் கிடந்து தவிக்கும். இவன் அவற்றை வெளியே தூக்கி எறிவான். காகங்கள் காத்திருந்தது மாதிரி அவற்றைப் போட்டிக்குக் கொத்திக் கொண்டு பறக்கும். அந்தக் குஞ்சு எலிகள் கொத்திக் குதறப்படுவதைப் பார்த்து சுமதி பரிதவிப்பாள். ஆனால், அதற்காக அவற்றைக் கூரையில் ஏற்றி விட முடியாதென அவன் மனதை இறுக்கிக் கொள்வான்.

இப்போது, எலிகளின் தொல்லை வெகுவாகக் குறைந் திருந்தது. இரவுகளில் கடமுடா சத்தம் இல்லை. குழந்தை இரவு களில் எழுந்து பதறிக் கத்துவதில்லை. எனினும் அவனுக்குத் தூக்கம் வருவதாயில்லை. அளவு மீறிய அமைதியும் பயமாய்த் தானிருக்கிறது.

இப்போதெல்லாம் இரைச்சல் வேறு விதமாய் அமைதியை ஆர்ப்பரிக்கிறது. அது அபிநயாவின் தோழிகள் பட்டாளமாய் வீட்டை நிறைக்கிறது. சீறிக்கொண்டு வரும் ஸ்கூட்டரின் வேகமாய் மனதை உராய்கிறது. செல்போன் கணகணப்பாகி காதுக்குள் நாராசமாய் இரைகிறது. நாள் பூராவும் போடப்பட்டிருக்கின்ற தொலைக்காட்சித் தொடர்கள் கண்களையும், காதுகளையும் திணறடிக்கின்றன. அமைதி எப்போதுமே கிட்டாத சொத்தாகிவிட்டது அவனுக்கு. கடையிலும் கூட வீடியோ கொப்பிகள், சி.டி.க்கள் அடிக்கிற வேலை, பகல் முழுதும் அவற்றிலேயே மூழ்கி வீடு வந்தால் அமைதியைத் தேடும் மனம். வீட்டிலும் இரைச்சல் என்றால் என்னதான் செய்ய முடியும்.....!

அன்று ஒரு கல்யாண வீட்டு விசேஷத்தை சி.டி.யில் அடித்துக் கொண்டிருந்த போது சிலர் உள்ளே நுழைந்தார்கள். ஆயுதங் களுக்குப் பழக்கப்பட்டவர்கள் என்பது அவர்களுடைய சீருடையில் தெரிந்தது.

போர் ஓய்ந்த சூழ்நிலையில் கூட உள்ளூர அந்த சீருடை களின் மீதான பயம் இன்னும் போகவில்லைத்தான். இது வரைக்கும் அவனது கடைக்கு அவர்கள் வந்து போனதில்லை. இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக.....? அவனது யோசனை தெளியுமுன் வந்தவர்களில் ஒருவன் "நூறு சி.டி.அடிச்சுத் தரோணும்" என்றவாறே தன்னிடமிருந்ததை அவனிடம் கொடுத்தான். மறு நாள் வருவதாய்ச் சொல்லி விட்டு அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். இவன் செய்து கொண்டிருந்த வேலையை முடித்துவிட்டு, அதை எடுத்தான். சற்று நேரத்துக்குள் அவன் மனது அதிர்ச்சியில் உறைந்தது. அவன் கையிலிருந்தது நீலப்படம். இது நூறு பிரதி அடித்து அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இங்கே தானே, எனது மண்ணில் தானே இதை விநியோகிக்கப் போகிறார்கள்.

அடுத்த நாள் அவர்கள் வந்த போது அதை அவன் அப்படியே திருப்பிக் கொடுத்தான்.

"இதுகள் நான் அடிக்கிறேல்லை" என்றான்.

"கூடக் காசு தாறது......" என்றான் அவர்களில் ஒருவன்.

"இல்லை நான் அடிக்கிறேல்லை. உதுகள்....."

அவர்கள் முகத்தில் ஊறிய வெறுப்பை இனம் காணாத மாதிரி மெல்ல விலகினான். வந்தவர்களில் ஒருவன் கேலியாய் சிரித்தான்.

"இது அடிக்கிறதுக்கு எத்தினை பேர் இருக்கீனம் இஞ்சை..... இந்தக் காசுக்காக......" நோட்டுக்கற்றைகளை நீட்டிக் காட்டினான் அவன். அவர்கள் கையில் ஆதிக்கமும், பணமும் இருக்கும் வரை, அவர்களின் நோக்கத்தைத் தடுத்து விட முடியாது என்பது தெரிந்தே இருந்தது. இவன் மறு புறமாய் முகத்தைத் திருப்பினான்.

"ஏற்கனவே, இது பள்ளிக்கூடப் பிள்ளையளிட்டைப் போய்ச் சேர்ந்திட்டுது." இவன் மறுத்த போது ஏற்பட்ட கோபத்தை இளக்காரமாக மாற்றி வெளியேற்றி விட்டு அவர்கள் நகர்ந்த போது இவனுக்குத் தலை சுற்றியது.

போர் ஓய்ந்துவிட்டது என்று தானே நினைத்தோம். போர் ஓய்ந்துவிட்டாலும், இன்னொரு பக்கமாய் தொடர்கின்ற இந்தக் கலாசாரத்திற்கு எதிரான போரில் எமது இனம் தோற்றுவிடுமா.....? இவ்வளவு காலம் போரினால் ஏற்பட்ட அழிவைக் காட்டிலும் மோசமான அழிவுகள் இனிமேல் தான் ஏற்படுமா.....? வீட்டுக்குப் போன போது அபிநயா நண்பிகளுடன் தொலைக்காட்சி பார்த்துக் கலகலத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இனி எது வரைக்கும் போகக்கூடும். அறிவியல், முன்னேற்றம் என்று வளர்ந்து கொண்டிருக்கும் இவளுக்குள் தடுமாற்றங்களை ஏற்படுத்தி விடுதல் மிகச் சுலபமா.....? இவள் போன்ற இளம் சமுதாயத்தினர் மூலம் ஏற்படப் போகின்ற கலாசாரப் பின்னடைவுகளை சீர் செய்யவே முடியாதா.....?

சோர்வாய் கண்ணை மூடி விழித்த போது ஓரமாய் இருந்த எலிப்பொறி கண்ணில் பட்டது. இப்போது கூரையில் எலிகள் இல்லவே இல்லை. எல்லாமே வந்து பொறிக்குள் மாட்டிவிட்டன.

சண்டை போட்டு அவற்றை வெல்ல முடியவில்லை. கெட்டித் தனமாய் அவற்றைப் பொறியில் மாட்டியாகிவிட்டது. இப்போது எந்தத் தொல்லையும் இல்லை. மனதைக் கரித்துக் கொண்டு கண்ணீர் எட்டிப் பார்த்தது.

என்ன மாதிரி கண்ணுக்குத் தெரியாத பொறியை ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அவர்கள். சண்டை நடந்து கொண்டே இருந்திருக் கலாம். நேருக்கு நேராக மோதல் நடந்திருக்கும். இப்போதோ சமாதானம் என்ற பெயரில் ரகசியமாய் பொறி வைக்கப்பட்டிரு க்கிறது.

எலிகள் பொறிக்குள் சிக்கும். நான் எலியல்ல. ஆனால் எல்லாரும் எலி அல்ல என்று சொல்ல முடியாமல் அல்லவா இருக்கிறது நிலைமை.

அவனுக்குள் சொல்ல முடியாத ஆத்திரம் கனன்றெழுந்தது. அந்தப் பொறியைப் பார்க்கும் போது மனதுள் எரிச்சல் மண்டியது. "இனிமேல் இது இஞ்சை வேண்டாம்...." எடுத்து வெளியே எறிந்தான்.

மேலேயிருந்து இரண்டு எலிக்குஞ்சுகள் வந்து விழுந்தன. மென்சிவப்பு நிறத்தில் துடித்துக் கொண்டிருந்த அந்த எலிக் குஞ்சுகளைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

"காகம் கொத்தப் போகுதப்பா....." வீறிட்ட மனைவியைப் பார்த்து அமைதியாய் புன்னகைத்தான்.

மேசையை ஒதுக்கி எலிக்குஞ்சுகளைத் தூக்கியபடி ஏறினான். மேற்சுவர் விளிம்பில் அந்த எலிக் குஞ்சுகளை வைத்தான்.

இறங்கிய போது மனம் இலேசாகியிருந்தது. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட திசைக் காற்று.....

## மு.சிவலிங்கம்

பதினாறு வருசங்களுக்குப் பிறகு அந்தக் கைதியை விடுதலை செய்தார்கள். பத்தொன்பது வயதில் கைது செய்யப்பட்டு இன்று முப்பத்தைந்து வயதில் வெளியே வருகிறான்.

அவன் நிரபராதி என்று கூட நீதிமன்றம் சொல்லவில்லை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் வழக்கு மன்றம் இவன் மேல் சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை என்ற உண்மையை பதினாறு வருசங்களுக்குப் பிறகே கண்டு பிடித்தது!

பதினாறு ஆண்டுகளில் ஒவ்வொரு இருட்டறைக் கட்டிடத்துக்குள் அவன் மாறி மாறி அடைக்கப்பட்டிருந்தான். "அந்தக் கொலையைச் செய்தது யார்? அந்தப் பாலத்தைத் தகர்த்தது யார்? அந்த வங்கிக் கொள்ளைப் பணத்தை என்ன செய்தாய்? உனது கூட்டத்து பெயர்களையெல்லாம் சொல்லு..... இன்னும் வேறு என்ன திட்டங்கள் இருக்கின்றன? உயிரின் மேல் ஆசையிருந்தால் எல்லா உண்மைகளையும் சொல்லு....."

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் தெரியாத அந்த அப்பாவி இளைஞனை எப்படியெல்லாம் சித்திரவதை செய்தார்கள்! அவனது சகாக்களில் உடல் ஊனமாகி..... மனமும் ஊனமாகி பைத்தியம் பிடித்து இறந்தவர் சிலர்..... இன்னும் அதே நிலைமையில் வாழ்பவர் பலர்.

பதினாறு வருசங்கள் ஒரு மனிதனின் வாழ்க்கையைத் தனிமைப்படுத்தி உடல், மனரீதியில் துன்புறுத்தி அவனது

**இரண்டாம் பரிசுக் கதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாபாசங்களை உணர்வு, உணர்ச்சிகளை ஒடுக்கி மிஞ்சிய காலத்தில் ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாதவாறு அவனை ஊனமாக்கி சமூகத்துக்குள் அனுப்பி வைக்கும் ஒரு நாட்டின் சட்டம் செய்யும் குற்றத்துக்கு எந்த நீதிமன்றம் விசாரணை செய்யும்? எந்த நீதிமன்றம் தண்டனை வழங்கும்?

"ராஜகுமாரன்!" ஒரு சிங்கள சிறைக்காவலன் சத்தமிட்டு அழைத்தான். ஏனைய சிறைக்காவலர்கள் கிண்டலாகச் சிரித்தார் கள். "தமுசே ராஜகுமாரயாத? கொய் தேசய ராஜகுமாரயா? ஈழாம்த?" (நீ ராஜகுமாரனா? நீ எந்த நாட்டு ராஜகுமாரன்? ஈழநாட்டு ராஜகுமாரனா?) என்று பல்லிளித்தார்கள். ராஜகுமாரனும் மனதுக்குள் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டான். எனக்கு ஏன் அப்பா இப்படிப் பெயர் வைத்தார்? ஜோசியர் நட்சத்திரம் பார்த்து "ரா"வில் பெயர் தொடங்க வேண்டுமாம். ராஜ்குமார் என்று சரி, பெயர் வைத்திருக்கலாம்.

அந்தச் சிறைக் காவலர்கள் கூட்டத்தில் ஒருவனுக்கு மட்டும் கொஞ்சம் இதயம் இருந்தது. அவனும் மனித இனத்தைச் சேர்ந்த வனாகையால் அந்த இயல்பு கொஞ்சம் இருந்தது. ராஜகுமாரனை தலைமைச் சிறைக்காவல் அதிகாரியிடம் அழைத்துச் சென்றான். இடைவழியில், "கமட்ட கிஹிலா பரிசமே இன்ட்ட ஜொப் எக்கக் ஒயாகென ஹொந்தட்ட ஜீவத்வென்ன" (ஊருக்குப் போய் கவனமாக இருங்க. ஒரு தொழிலைத் தேடிக்கொண்டு நல்ல முறையா வாழப் பாருங்கள்) என்று ராஜகுமாரன் முதுகைத் தட்டினான்.

இன்று ராஜகுமாரன் வீட்டுக்குப் போகும் நாள்.

சிறைக்கூடத்திலிருந்து, வெளியுலகத்தைக் கண்கள் அகல விரித்துப் பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு தொலைதூரம் வரை பார்வையைச் செலுத்திப் பார்க்கும் நாள் வந்துவிட்டது.

ராஜகுமாரன் தனது உடைமைகளை அந்தப் பொலித்தீன் பைக்குள் அடைத்து வைத்திருந்தான். சீப்பு, பற்பசை, பிரஷ், இரண்டு சாரம், ஒரு கிழிந்த டவல், குடும்பத்திலிருந்து வந்திருந்த கடிதக்கட்டுக்கள், சிறையில் ஞாபகத்துக்காக வைத்திருந்த சின்ன வயதில் அம்மா, அப்பா, தங்கச்சியோடு பிடித்த ஒரு சிறிய குடும்பப் படம்.....

அவனது பதிவேட்டில் அந்தக் காவல் நிலைய தலைமை அதிகாரி ராஜகுமாரனை கையொப்பமிட்டுப் போகச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து நிமிடம் வரை போதனை செய்தார். ஆமி, பொலிஸ் படைகளின் சந்தேகத்துக்கு ஆளாகாமல் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும்படி புத்திமதி கூறி அனுப்பினார்.

ராஜகுமாரனுக்கு மனம் கொதித்தது. தமிழனின் தலைவிதி யையும், அவனது ஆயுளையும் ஒரு சிங்கள ஆமிக்காரனும் ஒரு பொலிஸ்காரனுமே நிர்ணயிக்கிறார்கள்.

அவர்கள் நினைத்தால் கொன்று போடலாம். ஆயுள்காலம் வரை சிறையில் அடைக்கலாம். தட்டிக் கேட்பதற்கு தேசிய பாதுகாப்போ சமூகப் பாதுகாப்போ கிடையாது.....

"நீதிமன்றத்துக்கு யாரும் வந்து அலைய வேணாம்..... என்னய கூட்டிக் கிட்டுப் போக நீங்க மட்டும் வந்தாப் போதும்" என்று அவனைப் பார்க்க வந்திருந்த மச்சான் வாசுவிடம் கேட்டுக் கொண்டான்.

அவனுக்கு இப்போது இருக்கின்ற சொந்தபந்தமெல்லாம் தன்னோடு கூடப்பிறந்த தங்கச்சி மீனாவும் அவளைக் கல்யாணம் முடித்த மச்சான் வாசுவுமே மிஞ்சி உள்ளார்கள்.

"ராஜ்குமார்! இந்தா புது செருப்பு..... பழச வீசு..." அவனை அழைத்துச் செல்ல பதுளையிலிருந்து வாசு மச்சான் வந்திருந்தான். அவன் புதுச் செருப்புக் கொண்டு வந்திருந்தான். புதுச் செருப்பை மாட்டிக் கொண்டு தன்னோடு நீண்ட காலம் 'துணையாய்' இருந்த அந்தப் பழைய இறப்பர் சிலிப்பரை வீச மனம் வராமல் கடதாசியில் சுற்றி பொலித்தீன் பைக்குள் வைத்துக் கொண்டான்.

இருவரும் பஸ் நிலையத்துக்கடையில் பிளேன் டீ குடித்து விட்டு கோட்டை புகையிரத நிலையத்துக்குச் செல்லும் பஸ் வண்டியில் ஏறினார்கள்.

கூட்டுக்குள்ளேயே அடைபட்டு குறுகிப் போய் இருந்த உடலை, மனதை சுத்தமான காற்று..... பரந்து விரிந்த நிலப்பரப்பு அவனை இன்ப உலகிற்கு அழைத்துச் சென்றது..... "மச்சான்! நான் ரொம்ப சந்தோசமாக இருக்கேன்.....! வீட்டுக்குப் போனதும் தோட்டத்து ரோட்டுல மைல் கணக்கா ஓடிக்குதித்து ஆடனும் போல இருக்கு!" அவனது மனித மனம் குதூகலித்தது.

அவர்கள் இருவரும் அந்த சைவக் கடையில் இடியப்பம் சாப்பிட்டார்கள். கையில் இருந்த சில்லறையில் தங்கச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராபூந்தி, தொதல், குழந்தைக்கு ஜூஜூப்ஸ் யாவும் வாங்கி ஆசையோடு மச்சான் கையில் கொடுத்தான்.

கோட்டை புகையிரத நிலையத்தில் முதலாம் மேடையில் பதுளை 'உடரட்ட மெனிக்கே' நின்றது..... இப்போது 'ஸ்ரீபாத சீசன்' இல்லை. மரியாதையான கூட்டங்கள் உட்கார்ந்திருந்தன. இருவருக்கும் ஜன்னல் ஆசனம் கிடைத்தது.

ராஜகுமாரனுக்கு பழைய நினைவுகள் வந்தன. பதினாறு வருசங்களுக்கு முன்பு பொலிஸ் பிடிப்பதற்கு முதல் வாரத்தில் கொழும்புக்கு வந்து இதே நேரம்..... இதே வண்டியில்...... அன்றைக்கும் ஜன்னல் ஆசனத்தில் உட்கார்ந்து உடரட்ட மெனிக்கேவில் பதுளைக்குப் பயணம் செய்தான்.

"கண்ணு மண்ணு தெரியாம ஆமிக்காரனும் பொலிஸ் காரனும் தோட்டத்து தமிழ் எளந்தாரிகளையெல்லாம் 'புலி புலி'ன்னு புடிச்சிக்கிட்டு போரானுங்க..... நம்ம தம்பிக்கு இதுக்கு மேல படிப்பு வேணாம்..... அவன கொழும்புக்கு, அந்த நகைக்கட வேலைக்கு அனுப்பி வைச்சிருவோம்" என்று அவனது அப்பாவும், அம்மாவும் அவசர அவசரமாக கூடிப் பேசி அவனை செட்டித் தெருவில் ஒரு நகைக்கடையில் வேலைக்கு அனுப்பி வைத்தார்கள். வேலை கிடைத்துவிட்டது. உடுப்புத் துணிகளை எடுத்து வர வீட்டுக்குச் சென்றான்.

பல்கலைக்கழகத்திற்கு ஒரு 'பீ', இரண்டு 'சீ' போதாதென்று இரண்டாவது முறை பரீட்சைக்குத் தயார் செய்து கொண்டிருந்த போது தான் அந்த விருப்பமில்லாத வேலை கிடைத்தது. "வேலைக்குப் போக முடியாது. ஏ.எல். டெஸ்ட்டு எழுதிவிட்டு வேலைக்குப் போறேன்பா....." என்று அப்பாவிடம் கெஞ்சினான். "டெஸ்ட்டுக்கு இன்னும் ஒரு மாசந்தானே..... கடையிலே சொல்லி வையுங்க....!" என்று அம்மாவும் ஆதரவு காட்ட, அப்பா ஒத்துக் கொண்டார். அடுத்த வாரம் தான் அந்த ஆபத்து நடந்தது.....

பதுளை நகரில் டியூஷன் வகுப்பை முடித்துக் கொண்டு வரும் போது..... இரவு நேரம் எட்டு மணி..... கடைசி பஸ்ஸூம் போய்விட்டது..... வேகமாக நடந்தான். மழைத் தூறலில் கொப்பி நனையாமல் இருக்க சட்டைக்குள் செருகிக் கொண்டு பொத்தானைப பூட்டிக் கொண்டு வேகமாக நடந்தான்.

பதுளை நகரிலிருந்து கதிர்மலை தோட்டத்துக்கு உயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப்பாதையில் நடக்க வேண்டும். மலை உச்சியில் தோட்டம் இருக்கின்றது. தோட்டத்தின் ஓரம் வானத்தை முட்டிக் கொண்டிருக்கும் பல உச்சி மலைகள் அழகாகவும் பயமாகவும் காட்சி தரும். தமிழனுக்கு அங்கே மட்டும் தேயிலைச் செடியை நாட்ட முடிய வில்லை! வெள்ளைக்காரன் முயற்சி பண்ணியிருப்பான். முடியாமல் போயிருக்கும்.

ராஜகுமாரன் வீட்டுக்குச் சென்றதும் அம்மா அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதாள். பொலிஸூம், ஆமி ஜீப்பும் இரண்டு முறை அவனைத் தேடிவந்து விட்டு சென்றதாகச் சொன்னாள். "சாமி! இப்பவே இந்த சாமத்திலேயே பணிய டிவிஷனுக்கு ஓடிப் போயி ஒளிஞ்சிக்கப்பா" என்று கெஞ்சினாள்.

"வேணாம் பாப்பாத்தி! புள்ளைய ஒளிய வச்சா சந்தேகப்படவானுங்க..... பேசாம வீட்டுல இருக்கட்டும். நம்ம புள்ள என்னா குத்தம் செஞ்சான்..... பயந்து ஒளியிறதுக்கு....?" என்று அப்பாவும் சொன்னார்.

மறு நாள் விடிந்தது.

வாரத்தில் ஆறு நாட்களும் 'மாவு ரொட்டி'? ஞாயிற்றுக் கிழமை மாத்திரம் அரிசித் தோசை..... அரிசிப் பிட்டு..... இட்டலி கிடைக்கும். இந்த ஞாயிற்றக்கிழமை அம்மா இட்டலி அவித்து..... சட்னி..... பருப்பு சாம்பார் வைத்திருந்தாள்.

காட்டுப் பீலியில் குளித்து விட்டு வந்தவன் "அம்மா! பத்து மணியாயிருச்சி..... பசி வயித்தக் கிள்ளுது" என்று வீட்டுக்குள் நுழைந்தான். அம்மா சாப்பாட்டை எடுத்து வைத்தாள். 'இன்னிக்கு இட்லி பஞ்சு மாதிரியிருக்கு! சில நேரம் கல்லு மாதிரியிருக்கும்' என்று மனதுக்குள் பேசிக் கொண்டிருந்தவன் மூன்று இட்லியை எடுத்து வைத்துக் கொண்டு சாம்பாரை ஊற்றினான். வேட்டை நாய்கள் ஓடிவருவதைப் போல வீட்டுக்குள் பொலீஸ்காரன்கள் ஐந்தாறு பேர் நுழைந்தார்கள். வீட்டுக்கு மேல் ரோட்டில் ஆமி ஜீப் நிற்கின்றது. வெறும் மேலோடு இருந்த ராஜகுமாரனை "'ஓய் கமிசய தாகன்னவா....." (ஓய் சட்டையைப் போடு.....) என்று ஆத்திரத்துடன் ராஜகுமாரனை ஒருவன் இழுத்தான். ஒருவன் அவனை முதுகில் குத்தினான். நடக்க மறுத்த ராஜகுமாரனை ஒருவன் உதைத்தான். மாறி மாறி பொலிஸ்காரன்கள் அந்த அப்பாவியை அடித்து உதைக்கும் போது..... ஆவேசம் கொண்டு அழுத அம்மா..... மாரடைப்பால் மயங்கிவிழ..... அவன் திமிற.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மரணமடைந்து விட்டாளோ என்பதைக் கூட தெரிந்து கொள்ளவிடாமல் ஜீப்புக்குள் தள்ளிக் கடத்திச் சென்றார்கள்.

தள்ளாத வயதையும் பார்க்காமல் அப்பா நொண்டி..... நொண்டி..... ஜீப் வண்டியின் பின்னால் ஓடி வந்து..... அவன் பார்த்திருக்க அந்தப் பாதையில் விழுந்த காட்சி..... ஒரு மாதம் சென்ற பிறகுதான் அம்மா அன்றைக்கு அந்த இடத்திலேயே இறந்து போன செய்தி அவனுக்குத் தெரிய வந்தது.

அப்பா பூசா சிறைக்கு வந்து என் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொள்ள முயற்சித்தார். முடியவில்லை. எங்கள் இருவருக்குமிடையில் நீண்ட மேசை, தடையாகப் போடப்பட்டிரு ந்தது. அவர் குழந்தையைப் போல கேவிக் கேவி அழுதார். அவனும் அப்பாவைக் கட்டிப்பிடித்துக் கதற ஆவேசம் கொண்டான். முடியவில்லை. சட்டம் அதற்கும் தடை செய்து கொண்டிருந்தது. ஒவ்வொரு மாதமும் அப்பாவும் வாசு மச்சானும் வந்து போனார்கள். அப்பா இப்படி..... ஐந்து வருசங்கள் வந்து போனார்.

ஒரு மாதம் மச்சான் மாத்திரம் வந்தார். "மாமாவுக்கு ஒரு மாசமா உடம்பு சரியில்லை" என்று இழுத்தார். அடுத்த மாதம் வந்து அதே மேசைக்கு அந்தப் பக்கம் நின்று கைகளை எட்டி என் விரல்களைப் பிடித்துக் கொண்டு "மாமா செத்து கருமாதியும் முடிச்சிட்டோம்" என்று கதறினார். நான் வாய்விட்டுக் கதறியழ ஜெயில் கார்ட் மேசையை ஓங்கி அடித்தான். அழுகையை நிறுத்திக் கொண்டு ஆறுதலாக விபரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே 'வெலாவ ஹறி!' என்று என்னை உள்ளே அனுப்பி மச்சானை வெளியே போகும்படி ஒரு கார்ட் சத்தமிட்டான்.

தங்கச்சி கட்டிக் கொடுத்த புளிச்சோறும் வடைப் பார்சலும்..... ஜெயில் கார்ட் கிண்டிக் கிளறி.... 'கைக்குண்டு', 'தற்கொலை மருந்து' எல்லாவற்றையும் அந்த உணவுக்குள்ளே தேடி விட்டு என்னிடம் கொடுத்தான்.

உடரட்ட மெனிக்கே..... நாவலப்பிட்டி வந்து விட்ட குளிரை உணர்த்தியது..... மனம் குதூகலித்தது..... மலைநாட்டுக்குள் வண்டி நுழைந்து விட்ட உணர்வு..... வீட்டுச் சூழலை நெருங்கி விட்ட மண் வாசனை..... அவன் அப்பா, அம்மா புதைக்கப்பட்டிருக்கும் சுடுகாட்டுக்குச் சென்று குளிமேட்டைத் தேடி அங்கே..... கொஞ்ச நேரம் அவர்களுக்கிடையே படுத்துத் தூங்க வேண்டும்... மச்சான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமாக இருந்ததால் அப்பா, அம்மா புதைகுழிகளில் அடுத்த பிணங்களைப் புதைக்க விடாமல் மாமரம், கொய்யா மரங்களை வளர்த்து விட்டிருந்தார்.

வண்டி அட்டன் வந்து விட்டது..... கொழும்புக்கும் பதுளைக்கும் இடையில் அட்டன் சிங்கமலை சுரங்கமே நீளமான சுரங்கமாகும்..... அடுத்து, கொட்டகலை, தலவாக்கலை.... தலவாக்கலையிலிருந்து பதுளை வரை ஒரே ஏற்றம்..... நானுஓயா வந்துவிட்டது. அம்பேவலை, பட்டிப்பொலை, ஒஹிய வரையில் ஒரே குளிராக இருக்கும்.....

ராஜகுமாரன் வாசுவின் மடியில் படுத்துக் கொண்டான். அவன் தலையை வருடினான் வாசு..... தலை முழுவதும் தழும்பு..... சொட்டை சொட்டையாக முடி..... பிடரியில் தழும்பு..... சித்திர வதையின் அடையாளங்கள்..... இனவாதிகள் இன்னொரு இனத்தை எவ்வளவு கொடூரமாக வதைக்கின்றார்கள். ராஜகுமாரன் எந்தவித தீவிரவாத செயல்களிலும் ஈடுபடவில்லையே..... தமிழன் எல்லாருமே சிங்களவன் கண்களுக்கு தீவிரவாதிகள்..... பயங்கரவாதிகள்..... இந்த நிலை நீடித்தால் என்றைக்கு சமாதானம் வரும்....? என்றைக்கு சகவாழ்வு பிறக்கும்.....? ஏக்கத்தோடு வாசு..... ராஜகுமாரனை குழந்தை போல் அணைத்துக் கொண்டான்.

ஒரு இனம் இன்னொரு இனத்தை ஒடுக்கினால் அது இனவாதம்..... அந்த ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தால் அது தேசாபிமானம்..... பாவம் வாசு! ஆழமான அர்த்தங்களை அவனால் புரிந்து கொள்ள முடியாது.

அம்பேவல ஸ்டேஷன் வந்தது.....

பொழுது புலர்ந்து பனி மூட்டங்களுக்கிடையில் கருத்தக் காட்டு மரங்கள் தெரிந்தன..... ஆங்காங்கே அசோக மரத்துப் பூக்கள் இரத்தச் சிவப்பாக அழகைக் கொட்டிக் கொண்டிருந்தன.....

ராஜகுமாரனை எழுப்பினான் வாசு.....

"ஒன்பது ஒன்பதரைக்கு பதுளைக்கு போயிடலாம்......"

பதினாறு வருசங்களுக்குப் பிறகு..... மறுபிறவி எடுத்தவனாக அவன் சொந்த மண்ணில்..... இல்லை..... இல்லை..... பிறந்த மண்ணில் காலடி வைக்கப் போகிறான்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஹியா ஸ்டேசனை கடந்த பிறகு பதுளை செல்லும் வரை எத்தனை எத்தனை குட்டிச் சுரங்கங்கள்.....? ரயில் பாதைகள் அமைத்தவர்கள் எல்லோரும் இந்தியத் தமிழ் தொழிலாளிகள்..... பிரிட்டிஷ்காரர்கள் அவர்களை தென்னாட்டிலிருந்து அழைத்து வந்து..... நாடு முழுக்க ரயில் பாதைகள் அமைத்த வரலாற்றை அழித்துவிட முடியாது.......

## பதுளை

சந்திக்கடையில் பிளேன்டீ குடித்துவிட்டு வேன் அயர் பண்ணிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். கதிர்மலை தோட்டத்துக்குப் போகும் பாதை உயர்ந்த மலைப்பாதை........ தோட்டம் வந்துவிட்டது..... அப்பா ஆமி ஜீப்பின் பின்னால் ஓடிய பாதையைக் கடந்து..... லயத்து ஓரம் வேன் நின்றது..... அம்மா விழுந்த இடம்..... இறந்த இடம்..... தங்கச்சி ஓடி வந்து அண்ணனைக் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்து அழுதாள்..... அவளைத் தேற்றி..... தூரத்து அத்தை வாஞ்சையோடு ராஜ்குமாரை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள்.

ஊர் கூடி விட்டது..... கேள்வி மேல் கேள்வி..... அனுதாபம்..... சந்தோசம்..... எல்லாம் ஒன்று கலந்தன..... கூட்டம் கலைந்தது..... ராஜகுமாரனுக்கு குளிப்பதற்கு தங்கச்சி வெந்நீர் வைத்திருந்தாள். 'பெரல் தண்ணி' கொதித்துக் கொண்டிருந்தது. சிறைச்சாலை தீட்டு..... நோய் நொடியெல்லாம் தொலையணும்..... அண்ணனுக்கு மஞ்சள் பூசிக் குளிப்பாட்டினாள் தங்கை.

ராஜகுமாரனுக்காகவே ஒதுக்கி வைத்திருந்த நாட்டுக் கோழியை வாசு 'துப்பரவு' செய்து குண்டான் சட்டியில் மூடி வைத்திருந்தான்.

அன்று இரவு.

அந்த சின்னஞ்சிறு குடும்பம் கூடிக் கதைத்தது. தங்கச்சி மீனா..... மச்சான் வாசு..... ராஜ்குமார்...... சாப்பிட்டுக் கொண்டே கதைத்தார்கள். "அண்ணனுக்கு பொண்ணு பார்த்து வச்சிருக்கேன்.....!! அருமையான புள்ள..... அப்பா, அம்மா, அண்ணன், தம்பி எல்லாரும் இருக்காங்க..... அண்ணன் வேலை தேடி வெளியே போகணும்னு அவசியம் இல்ல. கடலுமாதிரி தோட்டம் இருக்கு. மரக்கறி போட்டுக் கிட்டு மாடு ரெண்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிச்சிக்கிட்டா போதும்..... இன்னும் கொஞ்ச நாளைக்கு மட்டும் நானும் மச்சானும் கூலி வேல செய்வோம்..... அப்புறம் சுதந்திரமா..... வறும இல்லாம செல்வாக்கா வாழலாம்......" தங்கச்சி பொரிந்து தள்ளினாள்.

"ஆமா..... ராஜ்குமாரு.....! நீ வந்தது எனக்கு தொணையாப் போச்சு....! இனிமே நமக்கு நல்ல காலம்..... நீ குடும்பமாகணும்..... தமிழனா..... தனி ஆம்பளையா..... இருந்தாத்தான் ஆபத்து வரும். இனி ஒரு நாயும் நம்மளை எட்டிப் பாக்காது!" என்றான் வாசு. எஞ்சிய சில காலங்களை தங்கச்சி குடும்பத்தோடு வாழ்ந்து விடவும்..... பழைய நண்பர்களோடு மீண்டும் சேர்ந்து வாழவும் ஆசைப்பட்டான். கலியாணம்..... தாம்பத்திய வாழ்க்கை....! அவனுக்கு சிரிப்பாக இருந்தது. உடல் முழுவதும் ஊனமாக்கப்பட்ட நிலையில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் எவளோ ஒரு பெண்ணை விதவையாக்கி விட அவன் விரும்பவில்லை.

"சித்திரத்தில் வரைந்த தமிழனையும் நம்பாதே!" என்ற ஒரு சிங்களப் பழமொழி இருக்கின்றது. "ஒரு பக்கம் கடலும் மறுபக்கம் தமிழனும் இருக்கும் போது நான் எப்படி நீட்டி நிமிர்ந்து படுப்பேன்.....?" என்றானாம் துட்டகைமுனு ராஜா. இந்த குரூரத்தன்மை ஆழமாக சிங்களவர் மத்தியில் வேரூன்றிவளரும் போது...... கண்ணில் தெரிகின்ற தமிழர்கள் எல்லாம் எதிரிகளாக நாட்டைப் பிடிக்கும் தமிழனாக...... ஒரு பீதி பயந்து பயந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. வடக்கையும் கிழக்கையும் அங்குள்ள தமிழன் பிடிக்க..... இங்கே மலைநாட்டை இவன்கள் பிடிக்க..... நாடு நாலாய் பிரிந்து..... சிங்களவன் கடலுக்குள் வீழ்வதா.....? இதுவே இன்றைய அரசியல் பயமுறுத்தல்..... இந்த பயமுறுத்தலின் அடித்தளத்திலிருந்தபடியேதான் தமிழர்கள் வேட்டை யாடப்படுகின்றனர்.

ராஜகுமாரன் என்ற ராஜ்குமார் விடுதலையாகி வந்து..... இன்றோடு பத்து நாட்கள்.....

அவன் எங்கே போகிறான்....? யாருடன் பேசுகிறான்....? அவனது நடவடிக்கைகள் எப்படி இருக்கிறது....? என்பதை நோட்டமிட்டுக் கொண்டு சி.ஐ.டி. அவனைச் சுற்றிச் சுற்றி வரத் தொடங்கியது. அவனைத் தோட்டத்தில் சும்மா வைத்திருப்பது ஆபத்து என்பதை வாசு உணர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ்குமாரை பதுளை நகரில் தனக்குத் தெரிந்த ஒரு தேநீர்க் கடையில் வேலையில் அமர்த்தினான். ராஜ்குமார் டீ கடை மேசையும் சமையல் அறையுமாக ஒரு மாதத்தை ஓட்டினான்.

ஒரு நாள் தேநீர்க்கடை முதலாளியை பொலிஸ் அழைத்து..... "16 வருசம் சிறையிலிருந்து வந்த புலியை வேலைக்கு வைத்திருக் கிறாய்! நீயும் வெடி வைக்கப் போகிறாய்..... நாடு பிரிக்கப் போகிறாய், என்று உள்ளே தள்ளிப்போடுவோம்....! புலியை விரட்டி விடு" என்றது.

ராஜகுமாரன் மீண்டும் வீட்டுக்கு வந்து அண்டினான். அவனது நண்பர்களைச் சந்திக்கச் சென்றான். அவர்கள் அவனைக் கண்டு பயந்தார்கள். அவனைக் கண்டு ஒதுங்கினார்கள்.

அவன் பதினாறு வருசங்கள் கட்டிடங்களுக்குள் சிறை யிருந்தான். இப்போது வீட்டுக்குள்ளேயே சிறை..... வெளியில் நடமாட வெட்கம்..... தயக்கம்..... அவனைப் பயங்கரவாதி என்று பட்டமளித்து..... அவனை வாழ விடாமல்..... அந்த ஊர் பொலிஸ் துரத்திக் கொண்டேயிருந்தது..... அடிக்கடி வாசுவை பொலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்து, "ராஜ்குமாரை என்ன நோக்கத்தில் வீட்டில் வைத்திருக்கிறாய்..... இங்கேயுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்கவா.....?" என்று கேட்டது.

எஞ்சிய காலத்தையும் சிறையிலேயே கழித்திருக்கலாம். நிரபராதியாக விடுதலையாகி வந்தும் சமூகத்தோடு வாழ முடியாத நிலைமையை எண்ணிக் கலங்கினான் ராஜகுமாரன்.

அவனால் மச்சானுக்கும் தங்கச்சிக்கும் ஆபத்து வரலாம்.

ஒரு நாள் இரவு மேட்டு லயத்து பழனிவேல் மாமன் வந்து இப்படிச் சொன்னார். "தம்பி வாசுதேவா..... ராஜ்குமார..... இனிமே கூட்டாளிமார் வீட்டுக்கு அனுப்பாத..... ராஜ்குமார் தோட்டத்துக்கு வந்தது..... அவங்களுக்கெல்லாம் பெரிய ஆபத்தாம். அவுங் களையும் பயங்கரவாதின்னு பொலிஸ் வந்து புடிச்சாலும் புடிக்கலாமாம்..... இவன் தோட்டத்த விட்டு எங்கயாவது போறதுதான நல்லதுன்னு எல்லா நாய்ப் பயல்களும் பேசிக்கிட்டு இருக்கானுங்க..... தம்பிய கொழும்புப் பக்கம் ஏதாவது ஒரு வேலையில சேத்து விடுறதுதான் எனக்கு நல்லதா படுது....."

"நண்பர்கள், உறவினர்கள் எல்லோருக்கும் நான் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதி..... யாருடனும் சகவாசம் செய்ய முடியாத நிலை....."

வாசு சங்கத் தலைவரைத் தேடிப் போனான். அவரைப் பிடிக்க முடியவில்லை. இந்த மாதம் முழுவதும் பார்லிமென்ட்..... அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதற்காக "கொழும்பை விட்டு எவரும் 'அவுட்ஸ்டேஷன்' போகக் கூடாது" என்று ஆளுங்கட்சியினர் கட்டளையிட்டுள்ளார்களாம். அவசரகாலச் சட்டம்..... பயங்கரவாதச் சட்டம்.... இந்த இரண்டு சட்டப் புத்தகங்களே தமிழர்களை நிர்மூலமாக்கிக் கொண்டிருக் கின்றன.

வாசு வீட்டுக்கு ஓடி வந்து, ராஜ்குமாரிடம் பேசிவிட்டு, தலைவரைச் சந்திப்பதற்கு தோட்டக் கமிட்டித் தலைவரையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போனான். "இங்க பாரு வாசுதேவா! நாடு இருக்கிற நெலமையில்..... இன்னைக்கு சிங்கள கச்சிகள எதுத்துக் கிட்டு வாழ முடியாது.....

போராட்டம்..... கீராட்டம்னா புடிச்சு உள்ளுக்குப் போட்டுருவானுங்க..... அது ஆளுங்கச்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கச்சியாக இருந்தாலும் சரி..... இன்னைக்கு தமிழன்னா பயங்கரவாதிதான்..... அதபத்தி பெருமபடணும்..... ஒன் மச்சானுக்கு கொழும்புல எங்கயாவது ஒரு கடையில வேல போட்டுத் தாரேன்..... அவன தோட்டத்துல நிப்பாட்டாத..... கொழும்புக்கு அனுப்பு!" என்று அவசர அவசரமாக பேசிவிட்டு காரில் ஏறினார் தலைவர்.

அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு சமூகத்தின் தலைமை களெல்லாம் மந்திரி பதவிகளுக்கு ஆசைப்பட்டு எதிரிகளின் பாதங்களில் வீழ்ந்து கிடக்கின்றன. மலையகத் தலைமைகள் எல்லாம் ஒரு மந்திரி பதவியோடு மரணமாகி விடுகின்றன.....

வாசு தோட்டக் கமிட்டித் தலைவரோடு இரவு வண்டியில் பதுளைக்குத் திரும்பினான். பதுளை வந்துவிட்டது.

ராஜகுமாரனிடம் விசயத்தைச் சொன்னான்..... ராஜகுமாரன் வியப்படையவில்லை. இங்கே சமூக அரசியல்வாதிகள் எவரும் கிடையாது. தேர்தலில் குதித்து எம்.பி. ஆவதும் மந்திரியாவதுமே தலைவர்களின் அடிப்படை நோக்கமாகிவிட்டது.

அந்தத் தொழிற்சங்கத்துக்கு பரம்பரை பரம்பரையாக அவனது பெற்றோர் சந்தாப்பணம் கட்டி வந்தார்கள். தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களிலெல்லாம் அடி, உதை, வெட்டு, குத்துபட்டு ஓட்டு வாங்கிக் கொடுத்தார்கள். சங்கத் தலைவரை மந்திரியாக்கினார் கள்..... அன்று ஒட்டாண்டியாக பெட்டிக்கடையில் பீடி வாங்க வழியில்லாமல் கிடந்தவன்..... இன்று மாடமாளிகை கூட கோபுரத்தில்..... கார் வண்டி..... மெய்க்காப்பாளர்..... சகிதம் வாழ்க்கை நடத்துகின்றான்.

இவர்களால் சமூகத்துக்கு என்ன பாதுகாப்பு....? எங்களைப் போன்ற இளைஞர்களின் எதிர்காலம் எல்லாம் என்ன ஆவது....! தேசிய பாதுகாப்பு ஒரு காலமும் தமிழனுக்குக் கிடைக்காது. சமூகப் பாதுகாப்புக் கூட தனது இனத்தின் தலைமைகள் மூலம் கிடைக்காத போது..... அவன் நிலை தடுமாறினான்.

சமூக அரசியல்..... தூரநோக்கு இல்லாதவர்கள் தேர்தலில் மட்டும் ஜெயிக்கின்ற கெட்டிக்காரர்கள்..... இவர்களிடம் சமூகம் ஒப்படைக்கப்படுகின்றது. மக்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைமைகள் இல்லாத போது "நாங்கள் தான் இந்தச் சமூகத்தின் அரசியல் கொம்பன் என்றும் தொழிற்சங்க மேதாவி" என்றும் தம்பட்டம் அடித்துக் கொண்டு சமூகத்தை எதிரிகளிடம் தொடர்ந்து காட்டிக் கொடுத்துக் கொண்டு இருக்கும் போது.... இவர்களை நம்பி எப்படி சமூகத்துக்குள் வாழ்வது....?

களுத்துறை, பூசா சிறைச்சாலையில் வாடியிருந்த போது, "விசாரணை செய்..... அல்லது விடுதலை செய்...." என்ற கோஷத்தை முன் வைத்து எத்தனை முறை உண்ணாவிரதம் இருந்தோம்..... எத்தனை முறை இரத்த வாந்தி எடுத்தோம்....? எந்த அரசியல்வாதி எங்கள் போராட்டத்தை வென்று கொடுத்தான்.....? நீராகாரம் கொடுத்து..... கஞ்சியைக் கொடுத்து..... எங்களுக்கு வாக்குறுதி கொடுத்து ஏமாற்றினார்கள். அவர்கள் வெளியில் சென்று மக்கள் மத்தியில் எங்களுக்காக ஒரு போராட்டத்தைக் கூட நடத்த முன்வரவில்லையே.....

"ராஜ்குமாரா இந்த முற பொலிசுல புடிச்சிக் கொடுக்க மாட்டோம்..... இங்கேயே தட்டிப் போடணும்..... இவன் அடிபட்ட பாம்பு..... இவன் இங்க வரவும்..... தோட்டத் தமிழன்களின் வால் நீளுது..... எல்லா நாய்களும் நிமிர்ந்து நிக்கிறான்கள்....." என்று சிங்கள இனவாதிகள் பேசிக் கொள்வதுடன் திட்டம் தீட்டி வருவதாகவும் வாசு அறிந்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் ராஜ்குமாரு! அந்தத் தலைவரு சொன்ன மாதிரி கொழும்புக்கு ஒரு கடைக்கு போறியாப்பா.....?" என்று ஏக்கத்தோடு வாசு கேட்டான். "அண்ணே! தோட்டத்துல இருந்தா ஓங்களுக்கு உசுருக்கு மோசம் வரும்..... நீங்க கொழும்புக்கு போய்ட்டா யாரு எவருன்னு தெரியாம இருக்கும்..... நாங்க வந்து அடிக்கடி பார்த்துக்கிறோம்..... நீங்க உசிரோட இருந்தா போதும் அண்ணே!" தங்கச்சி மீனா கண்கலங்கினாள்.

அந்த இரவு முழுவதும் ராஜ்குமாரன் தங்கையின் தொட்டில் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டேயிருந்தான். தங்கச்சி பரம்பரை பரவணும்..... மச்சான் தைரியசாலி..... நல்லா இருப்பார்..... அவன் மௌனமாக அந்த இரவைக் கழித்தான்.

ஒரு சின்ன கடதாசி எழுதி தங்கச்சியின் புடவைப் பெட்டியில் வைத்தான்.

"மச்சான் அவர்களுக்கு நண்பன் ஒருவன் மூலம் கொழும்பில் ஒரு வேலை தேடிக் கொண்டேன். வசதிப்படும் போது வீட்டுக்கு வருவேன்"

உடரட்ட மெனிக்கே பொல்காவலை சந்தியில் நின்றது.

ராஜ்குமாரன் இறங்கி வவுனியா வரையில் செல்லும் வண்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வாழும் மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வேண்டியது தலைமைகளின் பொறுப்பு. இடையில் பதவியும் பட்டமும் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் தடைகள். இவைகளை மீறி ஒடுக்கப்படும் சமூகத்துக்கு விடிவைத் தேடிக் கொடுக்க மூச்சு விடும் அந்த வடதிசைக் காற்று அவன் முகத்தை வருடியது..... ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார்க்கெடுத்துரைப்பேன்?

## சாந்தினி வரதராஜன்

ஜன்னல் அருகிலிருந்து மிக வேகமாக நடப்பவர்களை ரசித்துக் கொண்டிருந்த என்னை மெல்லிய விம்மல் சத்தம் திசை திருப்பியது. குப்பறப் படுத்திருந்த அம்மாவின் முதுகு குலுங்குவதை பார்த்ததும் புரிந்துவிட்டது. இது ஒன்றும் எனக்குப் புதிதல்ல, வழமையான காட்சிதான். நான் பிறந்த நாளிலிருந்து இந்த நிமிஷம் வரை என்ரை அம்மா சிரித்ததை பார்த்ததே இல்லை. இண்டைக்கு ஆர் என்ரை அம்மாவை அழவைச்சிருப்பினம்? அப்பாவும் வீட்டில இல்லை. குஞ்சு அம்மாவுக்கு கிட்டபோய் அழாதேங்க அம்மாவென சொல்லி அம்மாவை கட்டிபிடிக்க வேணும் போல மனம் துடித்தது. ஆனா, அவனின்றி ஓர் அணுவும் அசையாது என அம்மா சொல்லிற மாதிரி தான் நானும். என்ரை அம்மா இல்லாமல் ஓர் அடிகூட நகரமுடியாத உண்மை நிலை என் இமைகளை நனைத்தன.

அம்மாவின் இந்த நிலைமைக்கு எந்த புது காரணமும் இருக்காது. எல்லாம் என்னாலதான். எல்லாரும் என்ரை அம்மாவை அழுவிப்பினம். அப்பாவும் அவையள் மாதிரியே மாறிட்டார். முந்தியெல்லாம் அப்பா எப்பபாத்தாலும் 'ஆதவன்' 'ஆதவன்' எண்டு அன்பா இருப்பார். ஆனால், இப்ப அம்மாவையும் என்னையும் கண்டாலே எரிஞ்சு விழுகிறார். ஏன் ஏன் என எத்தனையோ நாட்கள் எனக்குள்ளே கேள்விகளை எழுப்பி பல நிகழ்வுகளை கூட்டியும் கழித்தும் பார்த்ததன் பின் சமன் நான்தான் என்ற முடிவை அறிந்த பின்பு இரவுகள் நீண்டுகொண்டே இருந்தன.

**மூன்றாம் பரிசுக் கதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடம் இப்படி என்னை படைத்துவிடு எண்டு வரம் கேட்டு வந்தனனா? இல்லை உங்களுக்குத் தான் மகனாக பிறக்க வேண்டும் என்று கேட்டேனா அப்பா? ஏன் அப்பா இப்படி மாறினீங்கள்? அம்மாவும் நானும் என்ன பாவம் செய்தனாங்கள்? இப்படி எத்தனையோ கேள்விகள். என்னைப் போலவே வளைந்த முதுகுடன் என்னுள் எழுந்தபடியே இருக்கும். ஆனாலும் என்ன கடலுக்குள் அலையும் அலைகளின் ஆசைகளும் ஆவேசங்களும் ஆருக்கும் தெரியாமல் கடலுக்குள்ளேயே அடங்கிவிடுறது போல எனக்குள் எழுவன எல்லாம் என்னுள்ளேயே அடங்கி விடுகின்றன. மனிதன் என்ற பெயரில் என் அம்மாவின் உதவியுடன் நடமாடும் வெறும் ஜடம் தானே நான்.

இறைவன் ஒன்றை எடுத்து ஒன்றை கொடுப்பான் என்றும் ஒரு கதவு மூடினால் மறு கதவு திறக்குமென்றும் அம்மா அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பா. எனக்கு சாதாரண மனிதனுக்கு இருக்க வேண்டிய எதையுமே தராமல் அசாதாரண மனிதன் போல் சிந்திக்கும் அறிவையும் ஆற்றலையும் மட்டும் அதிகமா கொடுத்துவிட்டான். இருந்தும் என்ன இதில் எதையும் ஆருக்கும் உணர்த்த முடியாத நிலை. இதனால் அடிக்கடி கடவுளை சபிக்க வேண்டும் போல இருக்கும். ஆனாலும் எதையெல்லாம் என்னிடமிருந்து பறிக்க முடியுமோ அத்தனையும் பறித்தெடுத்தவன் ஆருக்கும் கிடைக்க முடியாத ஒரு குஞ்சு அம்மாவை குட்டி அம்மாவை எனக்கு மட்டும் தந்திருக்கிறான். அதால கடவுளுக்கு அடிக்கடி நன்றிதான் சொல்லிக் கொண்டிருக்கிறன். இந்த விஷயத்தில என்னைப் போல அதிஷ்ரசாலி இந்த உலகத்தில் ஆருமே இருக்க முடியாது. எனக்கு கடவுள் தந்த என்ரை அம்மாவை ஒரு நாளாவது அம்மா எண்டு வாய் நிறைய கூப்பிட வேணும். அதைக் கேட்டு என்ரை குஞ்சு அம்மா சிரிக்க வேணும். அப்படியாவது என்ரை அம்மா சிரிக்க வேணும். இது ஆசை என்பதைவிட என்ரை இலட்சியம் என்று சொல்லலாம்.

இப்பிடி நான் நினைக்கிறதுக்கு பல காரணம் இருக்கு.....

முந்தியெல்லாம் நாங்க இங்க நடக்கிற எல்லா விழாக் களுக்கும் போவம். அங்க என்ரை வயது பிள்ளைகள் ஓடுவினம். பிறகு நடப்பினம். டக்கெண்டு சிரிப்பினம். மேகத்தை முட்டுற மாதிரி துள்ளுவினம். அவையள் விளையாடுறதை என்னை மறந்து பார்த்துக் கொண்டே இருப்பன். அதிலையும் அவையளின்ரை கால்கள் விரைவா ஓடுறதை பார்த்தா முதல்ல ஆசைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு அழுகைவரும். அவையளின்ரை கால்களையும் என்ர கால் களையும் மாறி மாறி பார்த்துக் கொண்டே இருப்பன். நான் இப்பிடி செய்யிறதை அம்மா பார்த்திடக் கூடாது எண்டு அம்மாவை பார்த்தன். என்ரை அம்மா அழுதபடி என்னையே பார்த்துக் கொண்டிருந்தா. மனிதர்கள் என்ற பெயரில் மனதில் அழுக்கையும் விஷத்தையும் தடவின சிலர் என்ரை அம்மாவை எப்படியெல்லாம் அழவைச்சினம் எண்டு எனக்கு மட்டும்தான் தெரியும்.

நளினி இவையள் உம்மட ஆதவனோட பிறந்த பிள்ளைகள் தானே. பாரும் எப்படி ஓடி ஓடி விளையாடினம். அங்க பாரும் என்ரை மகளை இவனைவிட சின்னவள். எப்படி துடியாட்டமா இருக்கிறாள். இவன் ஆதவன் அம்மா எண்டும் சொல்ல மாட்டானோ? எப்படித்தான் சகித்துக் கொண்டு இருக்கிறீரோ தெரியாது. என்னால முடியாதப்பா. நீர் சரியான இரும்பு மனுசியப்பா. அது சரி நளினி இந்த சாறி புதுசோ? நல்ல டிசைனா இருக்கு. எங்க வாங்கினீா்? தொடர்பற்ற பேச்சு அவர்களின அறியாமையையும் இங்கிதமின்மையையும் அப்பட்டமாக வெளிப்படுத்தின. ஆனால் என்ரை அம்மா எதுவும் சொல்லாமல் அழுத காட்சி என் இதயத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டியது.

அம்மா சொல்லிற மாதிரி வாழ்க்கை எவ்வளவு வலியதோ அதுபோல் கொடியதும் அதுதான் என அந்நிகழ்வு எனக்கு உணர்த்தியது. இப்படி எத்தனை நிகழ்வுகள் அம்மாவையும் என்னையும் எங்கள் வாழ்க்கையையும் வதைத்தெடுத்திருக்கிறது. சில நேரங்களில அடுத்தவர்கள் செய்யும் உதவிகளை விட அவர்கள் கொடுக்கும் துன்பம் உன்னதமானது. ஏன் எனில் அந்த வேதனையின் தாக்கம் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்ற உத்வேகம் தோன்றிக் கொண்டே இருக்கும். அன்று எனக்கும் அப்படித்தான். அம்மா என்ற அந்த உன்னத உறவை நான் எப்படியாவது சத்தம் போட்டு கூப்பிட வேணும். அதைக் கேட்டு என்ரை அம்மா சிரிக்கிறதை நான் ஒருக்கா எண்டாலும் பார்க்க வேணும் என சபதம் எடுத்ததன் விளைவு இரவு பகலாக உதட்டையும் என்னையும் கஷ்டப்படுத்தி முயற்சி செய்ததன் பலன் அம்மா எதிர்பார்க்காத வேளையில் அம்மா என அழைத்து நாங்கள் இருவரும் அடைந்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை. வேலைக்கு சென்றிருந்த அப்பாவுக்கு தொலைபேசி எடுத்து நான் அம்மா என்று கூப்பிடுவதை பார்த்து எப்படி மகிழ்ந்தா? அண்டைக்கு என்ரை ஆசை அம்மா சிரிச்சது போல நான் எப்பவும் பார்த்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. இப்படி பல நிகழ்வுகள் அம்மாவையும், என்னையும் அழவைத்ததன் விளைவு, அம்மா இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு செல்லும் சூழ்நிலைகளை தவிர்த்தா. அதனாலும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வாக்குவாதங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். நளினி உமக்கென்ன தெரியும் எல்லாரும் என்னைத்தான் பகிடி பண்ணினம். நீ என்ன இப்பவும் தனியாளே? எங்க பார்த்தாலும் தனியா வாறாய். உன்னுடைய வீட்டிலும் ஏதாவது விசேஷம் நடந்தால் நாங்களும் உன்னைப் போலத்தான் வருவம் எண்டெல்லே சொல்லிச் சிரிக்கினம்.

அதற்கும் அம்மா பேசாமல் இருப்பா. இப்பவெல்லாம் அம்மா பேசுவதையும் குறைத்துக் கொண்டு விட்டா.

"என்ன நளினி நான் கேட்கிறன் நீர் பேசாமல் இருக்கிறீர்?"

"நான் சொல்லிறதுக்கு என்ன இருக்குது ரமேஸ். இங்க ஆரும் வரவும் வேண்டாம். வந்து என்ர பிள்ளையையும் என்னையும் அழவைக்கவும் வேண்டாம்."

"அதுதான் நான் எத்தனை நாளாய் சொல்லிறன் கேட்கிறீரே இல்லை."

எனக்கு ஆதவன் மட்டும் போதும் நான் சாகும்வரை அவனை பார்த்துக் கொண்டே இருப்பன்.

"பிறக்கிற குழந்தையும் இவனைப் போல பிறந்திடுமோ எண்டுதானே பயப்படுறீர்? இப்படி எத்தனை பேருக்கு மற்றப் பிள்ளை குறையே இல்லாமல் பிறந்திருக்கு பயப்பிடத் தேவையில்லை எண்டுதானே டொக்டர் சொன்னவர். ஏன் நளினி எங்கட வீட்டிலேயும் குழந்தையின்ரை சிரிப்பு, கதை எல்லாம் கேட்கவேணும் எண்ட ஆசை உமக்கில்லையே?"

அவனின் ஆசையின் நிஜத்தை புரிந்து கொண்டாலும், "ரமேஸ் அதில நிரம்ப கஷ்ரம் இருக்கு."

"எனக்கு தெரியும் உமக்கு சிரமம் எண்டு. அதுக்கு நான் ஒரு யோசனை சொல்லிறன். ஆதவனை அதுக்கெண்டு இருக்கிற விடுதியில் சேர்த்து விடுவம். அங்க அவனை மாதிரி எத்தனை பிள்ளைகள் இருக்கினம். அவனுக்கும் பொழுதுபோகும் சோஷலும் கொஞ்ச காசு கொடுக்குமாம். ஒவ்வொரு கிழமையும் நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வருவம் என்ன சரிதானே.''

அப்பாவின் இரக்கமற்ற பேச்சை கேட்ட எனக்கு அழுகை அழுகையா வந்தது. இதற்கு அம்மா என்ன சொல்லப் போகிறாவோ எனப் பயப்பட்டேன்.

"தயவு செய்து என்னையும் என்ர பிள்ளையையும் பிரிக்காதீங்க ரமேஸ். உங்களுக்கு எங்களை பிடிக்காட்டி என்னை டிவோஸ் எடுத்திட்டு நீங்க என்னண்டாலும் செய்யுங்கோ'', எண்டு சொல்லிப்போட்டு என்ரை அம்மா அழுததை பார்க்க எனக்கும் அழுகை வந்தது. அப்பாவும் வழக்கம் போல தன்ர கோபத்தை கதவில காட்டிப்போட்டு வெளியே போனார்.

மழை பெய்து ஓய்ந்த பின்னும் இலைகளிலிருந்து நீர் துளிகள் விழுவது போல் இடியாய் இடித்து மின்னல் போல் வெளிச்சம் போட்டு காட்டிய அப்பாவின் பேச்சின் தாக்கம் அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. அம்மாவின் கண்ணீரை துடைக்க முடியாது ஊமையாக நானும் அழுதுகொண்டே இருந்தன். சூரியனின் அக்னி வெப்பத்தை, இடியை, மழையை எல்லா இன்னல்களையும் தன் தலையில் தாங்கி மண்ணுக்கும் மனிதருக்கும் நிழல்தரும் மரம் போல என்ர அம்மாவும் என்னால ஏற்படுற எல்லா துன்பங்களையும் தனக்குள் மறைத்து வைத்து என்னை மகிழ்வித்து கொண்டிருப்பதை நினைக்கும் ஒவ்வொரு நிமிடமும் நானும் அம்மாவும் அடிக்கடி விரும்பி பார்க்கும் அஞ்சலி படம்தான் நினைவில் வரும். அந்த படத்திலும் என்னைப் போலவே அஞ்சலிபாப்பா. ஆனா ஒண்டு அஞ்சலி பாப்பாவின் அப்பாவுக்கு அஞ்சலி எண்டா ச்ரியான விருப்பம். அவர் என்னுடைய அப்பா மாதிரி இல்லை, நல்லவர். ஆரம்பத்தில் அவளின்ரை அக்காவுக்கும் அண்ணாவுக்கும் அஞ்சலியை பிடிக்கிறதே இல்லை. அவையின்ர அப்பாட்டை கேட்பினம், அப்பா இந்த அஞ்சலி ஏன் எங்கட வீட்டில பிறக்கவேணும்? சுஜி வீட்டில பிறந்திருக்கலாம். இல்லாட்டி சுதன் வீட்டிலயாவது பிறந்திருக்கலாம் தானே. எல்லாரும் எங்களை பழிக்கினம்.

அதற்கு அந்த நல்ல அப்பா சொன்னவர். ஒரு நாள் வானத்தில உள்ள தேவதைகள் எல்லாரும் ஒன்று கூடி அஞ்சலி பாப்பா பிறக்கிற நேரம் வந்திட்டுது. எங்க பிறக்கவைக்கலாம் என யோசித்தார்களாம். அப்போ அவர்களுக்கு எங்கள் வீடுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தில் தெரிந்ததாம். அதுதான் அஞ்சலி எங்கட வீட்டிலேயே பிறக்கட்டும் என ஆசீர்வதித்தார்களாம்.

"ஏன் அவையளுக்கு எங்கட வீடு மட்டும் தெரிய வேணும்?"

"ஏன் எண்டா அஞ்சலி பாப்பாவை பார்க்கிறதிற்கு ஒரு நல்ல அம்மா வேணும். அந்த நல்ல அம்மா இந்த வீட்டிலதானே இருக்கிறா."

ஓ என்னுடைய நல்ல அம்மாவும் எனக்கு தேவதைகள் தந்த பரிசென அப்பத்தான் எனக்கும் விளங்கினது. என்ரை குஞ்சு அம்மாவின்ரை கையை இறுகபிடிக்க வேணும் போல இருந்தது. எப்பவுமே என் உணர்வுகளை புரிந்து கொள்ளும் அம்மா அப்பவும் என்ரை கையை தன் கைகளுக்குள் இறுகபொத்தி நான் எப்பவும் உன்னோடயே இருப்பன் என எனக்கு உணர்த்தினா. அம்மா உங்கட அன்பாலதானே என்ர ஒவ்வொரு நிமிட துளிகளும் உயிர்ப்புடன் இயங்குகின்றன. இப்படியெல்லாம் சொல்ல வேணும் போல் இருந்தது. ஆனால் கண்களால் மட்டுமே சொல்ல முடிந்தது.

குளிர்காலம் மறைந்து இலைகளெல்லாம் துளிர்விட, தொடங்கியது. என்னை வெளியில் கூட்டிக் கொண்டு போவதற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த அம்மாவை தொலைபேசி மணி அடித்து அழைத்தது. என் பெயர் அடிபட என்னவாக இருக்குமென உற்று கேட்கத் தொடங்கினேன். எனது பாடசாலை அட்டவணை களை போக்குவரத்தைப் பற்றி இருக்குமென உற்று கேட்கத் தொடங்கினேன். எனது பாடசாலை அட்டவணைகளை போக்குவரத்தை பற்றி பேசிக் கொண்டிருந்ததை கேட்ட எனக்கு இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது. இந்த அம்மாவும் அப்பா சொல்லிறதைதான் கேக்கிறா. அம்மா என்னை அங்கை அனுப்பாதீங்க. எனக்கு உங்களை விட்டு ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. என்னை பற்றி நல்லா தெரிஞ்ச நீங்களே இப்படி செய்யலாமா அம்மா? எனக்கு கத்தி அழவேண்டும் போல இருந்தது. அம்மா எதுவும் நடக்காத மாதிரி என்னை பார்த்து மெல்ல சிரித்தா. ஆனா நான் சிரிக்கவேயில்லை.

ஆதவன் குட்டி நாங்கள் இப்ப வெளியில போவம். அங்க கலர் கலரா நிரம்ப பூக்கள் பூத்திருக்கும். அதையெல்லாத்தையும் ஆருக்கும் தெரியாமல் நாங்கள் மட்டும் பாப்பம் என்ன. எங்க சிரியுங்க பார்ப்பம் எண்டு சொல்லீற்று சிரித்த அம்மாவை நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைத்துப் பார்த்தன். சக்கர நாற்காலியை தள்ளியபடி அம்மா சொல்லத் தொடங்கினா.

"ஆதவன் குஞ்சு நீங்கள் அம்மாவோடயே இருந்தா எப்படி படிக்கிறது? படித்து கெட்டிக்கார பிள்ளையா வரவேணும். அப்ப ஆதவனை பார்த்து அம்மா சந்தோசப்பட வேணும் தானே."

நான் எப்படி கெட்டிக்காரனா வருகிறது? அம்மாவும் அப்பா மாதிரி இப்ப நல்லா பொய் சொல்ல பழகிட்டா. எனக்கு அம்மாவில கோபம் கோபமாக வந்தது.

"அங்க உங்கள மாதிரி நிறம்ப பிள்ளைகள் வருவினம். அவையளோட நீங்க விளையாடலாம், சிரிக்கலாம். அங்க இருக்கிற அன்ரிமார் அம்மா பார்க்கிற மாதிரி பிள்ளையை பாப்பினம். என்ன போறீங்களா?"

அவையளுக்கும் என்னைப் போலத்தான் அங்க வர விருப்பமிருக்காது. ஆனா அவையளின்ர அம்மாவும் உங்களை மாதிரிதான் இருக்க வேணும்.

என்ன ஆதவன் யோசிக்கிறீங்க? இங்க பாருங்க இது சிவப்பு, வெள்ளை, மஞ்சள் என பூக்களின் வர்ணங்களை விளக்கிக் கொண்டு இருந்தா. எனக்குள் வழமைபோல் கேள்வி ஒன்று எழுந்து நின்றது.

அம்மா பூக்களின் மென்மையை வாசனையை எல்லாம் சொல்லிறீங்க. எல்லா நிறங்களிலையும் பூக்கிற பூக்கள் ஏன் கறுப்பு நிறத்திலை மட்டும் பூக்கிறதில்ல? கறுப்பு ஒருத்தருக்கும் பிடிக்காது எண்டா? அல்லது இவ்வளவு நல்ல பூக்கள் கூட கறுப்பு நிறத்தை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டதா? அப்போ நானும் கறுப்புத் தானே? என்னையும் எல்லாரோடையும் சேர்த்து ஒதுக்கி விடுவீங்களாம்மா?

அப்பாவின் ஆசை நினைவில் உதித்தது. அம்மாவுக்கு தம்பி பாப்பா பிறந்திட்டா அவர் வெள்ளையா பிறப்பார். நடப்பார். கதைப்பார். சிரிப்பார். அம்மாவும் என்னை மறந்திடுவா. இல்லை அப்பான்ரை விருப்பம் போல அந்த விடுதியில் சேர்த்துவிடுவா. எனக்கு அந்த முகம் தெரியாத தம்பி மீது கோபம் கோபமாக வந்தது. அதைவிட பயமும் வந்தது.

ஆதவன் இங்க பாருங்க எத்தனை பட்டாம் பூச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை வர்ணங்கள். இந்த பட்டாம் பூச்சிகளில் பல இனங்கள இருக்கு. அதில ஒரு இனம் எட்டு நாள்தான் வாழுமாம். அம்மாவின் விளக்கத்தை என்னை மறந்து கேட்டுக் கொண்டு இருந்தன். அப்போ......

ஹலோ நளினி கண்டு கனகாலம். எப்படி இருக்கிறீர். நல்லா மெலிஞ்சு போனீர். இப்படி சில உதடுகள் அம்மாவை போலியாக நலம் கேட்டபடி கண்களால் என்னை அளந்தார்கள். மனிதர்களின் பார்வைகளில் எத்தனை வகைகள். சிலர் என்னை பரிதாபமாக, பலர் அருவருப்பாக, தீண்டத்தகாதவனாக இறைவன் கண்களை படைத்தது அதன் மூலம் இயற்கையை ரசித்து பிறர் துயருக்காக கண்ணீர் சிந்தி நல்லதை பார்த்து, பார்த்ததை மற்றவர்களுக்கு பரிமாற எண்டுதான் அம்மா சொல்லித்தந்தவா. எப்பொழுதுமே இயற்கைக்கு மாறாக செயல்படும் மனிதனின் கண்களுக்கு நல்லவைகள் எதுவும் தென்படாது. அப்போதும் அப்படித்தான் தன் பெரிய வயிற்றை பிடித்தபடி நின்ற அன்ரி......

“வாங்க போவம். இந்த நேரத்தில இப்படி வலது குறைஞ்ச பிள்ளையை என்னை பார்க்க வைச்சிட்டீங்க.” பாம்பின் பல்லிலிருந்து வரும் விஷத்தை விட கொடியது சில மனிதர்களின் நாக்கு. அம்மாவின் முகம் அந்த பேச்சால் வாடிப்போனது.

இயேசு நாதர் மனிதர்களின் பாவச் சிலுவையைச் சுமந்தார் என்பதற்காக அவரை சிலுவையில் அறைந்தார்கள் என அம்மா அடிக்கடி சொல்லுவா. அது போல என்னை வயிற்றில் சுமந்த குற்றத்திற்காக தினம் தினம் வார்த்தைகளால் என் அம்மாவின் இதயத்தில் அறைகிறார்களே! கடவுளே நீயும் இதைப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறாய். எனக்கு இவ்வளவு அறிவை கொடுத்த நீ அதை வெளிப்படுத்தும் சக்தியையாவது தந்திருக்க லாம்தானே? ஏன் என்னை பிறக்கவைத்தனீ? என்னால் என்ர அம்மா படும் வேதனை போதும். என் கண்ணீரை துடைப்பதற்கு கூட என்ர அம்மாவின் உதவி தேவை என்பதால் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அம்மாவைப் பார்த்தன்.

அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தபடி இருந்தது. அம்மா..... அதைத் தவிர வேறு எதுவுமே பேசத் தெரியாத என்னை என்ன என்பதுபோல் இமைகளை உயர்த்திப் பார்த்தா.

அம்மா எட்டு நாட்கள் வாழும் பட்டாம் பூச்சியே தன் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வர்ணங்களை பூசியபடி மலர்களின் இதழ்களுக்கு முத்தமிட்டபடி அந்த குறுகிய நாட்களுக்குள் இனங்களை பெருக்கியபடி எவ்வளவு ஆனந்தமாக சிறகடிக்கின்றன. நாங்கள் அதைவிட பல காலம் வாழப்போகிறம் அம்மா. இப்படி ஒரு அன்பான அம்மாவோடு வாழும் வாழ்க்கையை அதன் ஒவ்வொரு நிமிட துளிகளையும் அணு அணுவாக ரசித்து வாழ ஆசைப்படுகிறன். வந்து என்ர சக்கர நாற்காலியை தள்ளுங்கம்மா என சொல்ல வேண்டும் போல் இருந்தது. நான் பாடசாலை செல்லும் நாளும் வந்தது. அன்றைய இரவை விழிப்புடனும் ஏக்கத்துடனுமே கழித்தேன். விடிகாலை பொழுதில் பாடசாலைக்கு வேண்டிய பொருட்களை எடுப்பதும் பையினுள் வைப்பதுமாக பம்பரமாக சுழன்று கொண்டிருந்த அம்மாவை பார்க்க எனக்கு கோபம் கோபமாக வந்தது. கோபத்தை எப்படி வெளிப்படுத்தலாமென சிந்தித்தபடி இருந்தேன். அம்மாவோ என் முகத்தை பார்ப்பதும் தன் வேலையில் மூழ்குவதுமாக இருந்தா. நான் பாடசாலை செல்வதற்கான பஸ்சும் வந்தது. அதில் என்னை இருத்திவிட்டு இறங்கிய அம்மாவை கண்ணீர் அரும்ப பார்த்தபடியே இருந்தன். அம்மா இப்பவாவது உங்கட மனம் மாறாதா? என் மனம் இரஞ்சியது. ஆனால் அம்மாவும் தன் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் தவித்தபடி இருந்ததை பார்க்க எனக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. என் அம்மா சிறு புள்ளியாக மறைய மறைய என்ர மனதில பெரும் விருட்சமாக வளர்ந்து கொண்டே இருந்தா. எனக்கும் அம்மாவுக்கும் இடைவெளியை பெருக்க ஆரம்பித்த பஸ்சின் மீதும் எனக்கு கோபம் கோபமாக வந்தது.

பாடசாலையில் என்ரை அம்மா இல்லாத வெறுமை என் மனதை பாலைவனம் போல் ஆக்கியது. ஆனால் என்னைப் போல பல பிள்ளைகள் இருக்கினம் என்ற உண்மை தெரிய வந்தபோது மனதுக்குள் மெல்லிய மகிழ்வு அரும்பியது. இப்பொழுதெல்லாம் இரண்டு மணித்தியாலம் அம்மாவை பிரிந்திருப்பதற்கு என்னை பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டன். பிரிவது பின்பு இணைவது அது கூட மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. இங்க உள்ள பிள்ளை களின்ரை கண்களும் எதையோ தொலைத்துவிட்டு தேடுவதை போல எனக்கு தோன்றின. என்னவாக இருக்கும்? ஓ! இவர்களும் என்னைப் போல தேவதை தந்த அம்மாவை தேடுகினம் என புரிந்து கொண்டேன். இவையளின்ரை அம்மாவையும் பார்க்க வேணும என்ற ஆசை எனக்குள்ளும் வளர ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் அம்மாவிடம் ஏதோ ஒரு மாற்றம் இருப்பது போல் எனக்குத் தோன்றியது. அம்மா மட்டும் அல்ல அப்பாவிடமும்தான். முன்பு போல் எரிந்தெரிந்து விழுவதில்லை. அம்மாவுடனும் என்னுடனும் அன்பாக இருக்கிறார். அம்மாவின் வயிறு ஏன் இப்படி பெரிசா இருக்கிறது. ஏதாவது வருத்தமாக இருக்குமோ? எனக்குப் பயமாக இருந்தது. அம்மாவிடம் இதை எப்படிக் கேட்பது என்று யோசித்தபடி இருந்த எனக்கு அம்மா உணவு ஊட்டும் பொழுது அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. அம்மாவின் வயிற்றையும் முகத்தையும் மாறி மாறி பார்த்தபடியே இருந்தேன். என் பார்வையின் அர்த்தத்தை புரிந்து கொண்ட அம்மா, ஆதவன் நான் பிள்ளைக்கு ஒரு விஷயம் சொல்லப்போறன், என்ன, என நான் ஆவலாகப் பார்த்தேன்.

உங்களோடை விளையாட, கதைக்க, ஒரு தம்பி பாப்பா பிறக்கப் போகிறான். குஞ்சுக்கு சந்தோஷம்தானே? அம்மா சிரித்தபடி என் கன்னத்தை தடவினா.

எனக்கு என் சக்கர நாற்காலி சுற்றுவது போல் பிரமை ஏற்பட்டது. கடைசியில எல்லாம் அப்பாவின்ர விருப்பம் போல நடந்திட்டுது. இனி அந்த விடுதியில சேர்த்து விடுவினம். பிறக்கப் போகிற தம்பி சிரிப்பான், நடப்பான், கதைப்பான். கடைசியல நான் நம்பியிருந்த என்ர அம்மாவும் எல்லாரையும் போல என்னை ஒதுக்கி வைத்துவிடுவா. இனி எனக்கு அம்மா இல்லை. ஆருமே இல்லை. என்னை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. என கண்களிலிருந்து ஓர் அருவி கட்டுப்பாட்டை உடைத்தபடி பெருக் கெடுத்தோடியது.

ஆதவன் ஏனம்மா ஏன் அழுகிறீர்கள்? அம்மா சொன்னது பிள்ளைக்கு பிடிக்கல்லையா? உங்களுக்கு தம்பி பிறக்கிறது விருப்ப மில்லையா? அவன் பிறந்தா உங்களுக்கு நல்ல பிறன்டா இருப்பான. உங்களோடை விளையாடுவான். கதைப்பான், சத்தமா சிரிப்பான் என அம்மா கூறியதையே கூறிக்கொண்டு போனா.

அதுதான், அதுதான் எனக்கு பிடிக்கேல்லை, எண்டு இந்த அம்மாவுக்கு நான் எப்படி விளங்கப்படுத்திறது? எண்டு புரியாமல் குழம்பினேன். பிறகு நான் ஒரு வாய்கூட சாப்பிடவேயில்லை. என் கோபத்தை வெறுப்பை வெளிப்படுத்த இதைத் தவிர எனக்கு வேறு வழியே புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் முகம் வாடிவிட்டது. என்ர விருப்பத்தை விளங்காத அம்மாவுக்கு இது வேணும். இப்படித்தான் செய்வன். எனக்கு இனி இந்த அம்மாவும் வேண்டாம். அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அம்மாவிடமிருந்து விலக ஆரம்பித்தேன். என் செய்கையால் அம்மா பழையபடி சிரிப்பை தொலைத்து வாடி நிற்பதை பார்க்க பாவமாக இருக்கும். இருந்தும் நான் என்னுடைய பிடிவாதத்தை விடுவதாயில்லை.

நான் விரும்பாத அந்த நாளும் பிறந்தது. அவர்கள் விரும்பியது போல தம்பி பாப்பாவும் பிறந்தான். அம்மா வயிற்று வலியால் துடிக்கும் போதும் என்னைப் பார்த்து பார்த்து அழுதா. எனக்கும் அழுகை அழுகையாக வந்தது. ஆனால் நான் அழவே இல்லை. ஏன் அழவேணும்? அம்மாவுக்கு இப்பத்தானே வலிக்கிறது. ஆனால் எனக்கு கேள்விபட்ட நாளிலிருந்து வலிக்கிறது. என்ர விருப்பு வெறுப்புக்களை உணர்ந்த அம்மா இந்த விஷயத்தில மட்டும் என்னைப் புரியாமல் போனது ஏன் என என்னை நானே கேள்விகளால் துளைத்து துளைத்து அந்த கேள்விக் குறிபோல் நானும் வளைந்ததுதான் மிச்சம். அம்மா ஆஸ்பத்திரிக்கு போறதுக்கு முதல் என்னை கட்டிப்பிடித்து கொஞ்சி என்ர பிள்ளையை கவனமா பார்த்துக் கொள்ளுங்க என அப்பாவிடம் வரம் கேட்டு நின்றா.

"நளினி நீர் அம்மா என்டால் நான் அப்பா. அதை நினைவில வைச்சுக் கொண்டு கவலைப்படாமல் போயிற்று வாரும்" என அம்மாவுக்கு நம்பிக்கை ஒளியூட்டினார். அம்மா என்னை விட்டு பிரிய மனமில்லாமல் என்னையே பார்த்தபடி இருந்தா. ஆனால் நான் வேணுமெண்டு முகத்தை திருப்பிட்டன். வெளியே அம்மாவை ஏற்றிய அம்புலன்ஸ் வண்டியின் சத்தம் என் இதயத்தின் வலியை மிகப்படுத்தியது.

அடுத்த நாள் நானும் அப்பாவும் ஆஸ்பத்திரிக்கு போகும் பொழுது அப்பா என்னுடன் அன்பா கதைத்தபடியே வந்தார். ஆனால் எனக்குத்தான் அப்பாவுடன் ஒட்டவே முடியவில்லை. ஆஸ்பத்திரியில வெள்ளைக் கட்டிலில் என்ரை அம்மா. எனக்கு அம்மாவைக் கண்டதும் ஆசை ஆசையாக இருந்தது. ஆனால் அம்மாவின்ரை மடியில எனக்கு பிடிக்காத அந்த தம்பி பாப்பா. அம்மா என்னை பார்த்து சிரிச்சபடி என்ர கையை பிடிச்சா. எனக்கு கையை நகர்த்த வேண்டும் போல் இருந்தது. ஆனால் அம்மா விடேல்ல. என்ர மடியில் தம்பியை படுக்கவைச்சு என்ர கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியின்ரை விரல்களுடன் இணைத்துவிட்டா. என்ன அதிசயம் எனக்குள் ஏதோ ஓர் உணர்வு புதிதாக பிறந்தது போல இருந்தது. தம்பி என் ஒரு விரலை இறுக பிடித்தபடி என்னை பார்த்து சிரிச்சான். எனக்கும் அவனின்ரை விரல்களை இறுகபிடிக்க வேணும் போல இருந்தது.

வீட்டுக்கு வரும் வழியிலும் வீட்டுக்கு வந்த பின்பும் என் நினைவுகள் தம்பியை சுற்றி சுற்றியே வட்டமிட்டன. அவனின் விரல்கள் பட்ட என் கையை தடவித்தடவிப் பார்த்தன். திரும்பவும் அவனை பார்க்க வேண்டும் போல் ஆசையா இருந்தது.

இப்பவெல்லாம் எங்கட வீட்டில தம்பியின்ரை அழுகை சத்தமும் அப்பாவின்ர சிரிப்பும் மாறி மாறி கேட்டபடியே இருக்கும். எனக்கு அந்த சத்தத்தை கேட்க விருப்பமே இருக்காது. ஆனால் அதுதானே அப்பா விரும்பினது. அதனால அப்பா எப்ப பார்த்தாலும் தம்பியை பற்றி பேசிப் பேசியே காலத்த கழித்துக் கொண்டு இருந்தார். ஆனால் அம்மா மட்டும் மாறாது என்னுடனேயே தன் பெரும்பாலான நேரத்தை செலவிட்டபடி இருந்தா. எண்டாலும் என் முழு நேரத்தில் ஒரு பகுதியை தம்பி ஆக்கிரமித்துள்ளது எனக்கு பிடிக்கவேயில்லை.

இப்பொழுதெல்லாம் இரவில் தம்பி அழுது என் நித்திரையை குழப்புகிறான் எண்டு எனக்காக தனி அறை ஒதுக்கி என்னை தனிமைப்படுத்தி விட்டார்கள். முந்தின மாதிரி அம்மா எப்போதும் என்னை கட்டிப்பிடித்தபடி படுப்பதேயில்லை. அடிக்கடி தம்பியிட்ட போகிறா. தனிமையில் இருக்கும் பொழுதெல்லாம் இரவுகள் பகலை விட நீண்டதாகவும் அந்த இருட்டும் மனதிலிருக்கும் தைரியத்தை விரட்டியபடியே இருக்கும். என் மனமோ அம்மாவின் அருகாமை யையும் அணைப்பையும் தேடிக் கொண்டே இருக்கும்.

தனிமையிலிருக்கும் நேரங்களில் வானத்தை துணைக்க ழைத்து அதனுடன் என்னை கரைத்துக் கொண்டே இருப்பேன். அன்றும் அப்படித்தான். பௌர்ணமி நிலவு கண் இமைக்கும் பொழுதுக்குள் தேய்ந்து கொண்டே இருந்தது. ஏன் இப்படி தேய்கிறாய்? உனக்கென்ன உன்னை சுற்றி எத்தனை நட்சத்திர குழந்தைகள். ஒரு வேளை அவர்களுக்கு வேலை செய்து தேய்ந்து போகின்றாயோ? என் அம்மாவைப் போல, அம்மாவின் நினைவு மனதை தொட்டதும் திரும்பிப் பார்த்தேன். தம்பிக்கு பால் கொடுத்தாலும் எப்போதும் போல் விழியும் மனமும் என் மீதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்து கொண்டிருந்தது. ஆனால் நானோ நிலவின் ஒளியை விரும்பாமல் மறையும் சில சின்ன மனிதர்களைப் போல என் பார்வையை திருப்பிக் கொண்டேன்.

அம்மா அடிக்கடி சொல்லுவா. ஆதவன் உலகில வாழும் உயிரினங்களுக்கெல்லாம் இறைவன் இரண்டு விழிகளை கொடுத்தாலும் அவை இரண்டாலும் ஒரு திசையைத் தான் பார்க்க முடியும். அது போலத்தான் நானும். ஆனா நீ அடிக்கடி என்னை கவலைப்படுத்திறியே ஏன் ஆதவா?

எனக்கும் என் உள்ளுணர்வுகளை கொட்ட வேண்டும் போல இருக்கும்.

என்னுள் பிரவாகித்துக் கொண்டிருக்கும் அறிவையும் முதிர்ச்சியையும் யாரும் அறியப் போவதுமில்லை. நானும் அதை உணர்த்தப் போவதுமில்லை. எப்படி உணர்த்த முடியும்? இந்த இயற்கை படைத்த மரம் செடி கொடிகளுக்குள்ளும் உயிர் உணர்வு இருக்கிறது என்பதை ஆரும் உணர்ந்ததுமில்லை. அதை மனிதர் களுக்கு உணர்த்த அவை முயன்றதுமில்லை. நானும் அப்படித் தானே அம்மா. எப்படி என் அன்பை தெரியப்படுத்துவன். உங்களை புரிந்து கொண்டதை எப்படி அம்மா வெளிப்படுத்துவன்?

என்ரை அம்மா என்னால் படும் துன்பங்கள், துயரங்கள் எல்லாம் பறவையின் சிறகு நனைந்த பிறகு அதற்கே சுமையாக இருப்பது போல்தான். என்னைப் பெற்று எனக்கு ஆதவன் என்ற பெயர் வைத்து வாழ்வுக்கு ஒளி கொடுக்கப் போகிறேன் என்ற கற்பனையை வளர்த்த உங்கள் வாழ்க்கையை இருண்ட பாலைவனம் ஆக்கியவன் எண்ட உண்மையை என்னால தாங்க முடியாமல் இருக்கிறது அம்மா.

என்ரை அம்மா, கடல் கூட தன்ர வயிற்றில் விலை உயர்ந்த முத்துக்களை பதுக்கி வைத்துக் கொண்டு தனக்கு தேவையில்லாத சிப்பியையும் ஊரியையும் கரைகளில் தள்ளிவிட்டு செல்லும் எண்டு நீங்கதானே அம்மா எனக்கு படித்துக் காட்டினீங்கள். இயற்கை கூட வேண்டாததை ஒதுக்கும் பொழுது ஒன்றுக்கும் பிரயோசன மில்லாத என்னை கண்ணுக்குள் வைத்து பாதுகாக்கும் உங்களை நான் கடவுளாத்தானே பார்க்கிறன் அம்மா. அம்மா இப்பொழு தெல்லாம், நான் இனியும் உங்களுக்கு பாரமாக இருக்கக் கூடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு அடிக்கடி நினைக்கிறன்...... உங்களுக்கு இப்போ தம்பி இருக்கிறான் அவன் உங்களைப் பார்ப்பான். ஆனால் நான்.....?

இந்த உலகத்தில் வாழ்ந்தவைகள் எல்லாம் தானும் வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளமா ஏதாவது ஒன்றை தன் பெயர் சொல்ல வைத்துவிட்டு மறைகின்றது. எல்லாமே நீங்கள் சொல்லித் தந்ததுதானே அம்மா. ஆனால் நான் என்னத்தை அம்மா உங்களுக்கு என் நினைவாக வைத்துவிட்டு போகப் போகிறேன்........? என்னோடு வாழ்ந்த நினைவுகளையும் இந்த சக்கர நாற்காலியையும் தவிர.....? ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் நாடு

## சாரங்கா தயாநந்தன்

**கா**ற்றில் பறக்கும் மெல்லிய கேசத்தை அழுத்திப் படிவிக்க முயன்றபடி ஒரு வெளிச்சக் கொடியாய் நின்றிருந்தாள் அபிரா. இளம் வைத்தியர். அந்த ஒளிர்மஞ்சள் நிறமும் பளீரிடும் விழிகளும் கழுத்து வரை வெட்டப்பட்ட சுருள் முடியை வலிந்து தூக்கிச் செருகியிருந்த விதமும் அவள அப்பிரதேசத்துக்குரியவளல்ல என்பதை இலகுவாகக் காட்டிக் கொண்டிருந்தன. அவள் குரல் கனிவோடு உதிர்ந்தது.

“கவலைப்படாதேங்கோ..... அழாதேங்கோ..... அழுது ஆகிறது என்ன.......”

நிலத்தில் குத்திட்டு அமர்ந்து தன் முழங்கால்களில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்த அந்த இளந்தாய் மெல்லத் தலை உயர்த்தினாள்.

“எப்பிடித் தங்கச்சி...... எப்பிடி அதை மறக்க......?”

சொல்லில் அடங்காத சோகத்தின் பிரதிபலிப்பாய் விம்மல் வெடித்தது.

“பிடி அம்மா..... என்னைப் பிடி..... அம்மா.....”

இன்னும் கூடத் தெளிவாய் அட்சர சுத்தமாய்ப் பிசிறின்றிக் காதினுள் ஒலிக்கிறதே அவனது குரல். அசுர அலையின் பேரிரைச்சலை மேவ முயன்று தோற்றுப் போன அவனது இறுதிக் குரல். அடிபட்ட குருவியினது போலத் தேய்ந்தழிந்து இறுதியில் இல்லாமல் போன பிள்ளையின் குரல். உண்மையில் பிள்ளை

ஆறுதல் பரிசுக் கதை – 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூடச் சொல்ல வராத வயது அவனது. வெறும் பிஞ்சு. அவளது வாழ்வு வெளியில் சந்தோஷப் பூக்களை வாரியிறைத்தபடி வந்து பிறந்த தலைச்சன். ஐந்தே வயதான அவனைக் கொஞ்சம் வாழ்ந்து பார்க்க அனுமதித்திருக்கலாம். காலம். கணக்கு வழக்குத் தெரியாத காலம். கடலலையாகிக் குழந்தையை வாரிக் கொண்டிரு க்கிறது. இருபது வருஷமாய் இளம் பிள்ளைகளைத் தின்று அடங்காமல் இப்போது குழந்தைகளையும் பெருந்தொகையாகத் தின்று தீர்த்து விட்டிருக்கிறது. நீரில் ஊறி உருவழிந்த அவனது இறுதித் தோற்றம் ஞாபகம் வந்ததுதான் தாமதம். கண்ணீர் பொலபொலவென்று வடியத் தொடங்கி விட்டது. அவனது வளர்ச்சி யைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போயிருந்த அவளது கண்கள் தாம் இப்போது காயாத ஊற்றாய் மாறிக் கிடக்கின்றன.

"நான் பெத்த குஞ்சு....."

கத்தத் திராணியற்ற அவளது அழுகையை நிறுத்த மாட்டாத வளாய்த் தேம்புகிறாள். உருண்டு எழும்பிய அலையின் போக்கில் இழுபட்டபடி, விபரிக்கவியலாத திகிலோடு அவன் அலறிய பொழுதில் அவள் ஒரு கையில் யன்னல் கம்பியையும் மறு கையில் மூன்றே மாதமான சின்ன மகளையும் பற்றியிருந்தாள். மகளைத் தூக்கிக் கொண்டு அவள் திரும்பிப் பார்க்கவும் ராட்சச அலை அவனைக் காவி நகரத் தொடங்கி விட்டிருந்தது.

நடந்ததெல்லாம் நினைக்கக் கனவு போலத்தான் இருக்கின்றது. ஆனால் முகாம் வாழ்வும் கணுக்காலில் வலிக்கின்ற கண்ணாடி கிழித்த காயமும் நடந்ததைச் சாட்சிப்படுத்துகின்றதே. அக் கொடுமையின் மெய்ம்மை சாட்டையாகி அவள் நைந்த இதயத்தை வினாடிக்கொருமுறை 'சுளீர் சுளீர்' என அறைகின்றதே. தனக்குத் தானே நடந்ததை மறுப்பது போல தலையைக் குலுக்கி வலமும் இடமுமாய் ஆட்டி அழுகிறாள் அவள். தாள முடியாத தாய்மையின் பரிதவிப்பு. அவளது அழுகையைப் பலவற்றில் ஒன்றாக ஆக்கிப் பெறுமதியிழக்கச் செய்கிறது அந்த அகதி முகாமின் துயரக் கலவை.

மீண்டும் தேறுதல் வார்த்தைகளோடு காயத்தைப் பார்வை யிட்டு, துணை மருத்துவத் தாதி அவளது காயத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கவும் அப்பால் நகர்கிறாள் அபிரா. அவளது தலைமையின் கீழ் அந்த முகாம் கொடுக்கப்பட்டிருந்தது. துணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குச் சில தாதியரும் உதவிப் போராளிகளும் வழங்கப் பட்டிருந்தனர். அப்பாவிடமிருந்து தமிழை எழுதவும் வாசிக்கவும் மிக அழகாகப் பேசவும் கற்றுக் கொண்டு விட்டிருந்ததில் மக்களோடு அவளால் இயல்பாக ஊடாட முடிந்தது. அவர்களோடு ஒருத்தியாய் ஆகிவிடவும் முடிந்தது.

அடையாளங் காட்டப்படுவதற்காய்த் தினமும் பெரிய வாகனங்களில் கொண்டு குவிக்கப்படும் சடலங்களும் பெருந் தொகையான காயப்பட்ட மக்களும் சேர அழுகை ஓலத்தில் திணறுகிறது முகாம். மட்டுப்படுத்தப்பட்ட மிகக் குறைவான வைத்திய வசதிகள். மருந்துகளின் பற்றாக்குறை. ஆளணிப் பற்றாக்குறை. கிடைக்கும் நிவாரண உதவிகளும் கைகளில் சேராத அவலம். சகலதும் சேரக் கனதி அறிந்திராத அவள் மனமும் கூட இப்போது கனத்துக் கிடக்கிறது.

"அணைச்ச கையே அழிச்சாட்டியம் பண்ணேக்குள்ளை..... நாங்கள் என்னத்தையம்மா செய்வம்.....?"

அந்தக் கரையோரக் கிராமத்து வயிறுகளுக்கெல்லாம் கஞ்சி வார்த்தது அந்த நீலக்கடல் தான். மீனும் றாலும் சொரிந்து வாழ்வுக்கு வழி சொன்ன தாய். வளமான காற்றுடன் வள்ளங்களை வழிப்படுத்திய தந்தை. உழைத்துக் களைத்த கடல் குடிக்கு வெள்ளலை வீசி விளையாட்டுக் காட்டிய சிநேகிதி. நெஞ்சு பூரிக்க முத்தும் சங்கும் பரிசு தந்த நெருங்கிய சொந்தம். அளவில்லாத அன்போடு இவர்களை அரவணைத்திருந்த அதே கடல் தான் இப்போது சகலதையும் பொய்த்து விட்டுப் பேயாக உயிர் குடித்துப் போயிருக்கிறது.

"குஞ்சு என்ன பிஞ்சு என்ன.........
குமரி என்ன கிழமும் என்ன........
வஞ்சக் கடல் வந்து எல்லோ..........
வாரிக் கொண்டு போனதெல்லோ........
என்ரை ஐயோ........"

கிழவியின் ஒப்பாரியும் தான் ஓயாமல் நீள்கிறது.

"சும்மா இரணை..... ஒப்பாரிக்குத் தலை இடிக்குது......"

யாரோ அதட்டியதைக் கிழவி காதில் வாங்கியதாகத் தெரிய வில்லை. நல்லதுக்கும் கெட்டதுக்கும் பாட்டுச் சொல்லிப் பழகிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன மண் அவளது. அலையடித்த ரெண்டாம் நாள் தொட்டுக் கிழவியின் ஒப்பாரி ஓய்ந்த பாடில்லை. பேரனைச் சாகப் பார்த்த தன் கண்களையே திட்டிக் கொண்டு தொடங்கிய ஓலப் பாட்டு இப்போது கடலை வைதபடி நீள்கிறது.

"ஆராவது ஆறுதல் சொல்லுங்கோப்பா........ இதுக்கு ஆதரவாய் இருந்த ஒரேயொரு பேரனையும் கடல் அள்ளிக் கொண்டு போட்டுது......"

"ஆத்துறதுக் கார் இருக்கா..... கடல்
ஆத்தாவே கொலைகாரி.....
காத்து நூத்த விளக்காக...... வாழ்வு
கருக வெச்ச பழிகாரி.....
என்ரை ஐயோ......"

பேரனின் உடம்பைப் பார்த்த கணத்திலிருந்து பச்சைத் தண்ணியும் வாயில் படாமல் கத்திக் கொண்டிருக்கிறது கிழவி. சில நேரம் களைச்சு ஓய்ஞ்சு கண்ணை மூடிக் கொண்டு கிடக்கும். பிறகு எழும்பி ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடும்.

"வெள்ளலைல விளையாடும்........
வீரனெல்லோ என்ரை பேரன்..........
கள்ள அலை எழுந்தாடிக்
காவு கொண்டு போனதெல்லோ..........
என்ரை ஐயோ........"

"பாட்டி..... அழாதேங்கோ..... பாட்டி உங்களுக்கு நாங்கள் இருக்கிறம் பாட்டி....."

குட்டிப் போராளிப் பெண் ஒருத்தி ஆறுதல் சொல்கிறாள். அவர்களது பிரதிபலன் கருதாத உதவி செய்யும் மனப்பான்மை வந்த புதிதில் அவளைப் பிரமிக்க வைத்தது. சுனாமி அலையடித்த அன்றே சொந்த மண்ணுக்குச் சேவை செய்யும் ஆர்வத்தோடு புறப்பட்ட வைத்தியக் குழுவினரோடு தானும் புறப்பட்டிருந்தாள். மூன்று வார விடுப்புத் தான் எடுக்க முடிந்தது. அப்போது தான் மருத்துவப் படிப்பை முடித்து லண்டன் மாநகரின் மிகப்பிரபல்யமான வைத்தியசாலையில் கடமைக்கு நியமனம் பெற்றிருந்தாள். கூடவே மைக். படிப்புக்காலத்தில் இதயங் கலந்த இனிய சிநேகம். அவளுக்கு மணமாலை சூட்டப் போகும் இனிய தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கும் அதே வைத்தியசாலையில் நியமனம் கிடைத்திருந்ததில் தொழில் இரட்டிப்பு மகிழ்ச்சியாய்ப் போயிருந்தது.

லண்டனிலேயே பிறந்து வளர்ந்த போதிலும் நெகிழ்ச்சியான ஆண் பெண் உறவுக் கலாசாரத்திற்குரியவளல்ல அவள். அவள் சின்னஞ் சிறுமியாய் இருக்கும் நாளிலே, அப்பா அவளை மடியிலிருத்திக் கதை சொல்லுவார். அவள் கேட்கும் தருணமெல்லாம் வற்றாத ஊற்றாய் அப்பாவின் கதைகள் பெருகும். அவை ஒரே ஒரு ஊரில் வாழ்ந்த ஒரேயொரு ராஜாவைப் பற்றியனவல்ல. அல்லது மென்மையான ரோஜா வர்ணத்தில் உடையணிந்த, எப்போதும் இளவரசர்களால் மீட்கப்படும் அழகிய ராஜகுமாரிகளைப் பற்றியவையும் அல்ல. அவை அம்மாவும், அப்பாவும் பிறந்த தேசத்தின் உண்மைக் கதைகளைச் சொல்லும். அத்தேசத்தின் வாழ்க்கை முறையைச் சொல்லும். தமிழ் மொழியின் பெருமைகளைச் சொல்லும். அம்மொழியைக் காப்பதற்காக அந்நாட்டில் எழுந்த இனங்களுக்கிடையிலான போர் பற்றிச் சொல்லும். அப்பாவின் கதைகள் பெரும்பாலும் சோகமாய் இருந்தது அவளுக்கு ஞாபகம் இருக்கிறது. அவள் அதைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டபோது, காலம் வரும்போது நாட்டின் கதைகள் சந்தோஷமாய் மாறும் என்றார் அப்பா. இதோ அவளது இருபத்தியிரண்டு வயதிலும் கூட அவை மாறாமல் தான் இருக்கின்றன.

பதினைந்து வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் எதுவும் பேசாது அசைவற்று இருந்தான். சிறுவர் உளப்பிறழ்வும் அம் முகாமில் பொதுவான ஒரு விடயந்தானெனினும் கூட அச் சிறுவனின வெறித்த பார்வை அவள் மனதில் தாங்கவொண்ணா வருத்தத்தை ஏற்படுத்தியது. தனது பிறந்த தேசத்தில் சிறுவர் நல்லெதிர் காலத்துக்காக எடுக்கப்படும் முயற்சிகளை இத்தேசத்துச் சிறுவர் களின் அவலமான வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்த்தது அவள் மனம்.

“இது மட்டும் தான் குடும்பத்திலை தப்பினது.....”

ஒரு வயதானவர் வேறொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தா. எட்டு வயதும் மதிக்க வராத ஒரு சிறுவன் ஒரு பெண்ணிடம் விபரம் சொல்லிக் கொண்டிருந்தான்.

“அம்மா வெள்ளச்சட்டைக்குப் பொத்தான் தெச்சிட்டிருந்துதா....... நா...... பாண் வாங்கக் கடைக்குப் போனனா...... அப்பத்தான் அலையடிச்சது.....”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ம்..... பிறகு.....”

“பிறவென்ன...... அண்ணாக்கள் ரெண்டு பேரு என்னையப் பிடிச்சுக் காப்பாத்திட்டாங்க....... அம்மாவும் தங்கச்சிங்க ரெண்டும் வரும் எண்டாங்க........ இன்னும் வரலை......”

“உன்ரை அப்பா எங்கை தம்பி.....?”

“அவரு...... மீன்பிடிக்கப் போன இடத்திலை நேவிக்காறன் சுட்டுச் செத்திட்டார்.....”

விபரங் கேட்ட பெண் வார்த்தையின்றி விக்கித்துப் போய் நிற்க சிறுவன் தன்னொத்த சிறுவர் கூட்டம் நின்ற இடத்தை நோக்கி நடந்தான்.

திரும்பியவளின் தூரப் பார்வையில் சிக்கினான் தாடியுடனான அந்த இளைஞன். அவனது மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. அவளது கால் வீக்கத்துக்குப் பரியாரியாரிடம் மருந்து வாங்கப் போனவன் திரும்பி வீட்டுக்குப் போகமுடியாமல் போய்விட்டது. அவளைப் பற்றி எதுவும் அறிய முடியவில்லை. அவள் தப்பிக்க முயற்சி செய்ததைக் கண்டதாகக் கூடி எவரும் சொல்லவில்லை. ஆனால், உடலும் கிடைக்கவில்லை. அவன் வீட்டைவிட்டுப் புறப்படும் போது அசதியுடன் படுத்துக் கொண்டிருந்தாளாம். ‘அவளை நித்திரைப் பொழுதில் அலை வாரிச் சுருட்டியிருக்குமோ’ என்று ஊகம் சொன்ன சிநேகிதனைக் கண்மண் தெரியாமல் அடித்து நொருக்கி விட்டதாக முகாமில் கதைத்தார்கள். இப்போது துர்நாற்றமடிக்கும் சடலங்களை உற்று உற்றுப் பார்த்து விட்டு ‘அவளில்லை..... அவளில்லை.....’ என்று கைதட்டிக் கொள்கிறான். தெரிந்தவர்களைக் கண்டதும் தலையில் அடித்து அழுகிறான்.

அப்பாவின் கதைகளில் பரிச்சயமாகியிருந்த நாட்டுக்கு நேரில் வந்த போது அவள் உண்மையில் அதிர்ந்து போனாள். எத்தனை எத்தனை துன்பங்கள். ‘எக்கணத்திலும் போர் வெடிக்கலாம்’ என்ற நிலையிலும் தளராது வாழத் துடிக்கின்ற மக்கள் ஒருபுறம். பொருளாதார முதலீடுகள் அற்ற நாட்டின் அவல நிலைமை மறு புறம். இதற்கிடையில் போரையே ஆதாயமாக்க முயலும் அரசியற் பெருங்கைகள். அப்பாவைச் சொந்த தேசத்திலிருந்து அகதியாய் விரட்டிய அதே போரின் தொடர்பில் சிதைந்த மீளக்கட்டியெழுப்பப் படாத கட்டிடங்கள். அப்பாவின் நாட்டுக்காய் அவள் மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கியது. அவ் இரக்கத்தின் வசப்பட்டதில் இரவு பகலற்ற சேவை அவளது வாழ்வாகிப் போனது. அச் சேவையில் உடல் களைத்து ஓயினும் கூட மனதில் பரவும் சொல்லமுடியாத திருப்தியின் விகசிப்பை அவளால் உணர முடிந்தது.

மூன்று வாரங்கள் பூர்த்தியாகும் நிலையில், நாளை அவள் தனது மண்ணுக்கு மீண்டாக வேண்டும். அவள் தனது இறுதி இரவையும் அவளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த முகாமிலேயே கழிக்க விரும்பினாள். இரவு பதினொரு மணி ஆகி விட்டிருந்தது. அவள் மனதில் பரிதாபமான கண்ணீர் முகங்களின் ஊர்வலம். அவர்களை விட்டு அவள் நீங்கப் போகிறாள்.

அடிக்கடி மாறும் நினைவுக் கோலங்கள் அவளை உலுக்கின. ஜுலைக் கலவரத்தில் தகித்த நெருப்புப் பொசுக்கியதில் நாட்டை விட்டு அகதியாய் வெளியேறிய அப்பா....... அவளுக்கு நினைவு தெரிய முன்னரே இறந்து போன அம்மா...... அன்பின் முழுவடிவாய் அவளது உற்சாகமான சிட்டுக் குருவி வயதுகளில் அறிமுகமாகி வாழ்வின் துணை எனும் நிலைக்கு வந்து விட்ட மைக்..... இறுதியாக விடைபெறக் கையசைத்த போது அவளது கண்களைக் கலந்த அன்பு ததும்பியூறிய அவனது விழிகள்..... வைத்திய உதவி கிடைக்காததில் புருஷனை இழந்து விட்டதாகக் கதறியழுத அவள் வயதொத்த பெண்ணின் ஓலம்..... ஒரு பொழுதில் அவளை அங்கேயே தங்கி விடச் சொல்லி சிறுமனப் பட்சி கீச்சிடுகிறது. மறுபொழுதில் 'அவளது சேவையில் மட்டும் அப்பா வின் நாடு உய்ந்து விடப் போகிறதா என்ன?' என்று கேட்கிறது.

கண்களை மூடி கைகளை மடித்து நெற்றிக்குக் குறுக்கே வைத்துப் படுத்தாள். "துன்ப சமுத்திரத்தில் ஒரு துளி மீட்சி" பற்றித் திருப்தியுற்ற தெரசா அம்மையாரின் கதை நினைப்பில் வந்தது. கனவின் மங்கலாய் சிறு வயதுக் காட்சி ஒன்று நினைவைக் குறுக்கறுத்தது. இராமாயணக் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார் அவளது அப்பா. சின்னஞ் சிறுமியாய் அவர் மடியில் உட்கார்ந்து இருக்கிறாள் அவள்.

ராமரும் அவரது படைவீரரும் சேது அணை கட்ட ஆரம்பிக் கிறார்கள். அத்தருணத்தில் உதவிக்கு வருகிறது சின்னஞ்சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணில். தானும் மண் சுமப்பேன் என்ற துணிச்சலோடு. அப்பா சொல்லவும் அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது. களுக் என்று சிரித்து விடுகிறாள்.

ஆனால், பின்னாளில் அவள் தமிழ்க் கதைகளைத் தானாகவே வாசித்து அறிந்து கொண்ட பிறகு அணிலின் துணிச்சல் சிரிப்புக்குரியதாகவன்றி வியப்புக்குரியதாகத் தோன்றியது. சிதைந்த அப்பாவின் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் அவளும் இப்போது ஒரு சின்னஞ்சிறு அணில் தானோ? குழப்பங்களுடன் கழிந்து கொண்டிருந்தது இரவு. அவள் நினைவுகளின் கனதியோடேயே தூங்கிப் போனாள்.

மறு நாள். லண்டனுக்கான சிறீலங்கன் எயர்லைன்ஸ் விமானம் உயரப் பறந்து கொண்டிருந்தது. அபிராவுடன் சேவைக்கு வந்து மீளும் வைத்தியக் குழுவில் ஒருத்தியான சினேகிதி ஜூலியா, தன் கைப்பைக்குள்ளிலிருந்த ஒரு குறிப்பினைச் சரிபார்த்துக் கொண்டாள். அக்குறிப்பில் அபிராவின் முத்து முத்தான தமிழ்க் கையெழுத்து.

அப்பா, இங்கு வந்த பிறகு உங்கள் நாடு எனதும் என்ற நினைவு. மனதிற்குத் திருப்தியாகும் வரையில் இங்கு சேவையாற்ற விரும்புகிறேன். வைத்தியசாலைக்கான விடுகைப் பத்திரத்தையும் இத்துடன் அனுப்பி வைக்கிறேன். 'மைக்'கிற்கு என் அன்பு சொல்லி விடுங்கள். விபரமாகப் பின்னர் எழுதுகிறேன். என் முடிவு உங்களுக்குத் திருப்தியானதே என்ற நம்பிக்கையுடன்........

அன்பு மகள் அபிரா.

துயரிலிருந்து மீளாத மக்களின் இடையே நல்லொளியூற்றும் வெளிச்சக்கீற்றாய் இப்போதும் நடந்து கொண்டிருக்கிறாள் அபிரா. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றங்கரை அப்பா

## ஜுனைதா ஷெரீப்

ஆற்றங்கரை அப்பா கபுறடியைப் பற்றி எங்களது பகுதியிலுள்ள அனைத்து முஸ்லிம் கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் தெரிந்திருந்தது.

எனது கிராமத்திலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர்கள் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் தார் பாதையில் பிரயாணம் செய்து, நாற்தெருக்கள் சங்கமிக்கும் சந்தியை அடைந்து, அங்கிருந்து வலது புறமாகத் திரும்பி செம்மண் புழுதி வீசும் வழியூடாக சரியாக இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால் கபுறடியை அடைந்து விடலாம்.

ஐம்பது மீட்டருக்கும் குறைந்த அகலமான வம்மி ஆறு மழை நாட்களில் நுங்கு நுரைகளுடன் ஓடிக் கொண்டிருக்கும். அதன் ஓரத்தில் அடி அகன்று, உயர்ந்து, பரப்பிய கிளைகளில் தொங்கும் விழுதுகளுடன் கூடிய ஆல மரமொன்றின் நிழலில் அமைதியே உருவாக அந்த சியாரமும், அதையொட்டியதான ஓர் அறை மட்டும் கொண்ட பள்ளிவாசலும் காட்சி தரும். இவைகளுக்குப் பின்புறமாக இரண்டு வேப்ப மரங்களும், இடப்பக்கமாக புளியமரமொன்றும் நிழல் பரப்பியவாறு நின்றன. ஆற்றங்கரை ஓரத்தில் உச்சி வெய்யிலின் போது கூட தண்ணீர் சுடுவதில்லை. கணுக்கால் அளவு நீருக்குள் நின்று கொண்டிருக்கும் வேளையில் மேற்குப் புறமிருந்து ஆற்றில் எறியப்பட்டு தவழ்ந்து வரும் தென்றல் முகத்தையும், மார்பையும் முத்தமிடும் போது கிடைக்கும் சுகானந்தத்துக்கு ஒப்புவமையே கூற இயலாது.

ஆறுதல் பரிசுக் கதை – 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபுறடி பதின்மூன்றுக்குப் பத்து நீள அகலம் கொண்ட சிறியதொரு கட்டிடம். அதனுள் யார் என அடையாளம் தெரியாத ஒருவரின் கல்லறை. சில நூறு வருடங்களுக்கு முன்னர் வம்மி ஆற்றில் தோணியொன்றில் பயணம் செய்துகொண்டிருந்த முஸ்லிம் பெரியாரொருவர் கடுமையாகச் சுகயீனமுற்றதன் காரணமாக தொடர்ந்து செல்ல இயலாமல் அந்த இடத்தில் கரை தட்டி, அங்கேயே காலஞ்சென்றதாகவும், அவரின் ஜனாசா அடக்கப் பட்டதாக பின்னாட்களில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் கட்டிடமொன்றைக் கட்டியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறும். ஆரம்பத்தில் கபுறடி மட்டும் தான் இருந்ததாகவும், பல வருடங்களுக்குப் பின்னர் தொழுவதற்கான அறையொன்றும் அங்கு அமைக்கப்பட்டதாகவும் பேசிக் கொள்வார்கள்.

கபுறடியுடன் கூடிய பள்ளிவாசல் அமையப்பெற்ற இடம் முழுக்கவே தமிழ் மக்கள் அடர்த்தியாகக் குடியிருக்கும் பகுதி யாகும். மதப் பெரியார் காலஞ்சென்ற, அவருக்காக கபுறடி கட்டிய காலத்தில் அந்தப் பகுதி மனிதர்கள் வசிக்காத பொட்டைக் காடாக இருந்திருக்கலாம். இப்போது நிலைமை முழுதாக மாறிவிட்டது.

எனது கிராமத்திலிருந்து மட்டுமல்ல, வேறு எந்த முஸ்லிம் ஊர்களிலிருந்தும் கபுறடிக்குப் போகவேண்டுமெனில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் வதியும் கிராமங்கள் பலதைக் கடந்து தான் ஆக வேண்டும்.

கபுறடி கட்டப்பட்ட ஆரம்ப காலங்களில் ஆற்றங்கரை அப்பா வின் அருளால் அங்கு பல அற்புதங்கள் நடைபெற்றதாக கிராமங் களில் பேசிக்கொண்டார்கள். பிள்ளையில்லாதவர்கள் அப்பாவின் அடக்கஸ்தலத்துக்கு அருகே பரவிக் கிடக்கும் வெண் மணலைக் கழுவிய நீரைக் குடித்தால் கருத்தரிக்குமென்றும், வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் ஆல மர நிழலைக் கொண்ட ஆற்றின் கரையில் முழுக்காடி, கபுறடி மணலில் படுத்தெழும்பினால் நோய் பஞ்சாகப் பறக்குமென்றும், களவு போன பொருட்களைக் கண்டு பிடிக்க அடக்கஸ்தலத்துக்கு அருகில் இரவு வேளைகளில் எரிக்கப் படும் தேங்காய் எண்ணெய் விளக்கினுள்ளிருந்து சொட்டு எடுத்து உள்ளங்கையில் தடவி விட்டுப் பார்த்தால் களவெடுத்தவனின் முகம் தெரியுமென்றும் - பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதைகளின் பட்டியல நீளும்.

ஆற்றங்கரை அப்பாவின் கபுறடிக்குச் சென்று அற்புதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வந்தவர்களில் ஒருவரைத்தானும் எனது கிராமத்தில் எனக்குத தெரிந்திருக்கவில்லை. காலங்கள் செல்லச் செல்ல மக்களின் அறிவு பெருகி இவைகளெல்லாம் யாரோ சிலரின் வருமானத்துக் காகக் கட்டிவிடப்பட்ட கதைகள் என்ற எண்ணம் வலுப்பெற்றது.

அப்பாவின் கபுறடிக்கும், பள்ளிவாசலுக்கும் செல்பவர்கள் பொதுவாக முஸ்லீம்களாக இருந்தாலும், வருடா வருடம் முஹர்ரம் மாதம் பன்னிரெண்டாம் பிறையன்று இரவு நடைபெறும் கந்தூரி வைபவத்தில் கலந்துகொள்ள வருபவர்களில் கணிசமானோர் தமிழ் மக்களாவர்.

முஹர்ரம் மாதம் முதல் பிறை தினத்தில் பிற்பகல் வேளை யில் பிடரி மறைய முடி வளர்த்து, பச்சைக் குப்பாயம் அணிந்து, அதே பச்சை நிறத் துணியால் பின் குஞ்சத்துடன் கூடிய தலைப் பாகை தரித்து, கழுத்து நிறைய குண்டு குண்டான முத்து மாலை கள் ஜொலிக்க, கைகளில் றபான்களுடன் பல ஊர்களிலிருந்தும் பக்கீர்கள் ஆஜராகி, கபுறடியின் முன்னால் நிமிர்ந்து நிற்கும் கம்பத்தின் உச்சியில் அகன்ற கொடியொன்றை ஏற்றுவர். அன்று இரவு தொடக்கம் தினசரி அவர்களின் றாத்தீபு நடைபெறும். றாத்தீபு நிகழ்ச்சியைப் பார்ப்பதென்றால் என்னைப் போன்ற இளைஞர் களுக்கு ஏகப்பட்ட ஆனந்தம். பிறை பன்னிரெண்டாம் இரவு இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பல கிராமங்களிலிருந்தும் தமிழ், முஸ்லீம்களாக ஆயிரக்கணக்கானோர் வருகை தருவர். நிகழ்ச்சி யின் இறுதியில் வழங்குவதற்காக விசாலமான கூடாரங்களில் பாற்சோறு சமைப்பதற்கான தாளிப்பு வாசம் வம்மி ஆற்றின் மறு கரையில் நிற்பவர்களுக்குக் கூட வயிற்றில் கடமுடா சப்தங்களை உண்டாக்கும் எனப் பேசிக் கொள்வார்கள்.

அந்த வருட கொடியேற்றத்தின் இறுதி நாள் நிகழ்ச்சி ஒரு சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளதாக அறிந்தோம். அடுத்த நாள் விடுமுறையாகையால் மம்மத்தம்பி, கனியா, நூர்தீன், இஸ்மாயில் என நாங்கள் நண்பர்கள் சிலர் அதிகாலையிலேயே சைக்கிள்களில் புறப்பட்டோம். போகும் வழியில் ஏற்கனவே பேசி வைத்திருந்தவாறு வெவ்வேறு கிராமங்களில் வசிக்கும் எங்கள் பாடசாலை நண்பர்களான இராசையா, கந்தசாமி, கணபதி, முத்துலிங்கம் ஆகியோர்களின் வீடுகளுக்கும் சென்று அவர் களுடைய பெற்றோரால் தரப்பட்ட இளநீரையும், மோரையும் குடித்து தாகம் போக்கி .... அவர்களையும் எங்களோடு சேர்த்துக் கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணி சுமாருக்கு கபுறடியை அடைந்தோம். எங்களைப் போன்று வேறு கிராமங்களிலிருந்தும் வந்திருந்த பலர் அங்கு நின்றனர். காற்சட்டைகளிலிருந்தும் சாறன்களுக்கு மாறி, தற்காலிக ஹோட்டலில் தேனீர் குடித்து, ஆல மர விழுதுகளில் ஊஞ்சலாடி, சுட்டெரிக்கும் வெய்யிலிலும் கால்கள் பட்டவுடன் குளிர் தாக்கிய ஆற்று நீரில் முழுகி, தவழ்ந்து வந்த குளிர் தென்றலை வெற்று உடம்புகளில் பூசி, நீரினுள்ளால் நீந்திச் சென்று ஆளையாள் தெரியாமல் கால்களைப் பிடித்து வாரி விட்டு.....

பள்ளிவாசலில் கேட்ட பாங்கொலியைத் தொடர்ந்து முஸ்லீம் களாகிய நாங்கள் ஆற்று நீரில் வுளு செய்து, தொழுது, வீடு களிலிருந்து எடுத்துச் சென்றிருந்த சோற்றுப் பொதிகளை ஒன்றாக சீலையொன்றில் கொட்டி, வெட்டிய வாழை இலைகளில் அள்ளி வைத்துச் சாப்பிட்டு, தென்றல் வீசியதால் கண்ணயர்ந்து புளியமர நிழலில் உறங்கி.....

இரவு கந்தூரிக்குப் பின்னர்தான் பக்கீர்மார்களின் றாத்தீபு எனப் பேசிக் கொண்டார்கள். பொழுது படும் வேளையில் முஸ்லீம் களும், தமிழர்களுமாக சனக்கூட்டம் தத்தளிக்கத் தொடங்கியது.

கந்தூரி முடிந்த சற்று நேரத்தின் பின் பக்கீர்மார்களின் நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு அறிகுறியாக தஹராக்கள் தட்டப்பட்டன. அவர்களின் கலீபா நீண்ட வெண் தாடியுடன் நடுநாயகமாக வீற்றிருந்தார். ஊதுபத்திகளின் புகைப் படலம் மேலெழுந்து காற்றோடு கலந்து பக்திமயமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. கலீபா சப்தமிட்டு எதையெதையெல்லாமோ ஓதினார். சொல்லிவைத்தாற் போல் சுற்றிவர வீற்றிருந்த சகல பக்கீர்களும் ஏக நேரத்தில் தங்களுடைய இடது கைகளில் தூக்கிப் பிடித்திருந்த தஹராக்களை வலது கைகளினால் தட்டத் தொடங்கினர்.

நீண்ட நேரமாக தஹரா தட்டுவதும், பாடல்களைப் பாடு வதுமாக பக்தி சன்னதமான நிலையில் சபையை வைத்துக் கொண்டிருக்கும் போது, பக்கீர்களில் ஒருவர் எழுந்து மத்தியில் குவிந்து கிடந்த கூரிய ஆயுதங்களில் ஒன்றை எடுத்து, கலிபாவின் எதிரில் பவ்யமாக நீட்டி, அவர் தனது நாக்கில் வடிந்த உமிழ்நீரை வலது கை பெருவிரலால் நீவி ஆயுத முனையில் தடவி ஆசீர்வதிக்க, இவர் யாரும் எதிர்பாராத வேளையில் அதை வாயினுள் செலுத்தி கன்னச்சதையினூடாக முனையை வெளியே தள்ளினார். நான் சடுதியாக கண்களை மூடித் திறந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னங்கை தோலினுள்ளால் சொருகுவதும், உச்சந்தலையில் வைத்து அறைந்து தலைக்குள் ஏற்றுவதும், நாக்கை வெளியே இழுத்து அதனுள் ஆயுதத்தை ஏற்றுவதுமாக..... அப்போதெல்லாம் ஒரு சொட்டு இரத்தம் கூட வெளிவராதது இன்னும் எனக்கு ஆச்சரியம்தான்.

ஆற்றங்கரை அப்பா கபுறடியுடன் கூடிய பள்ளிவாசலுக்கு ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக எனது கிராம பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர்களால் முத்துக்காக்கா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். சியாரம், பள்ளிவாசல் ஆகியவற்றையும், அவைகளைச் சுற்றிவர ஆற்றங்கரை வரையுமுள்ள பகுதியையும் சுத்தமாக வைத்திருத்தல், ஐவேளையும் பாங்கு சொல்லுதல், தொழுவித்தல், மாலை வேளைகளில் விளக்கேற்றுதல் போன்றவை இவருக்காகச் சாட்டப்பட்டிருந்த பணிகளாகும். இவர் எனது தகப்பனாருக்கு தூரத்து சொந்தக்காரனும் கூட. வயது ஐம்பதுக்கு மேல் இருக்கலாம்.

முத்துக்காக்கா ஒரு நாள் பிற்பகல் எங்களது வீட்டுக்கு வந்தார். வாப்பாவுடன் அவர் கதைத்துக்கொண்டிருக்கும் பொது நான் அருகே நின்றேன்.

"முத்து, பள்ளிக்கு தொழ ஆக்கள் வாராங்களா?" வாப்பா கேட்டார்.

"எங்க வாராக. சுற்றி வர இருக்கிற எல்லாருமே தமிழ் ஆக்கள். மருந்துக்குக் கூட நம்ம ஆக்கள் அந்தப் பகுதியில இல்ல."

"அப்போ நீ மட்டும் தான் தனியே தொழுதுகொள்றே?"

"சே! சே!! அப்பிடியும் சொல்லக்கூடா. அந்தப். பகுதிக்கு வியாபார நோக்கமா வாரவங்க அங்கதான் பகல் தொழுகைக்கு வருவாங்க. ஆத்தில தோணியிலே போறவங்க எப்போதாவது இருந்திருந்துட்டு தோணியை தரை தட்டி தொழுதுட்டுப் போவாக."

"அங்கெல்லாம் என்ன யாவாரத்துக்கு வாராக?"

"முட்ட வாங்க, பழைய வெள்ளி தங்கம் வாங்க, அலுமினிய பாத்திரங்கள் துணிமணிகள் விக்க, மாடாடு வாங்க..... நீங்க வந்து பாக்கணுமே ஒரு நாளைக்கு எத்தனை பேர் நம்ம ஆக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பகுதிக்கு வாராங்கண்ணு."

வாப்பா என்ன நினைத்தாரோ சடுதியாகக் கேட்டார்.

"ஏன் முத்து, உங்கட சாப்பாடெல்லாம் எப்படி?"

"அதைச் சொன்னா ஆச்சரியப்படுவீங்க."

"ஏன்?"

"கிழமையிலே ரெண்டு மூணு நாள்தான் நான் சமைப்பேன். மற்ற நாட்களிலே இலவசம்தான்." முத்துக்காக்கா கூறிவிட்டுச் சிரித்தார்.

"அங்கதான் நம்ம ஆக்கள் இல்லியே. இலவசமாக எப்படி?"

"நான் பள்ளிவாசல்ல தனியா இருக்கிறேன்னு அக்கம் பக்க த்திலே இருக்கிற ஊட்டுக்காரங்க வேளாவேளைக்கு சாப்பாடு அனுப்புவாங்க."

"ஆரு தமிழ் ஆக்களா?"

"பின்னே?"

அவர் கூறியது எனது வாப்பாவை விட அந்த இளம் வயதில் என்னை மலைக்க வைத்தது.

நாட்கள் வாரங்களாக, மாதங்களாக, வருடங்களாகக் கழிந்தன. கல்வி, பொருளாதார, சமூக மாற்றங்கள் வேக வேகமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அரசியல் சிந்தனைகள், இனங் களுக்கிடையிலான வித்தியாசங்கள், வியாபார அரசியல்வாதிகளின் உள்நுளைவுகள், பேரின ஆதிக்கங்கள்...... ஆகியனவெல்லாம் போட்டிபோட்டு மக்களின் அமைதியான வாழ்க்கையுடன் விளை யாடத் தொடங்கின. பேச்சுவார்த்தைகளும், ஏமாற்றங்களுமான சங்கதிகள் பங்கு பிரித்துக் கேட்கக்கூடிய அளவுக்கு ஓர் இனத்தை ஆக்கின. நாளாக பிரச்சினைகளின் தாக்கமும், வேகமும் கூடி, இறுகி, வக்ரமடைந்த மனங்களையுடையவர்களாக மக்களை மாற்றி......

நாட்டில் இன வன்செயல்கள் நடைபெறத் தொடங்கின. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை நாளாந்த நிகழ்வுகளாகி..... முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமிடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பகை ஆரம்பமாகியது. ஆளையாள் வெட்டுதல், கொத்துதல், கூட்டத்தோடு கும்பலாகக் கொலைசெய்தல், வாகனங்கள் சொத்துக்கள் போன்றவற்றின் சேதங்கள், ஆட்கடத்தல், கட்டிட உடைப்புகள்..........

ஒரு இனத்தின் பரவலாக வாழும் கிராமங்களுக்குள்ளால் மற்ற இனத்தினர் பிரயாணம் செய்யத் தயங்கும் நிலை. எல்லைகளைக் கடக்குமட்டும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடவேண்டிய இக்கட்டு. முஸ்லிம் கிராமங்களுக்குள் தொழில் செய்து பிழைப்பவர்களின் அடிவயிறுகளில் வீழ்ந்த அடிகள் அவர்களின் வீட்டு அடுப்புகளுக்குள் பூனைகள் சுருண்டு படுக்க வேண்டிய நிலைக்கு ஆக்கின. தமிழ் மக்கள் பரவலாக வாழும் பகுதிகளுக்குள் வியாபாரம் செய்து பிழைத்தவர்கள் பழைய துவாய்த் துண்டுகளை தோள்களில் போட்டவாறு ஏக்கப் பெருமூச்சுகளுடன் தெருச் சுற்றினர்.

நல்லவர்களின் மனங்கள் குமுறி அழுதன.

நான் படித்து, பட்டதாரியாகி ஆசிரிய தொழிலில் சேர்ந்து கிராமத்திலுள்ள எனது சொந்தக்காரப் பெண்ணொருவரைத் திருமணம் செய்து, வேறு பல பரீட்சைகளில் சித்தியெய்தி தூரத்திலுள்ள பட்டினமொன்றில் கல்விக் காரியாலயத்தில் கடமையாற்றிக கொண்டிருக்கிறேன். பெருநாள் விடுமுறையொன்றின் போது மனைவி, பிள்ளைகளுடன் கிராமத்துக்குச் சென்றிருந்தேன். பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அஸர் தொழுகைக்காகச் சென்ற சமயத்தில் அகஸ்மாத்தாக முத்துக்காக்காவைச் சந்திக்க நேர்ந்தது. சுருங்கிய தோலும், வழுக்கைத் தலையும், நீண்ட வெண்தாடியுமாக கையில் பிடித்த கோலொன்றுடன் தொழ வந்திருந்தார். என்னை அறிமுகப்படுத்தியதும் இனங்கண்டுகொண்டார். ஆற்றங்கரை அப்பாசியாரம், பள்ளிவாசல் ஆகியவைகளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென அவாவுற்றேன்.

"அதை ஏன் கேக்கீங்க மகன். நம்ம பகுதியிலே நடந்த கூத்துக் களையெல்லாம் நீங்க அறிந்துதானே இருக்கீங்க. இத்தனை சம்பவங்களும் நடைபெற்ற பின்னாடியும் அந்தக் கட்டிடங்களை அப்படியே வைச்சிருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா?" அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் நினைக்கிறது இருக்கட்டும். கட்டிடங்களை இடித்துப் போட்டாங்கன்னு தகவல் கிடைச்சிருக்கா?"

"அப்படி ஒன்றும் இல்ல. ஒரு ஊகம்தான்."

"ஆருமே போய்ப் பார்க்கலையா?"

அவர் குழி விழுந்த கண்களால் என்னைப் பார்த்தார்.

"போறதா? பாக்கிறதா? எப்படித் தம்பி அந்த இடங்களுக் கெல்லாம் போறது? நம்ம ஆக்களின் நாத்தமே அந்தப் பகுதியிலே இல்ல. அப்படித்தான் போனாலும் நன்மைக்குத் தீமையா ஏதாவது ஆகிட்டா?"

"இப்பதான் பிரச்சினைகள் சுமுக நிலைமைக்கு வந்திட்டே. போய்ப் பார்த்தால் என்ன?"

"என்னமோ உங்கட இஷ்டம்."

முத்துக்காக்கா என்னதான் சொன்னாலும் ஆற்றங்கரை அப்பா சியாரத்தினதும், பள்ளிவாசலினதும் தற்போதைய நிலையை அறியவே வேண்டுமென மனம் துடித்தது. அதற்கேற்றாற்போல அடுத்த நாள் சந்தைக்கூடத்தில் எனது பாடசாலை நண்பன் கணபதியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அடுத்து வந்த ஞாயிறு காலை சுப்ஹு தொழுகையை முடித்த கையுடன் நானும், மம்மத்தம்பியும், கனீபாவும் ஆற்றங்கரை அப்பா பள்ளிவாசலுக்குப் போவதற்காக ஆயத்தமானோம்.

"எதற்கும் சில ஆயுதங்களையும் எடுத்துக் கொள்வோம்" என்றான் கனீபா.

"எதுக்கு?" நான் கேட்டேன்.

"ஏதாவது ஏடாகூடமாக ஆகிவிட்டா நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமல்லவா?"

நான் வாய்விட்டுச் சிரித்தேன்.

"நான் மனிதர்களை நம்புபவன். அவர்களை மதிப்பவன். இறைவன் குடியிருக்கும் இல்லத்தைப் பார்க்க கத்தி தடியுடனா போவது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது காரில் புறப்பட்டுச் சென்ற நாங்கள் வழியில் பாதை யோரமாகக் காத்து நின்ற கணபதியையும் ஏற்றிக்கொண்டோம். முத்துலிங்கத்தின் வீட்டுக்குச் சென்று அவருடன் கதைத்து எங்களுடன் சேர்த்துக் கொண்டோம்.

நாற்சந்தியிலிருந்து பிரிந்து சென்ற மணல்பாதை தார் வீதியாக மாறியிருந்தது. பொட்டல் காடுகள் அழிக்கப்பட்டு பாதையின் இரு மருங்கும் உயர்ந்த கல் வீடுகள் உருவாகியிருந்தன.

காலை எட்டு மணிக்கெல்லாம் போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைந்துவிட்டோம். காரை பாதையின் ஓரமாக நிறுத்தி விட்டு இறங்க..... சியாரம், பள்ளிவாசல் கட்டிடங்கள் எங்களைப் பார்த்துச் சிரித்தன. ஆல மரத்தின் விழுதுகளும், வேம்பு புளிய மரங்களின் இலைகளடர்ந்த கிளைகளும் மெதுவாக அசைந்து வரவேற்றன.

ஆவல் மிகுதியால் நான்கு எட்டில் பூட்டியிருந்த கட்டிடங் களை அடைந்து ஜன்னல் கிரில்களினூடாக உள்ளே எட்டிப் பார்த்தேன். லாந்தரொன்று இன்னும் சிறிது நேரத்தில் உயிரை விடப் போகிறேனென உமிழ்ந்துகொண்டிருந்தது. நாங்கள் ஆளையாள் ஆச்சரிய விழிகளால் பார்த்துக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீடொன்றின் கேட்டைத் திறந்தவாறு கையில் விளக்குமாறுடன் வந்த சராசரி வயது மதிக்கத்தக்க பெண்மணி யொருவர் கட்டிடங்களின் முற்றத்தில் வீழ்ந்து கிடந்த பழுத்த இலைகளைப் பெருக்கத் தொடங்கினார்.

"நீங்களெல்லாம் ஆரு?" அவர் கேட்டார்.

சொன்னோம்.

"கடவுளே! இத்தனை வருசங்களுக்குப் பொறகு இப்பத்தான் உங்க பள்ளிவாசலைப் பாக்க வாறீகளா? கொஞ்சம் நில்லுங்க. ஆறுமுகம் அண்ணனைக் கூட்டிக் கொண்டு வாறன்."

சியராம், பள்ளிவாசல் கட்டிடங்களில் எந்த உடைவுகளும் இருக்கவில்லை. மாறாக, சமீபத்தில் வெண்சாந்து பூசப்பட்டதற்கான ஆதாரங்கள் தெரிந்தன.

சுமார் கால் மணி நேரத்தினுள் நெற்றியில் விபூதி பூசிய அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் வேஷ்டி அணிந்து, பருத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த மார்பை துவாயால் போர்த்தியவாறு எங்களை நோக்கி வந்தார். முகமலர்ந்தார். எங்களை அறிமுகப்படுத்தினோம்.

"இத்தனை நாட்கள் நீங்க ஆருமே இந்தப் பள்ளிவாசல் இருக்குதா இல்லியான்னு கூட பாக்க வரல்லியே?" என்றார் பொய்க் கோபத்துடன்.

"நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் உங்களுக்குத் தெரியும்தானே" என்றேன் நான்.

"ஐயா. இந்தப் பகுதியிலே உள்ளவங்க இந்தக் கட்டிடங் களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கியிருப்பாங்க எனத்தான் நாங்க நினைச்சிருந்தோம்" என்றான் கனிபா.

"இடிக்கிறதா?" கூறிவிட்டு ஆறுமுகம் இடியிடியெனச் சிரித்தார்.

"வன்செயல் உக்கிரமான ஒரு சமயத்திலே வேற ஊர்களி லேயிருந்து இவைகளை இடித்து நொறுக்குவதற்காக ஒரு கும்பல் வந்தது உண்மைதான். ஆனா, நாங்க ஊர் மக்கள் சகலரும் ஒன்றாக எதிர்த்து நின்று அவங்களைத் துரத்திவிட்டோம்"

"நீங்க சொல்லும் போது மயிர்கள் புல்லரிக்குது" என்றான் மம்மத்தம்பி.

"இது ஆண்டவன் வாழும் இல்லம் ஐயா. மார்க்கம் என்பது என்ன? ஒருவன் நிம்மதியாக வாழுவதற்கு வழி காட்டுவது. அத்தகைய ஒரு மார்க்கத்துக்குச் சொந்தமான பள்ளிவாசலை பிறிதொரு மார்க்கத்தைப் பின்பற்றும் ஒரு சாரார் இடிக்கலாமோ? கூடாது ஐயா. கூடவே கூடாது. நாங்க இதை இடித்தா கடவுளின் பழி எங்கள் மீது இறங்குமே தவிர எங்களுக்குப் பாவ விமோசனமே இல்லாமப் போகும். வாங்க உள்ளே போய்ப் பார்க்கலாம்." இடுப்பில சொருகியிருந்த சாவிக்கொத்தை கையில் எடுத்தவாறு ஆறுமுகம் அழைத்தார்.

பள்ளிவாசலின் படிக்கட்டை நெருங்கினோம். முஸ்லீம் களாகிய நாங்கள் மூவரும் சப்பாத்துக்களைக் கழற்றியபோது, ஆறுமுகம் தான் அணிந்திருந்த செருப்புக்களைக் கழற்றி விட்டு எதிரே நிலையில் அடித்திருந்த ஆணியொன்றில் தொங்கிய உறை யொன்றினுள்ளிருந்து இரண்டு காலுறைகளை எடுத்தார். கால்களில் அணிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா, ஐயா இதை ஏன் நீங்க அணிகிறீங்க?" கனீபா ஆவலை அடக்கமுடியாமல் கேட்டான்.

"ஆண்டவனைத் தொழும் அறைக்குள்ள நீங்க கால்களைக் கழுவிவிட்டுத்தான் போவீங்க என்பது எனக்குத் தெரியும். நான் என் அழுக்குக் கால்களோட அந்தத் தரையிலே மிதிக்க விரும்பல்ல. ஊதுபத்தி கொளுத்த, விளக்கேற்ற, ஒட்டடை தூசி துடைக்க, கூட்டிப் பெருக்க...... இப்படி பல தேவைகளுக்காக நான் தினசரி உள்ளே போகும் போதெல்லாம் இவைகளை அணிந்து கொள்வேன். உங்களுக்குத் தெரியுமா ரெண்டு மேசன்மாரைப் பிடித்து உள்ளேயும் வெளியேயும் சுவர்களுக்கு வெள்ளை அடிப்பித்தேன். அவங்களுக்குக் கூட காலுறை வாங்கிக் கொடுத்துப் போடச் சொன்னேன்."

அவர் எனக்கு இமயமாகக் காட்சி தந்தார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விடியல் பொழுதில்.....

## சோ.ராமேஸ்வரன்

விடியலின் குளிர்காற்று இடையிடையே வீசினாலும், அகோரத்தின் தன்மையை காற்று தன்னுடன் அரவணைத்தே வைத்திருந்தது. வழிந்தோடிய வியர்வையை குளிர்மை அள்ளிச் செல்ல முற்படுகையில் அகோரம் அதைத் தடுத்து நிறுத்த.....

செல்லத்துரை தனது சால்வையால் முகத்தை அழுத்தித் தொடைத்தார். அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. மீண்டும் முகத்தைத் தொடைத்தார். பிடரிப்பக்கமாக சால்வையால் ஒத்தி யெடுத்தார். கழுத்தைச் சுற்றி சால்வையை வலம் வரச் செய்தார். சால்வையை ஒரு முறை உதறினார். அப்படியே முழு முகத்தையும் சால்வையால் தொடைத்தார். இப்போது ஓரளவு திருப்தி. புத்துணர்ச்சி உடலைத் தாராளமாகத் தழுவியது. சால்வையைத் தோளில் போட்டுவிட்டு, நரைத்திருந்த தலைமயிரைக் கைவிரல்களினால் கோதினார். அறுபது வருடமாகப் படியாத தலைமயிர் குழம்பிய படிதான் இருந்தது.

ஆகாயத்தை ஒரு முறை நோக்கினார் செல்லத்துரை. நெடுமூச்சொன்று வெளிப்பட்டது. 'சேர்ட்பொக்கட்'டில் இருந்த சுருட்டை எடுத்து வாயில் பொருத்தி விட்டு, இடுப்பில் வேட்டி மடிப்பினுள் செருகியிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்தார்.

தீக்குச்சியை பெட்டியில் உரசி விட்டு சுருட்டுக்கு சுவாலை யைக் கொண்டு போக முற்படுகையில் காற்று வேகத்துடன் வீச, சுவாலை அணைந்து விடுகின்றது. மீண்டும் தீக்குச்சியொன்றை எடுத்து உரச முற்படுகையில்.....

ஆறுதல் பரிசுக் கதை - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியவர்..... சுருட்டைப் பத்தாதேங்கோ நாத்தம் தாங்க ஏலாது."

பின்னால் இருந்து குரல் ஒன்று வர செல்லத்துரை திரும்பிப் பார்க்க..... முரட்டுத் தோற்றத்துடன், அச்சுறுத்தும் முகத்துடன் ஒருவன் நிற்க, அவர் சுருட்டைப் பற்ற வைக்காமல் அவனை முறைத்துப் பார்த்தார். அப்பார்வையின் அச்சுறுத்தல் அவனில் சலனத்தை ஏற்படுத்தவில்லை. செல்லத்துரை பார்வையைத் திருப்பினார். நெருப்புக் குச்சியை பெட்டிக்குள் அடைக்கக் கொண்டு சென்றவர், என்ன நினைத்தாரோ அவ்வாறு செய்யவில்லை. குச்சியினால் காதைக் குடையத் தொடங்கினார். சுகமாக இருந்தது. சுருட்டைப் பத்திரப்படுத்தினார்.

குளிர் காற்று வேகமாக வீசியது. செல்லத்துரையின் சால்வை தோளிலிருந்து நழுவி கீழே விழ..... சலிப்புடன் குனிந்து அதை எடுத்தவர், வானத்தைக் கண்களால் துழாவினார். கரிய முகில்கள் வானத்தில் ஓட்டம்பிடித்தன. பிரகாசித்துக் கொண்டிருந்த நிலவும் மறைக்கப்பட்டுவிட்டது. வானத்தில் கருமை.

'மழை பெய்யப் போகுது போல.....' மனதில் ஒரு சின்னப் பயம்.

அந்த வீதி, மின் விளக்குகளினால் பிரகாசித்தது. ஆதலினால் இருள் விரட்டப்பட்டிருந்தது. இவர்கள் நின்றிருந்த வரிசையின் முன்புறத்தில் - வீதியோரமாக மின் விளக்கொன்று எரிந்தது. அதன் வெளிச்சம் இவர்கள் மீது வஞ்சகம் இல்லாமல் தெளிவாக விழுந்திருந்தது. ஒருவரையொருவர் அடையாளம் காணக்கூடிய வெளிச்சம்.

ஐரோப்பிய நாடொன்றின் தூதுவராலயத்தின் பெயர்ப் பலகையொன்று இவர்கள் முன்னால் கம்பீரமாக உயர்ந்திருந்த மதிலில் அறையப்பட்டிருந்து.

அந்த வரிசையில் எல்லாமாக - ஆண், பெண், வயதானோர், இளைஞர் என்று எப்படியும் முப்பது பேர் நின்றனர். அடுத்த நாள் காலை அந்த தூதுவராலயத்தின் கரும பீடத்தை அடைந்து தமக்குரிய 'விசா'வுக்கான படிவங்களை நீட்டுவதற்கு காத்திருப் போர் தான் அந்த வரிசையின் நாயகர்கள். எல்லாவற்றுக்கும் போட்டி என்ற இன்னாளில் இதுக்கும் ஒரு போட்டி. வரிசையில் முதலாவது வந்து நிற்பவர் நள்ளிரவே வந்து விடுவார். முழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறக்கத்தையும் கெடுத்து, குளிர், வெட்கை, தூசி, நுளம்புகளின் ‘டெங்குக்’ கடி ஆகியவற்றை உதாசீனம் செய்து, மழை பெய்தால் அதற்கும், அங்கு தோன்றும் ஏமாற்றுக்காரர்களுக்கும் தம்மைப் பாதுகாத்து கரும பீடத்தை ஒன்பது மணியளவில் அடைவது தான் அவர்கள் இலக்கு. அடைந்துவிட்டால் அதன் பின் பல்-கோணங்களில், பல்-வழிகளில் என்று ஒரு ‘சத்திய சோதனை’. அதில் வெற்றி அடைந்தால் ‘விசா’ எடுப்பதற்கு மீண்டும் வந்தால் போதும். இல்லாவிட்டால் சின்ன சம்பாஷணையில் அந்தக் களைப்புக்கு, அயர்ச்சிக்கு, வெறுப்புக்கு ஒரு சுமையை நிறையவே ஏற்றிவிடுவார்கள். மீண்டும் அதே போன்ற அனுபவத்திற்கும் ஆளாகி.....

செல்லத்துரை அநாகரிகமாக, சின்னச் சத்தத்துடன் கொட்டாவி விட்டார். முன்னால் நின்றவரின் கைக்கடிகாரத்தை நோக்க, அது இரண்டைக் காட்டியது. அந்த கசப்பான உண்மை இன்னொரு கொட்டாவியை வலிந்து வரவழைத்தது. நான்கு மணி நேரமாகக் கால் கடுக்க நின்றுவிட்டார்.

வேகத்துடன் ஒரு ஈரமான காற்றோட்டம். அதைத் தொடர்ந்து மழைத் துளிகளின் ஒரு சின்ன அர்ச்சனை....... மடக்கப்பட்டிருந்த சில குடைகள் மேலே கிளம்பி விரிந்தன. அந்தக் குடைக்குள் உரிமையற்றவர்கள் தலையை நீட்டி மழைத்துளிகளிலிருந்து தங்கள் தலைகளைக் காப்பற்ற பிரயத்தனம் எடுக்க......

துளிகளின் ஆக்ரோஷம் அதிகரிக்க...... வரிசையில் நின்றவர்கள் சிலர் அங்கிருந்து ஓடிச் சென்று வீதிக்கு மறுபுறத்தில் ஓங்கி, கிளை பரப்பி நின்றிருந்த மரத்தின் கீழே தமது உடலை செருகி நின்று மழைத் துளிகளில் இருந்த தப்பிக்க முயல...... வரிசையின் கட்டுக்கோப்பு குலைந்து விடுகின்றது. பின்னால் நின்றவர்கள் இது தான் தருணம் என்று முன்புறத்திற்கு வர...... வீதியின் மறு புறத்தில் இருந்து வித்தியாசமான குரல்களில் எச்சரிக்கை வார்த்தைகள்.

“ஏய்..... ஏய்..... என்ர இடம்.....” அதைத் தொடர்ந்து அகராதியில் காணப்படாத ஒரு வார்த்தையின் அபிஷேகம்.....

“டேய் தூஷணம் கதையாதேங்கோ..... பெண்டுகள், பெடிச்சிகள் நிக்குதுகள்.....” செல்லத்துரை குரலை உயர்த்தினார்.

“ஆரடா அவன்.....”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை பார்வையால் இருளைக் கிழித்தார்.

குரலுக்குரியவர் அவர் கண்களுக்குள் சிக்கவில்லை.

மழைத் துளிகளின் சீற்றம் கட்டு மீறியது.

“முருகா.....” செல்லத்துரை புலம்பியவண்ணம் தோளில் தொங்கிக் கொண்டிருந்த சால்வையினால் தலையை போர்த்தினார்.

ஐந்து நிமிடங்களுக்கு மழையின் வேகத்திற்கு தடையில்லை. வஞ்சகம் செய்யாமல் பொழிந்து தள்ளியது.

செல்லத்துரை நன்றாக நனைந்துவிட்டார். ‘சேர்ட்’, வேட்டி தெப்பமாக நனைந்துவிட்டன.

“ ‘அங்கிள்’, குடைக்குள்ள வாங்கோ.....” பின்புறமாக நின்ற இளைஞன் ஒருவன் அழைப்பு விடுத்தான்.

“வேண்டாம் தம்பி. நல்லா நனைஞ்சிட்டன். இப்படியே நிக்கிறன்.”

செல்லத்துரை இளைஞனைத் திரும்பிப் பார்க்காமலேயே பதில் கூறினார். வாத்தைகளில் பலம் இல்லை.

மழையின் சீற்றம் அடங்கியது. மரத்தின் கீழே ஒதுங்கி நின்றவர்கள் திரும்பி வந்து, அவரவர் இடங்களில் நிற்க முற்பட..... ஒரு சிறு சலசலப்பு..... ஒருவரை ஒருவர் தள்ளுவதும்..... வார்த்தை களை அநாகரீகமாக வீசுவதும்..... ஒருவர் இன்னொருவரைக் குடையால் தாக்க முற்பட்டதும்.....

பின்னால் என்ன நடக்குது என்று திரும்பி பார்த்துவிட்டு முன்னால் முகத்தைத் திருப்ப, செல்லத்துரையின் முன்பாக ஒரு அந்நியன் நிற்கிறான். வரிசைக்கு புதியவன். “நீ..... நீ..... இதில நின்டனியோ?” செல்லத்துரை ஒருமையில் விளிக்க, அவன் இவரை இளக்காரமாக நோக்கினான்.

“அங்காலை போ..... நீ இதில நிக்க இல்ல..... எங்கை இருந்து வந்தனீ?”

அந்த இளைஞன் சற்று உயரமானவன். உயரத்திற்கேற்ற தேகக்கட்டு. இறுக்கம் நிறைய. கறுத்த மேனி. கொடூரமான மீசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை, கன்ன நரம்புகள் புடைத்திருந்தன. எதற்கும் துணிந்தவன் என்று அர்த்தம் கற்பிக்கும் முகம்.

அவன் அசையவில்லை. செல்லத்துரை அவன் முதுகில் கை வைத்து தள்ளினார். முன்னால் நின்றவருடன் இடிபட்டவன் செல்லத்துரையைப் பார்த்து முறைத்தான். "போ..... போ....." என செல்லத்துரை அவனை மீண்டும் தள்ளினார்.

"மொனவாத?" (என்ன) எனக் கேட்டபடி அவன் செல்லத் துரையை நெருங்கி, அவர் கழுத்தில் கையை வைக்க, செல்லத் துரை இதை எதிர்பார்க்கவில்லை. 'வெலவெல'த்துப் போனார்.

கழுத்தைத் திருகி கொன்றுவிடுவேன் என சிங்களத்தில் அச்சுறுத்தினான்.

செல்லத்துரைக்கு கோபம் உச்சந்தலைக்கு ஏறியது. 'டேய் நான் பனங்காட்டு நரி' என்று சொல்ல அவர் துடித்தார். ஆனால், அதைச் சொல்வதற்கான துணிச்சல் இருக்கவில்லை. சொற்கள் தொண்டைக்குள் இறுகின மாதிரி.....

செல்லத்துரை அவனை முறைத்துப் பார்த்தாரே தவிர அடுத்த நடவடிக்கையில் இறங்கத் தயங்கினார்.

அவன் திரும்பிவிட்டான். ஒரு 'சிகரெட்டைப்' பற்ற வைத்து ஆயாசமாகப் புகைவிட்டான்.

"இஞ்சருங்கோ, இவன் இந்த 'எம்பஸியில செக்கியூரிட்டியா' வேலை பார்க்கிறான். சும்மா வாயைக் குடுத்து வேண்டிக் கட்டாதேங்கோ..... 'விசா' இல்லாமல் கூட செய்து விடுவான். உள்ளுக்கையும் இவனுக்கு 'சப்போட்' இருக்குது."

சற்றுப் பின்னால் நின்ற நடுத்தர வயதுக்காரர் ஒருவர் முன்னால் வந்து செல்லத்துரையின் காதுக்குள் குசுகுசுத்தார்.

செல்லத்துரை 'செக்கியூரிட்டி கார்ட்டை' ஒரு முறை ஏற இறங்க பார்த்தார். அவனைப் பிடித்து ஒரு உதைவிட்டு, நையப் புடைக்க வேண்டும் என்ற உணர்வு முகிழ்விட..... அவருள் கிளர்ந்தெழுந்த ஆத்திரம் இன்னும் அடங்கவில்லை. ஆனால், அதைத் தொடர்ந்து இடம்பெறும் எதிர்விளைவை எண்ணிப் பார்க்க...... பாம்புப் புற்றுக்குள் கைவிடும் தைரியம் அவரிடம் இல்லை. பேசாமல் தன் உணர்வலைகளை அடக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும், உள்மனதில் உணர்வின் வீக்கம் நிமிடத்திற்கு ஒரு தடவை உடைப்பெடுக்க முற்பட்டது. அடிக்கடி ஓரக்கண்ணால் அவன் செயலை வெறுப்புடன் நோக்குவதும், பேசாமல் மௌனியாக நிற்கும் மற்றவர்களை இலேசாக நோக்குவதுமாக செல்லத்துரை நேரத்தை வெறுப்புடன் கடத்தினார்.

"இது இஞ்ச ஒவ்வொரு நாளும் நடக்கிற சங்கதி. ஒன்றில் இவன் வருவான். இல்லாட்டி இன்னொருத்தன் வருவான். ஒன்றிரண்டு மணித்தியாலம் நிண்டு விட்டு ஆருக்கும் இடத்தை வித்துப் போட்டு போறதுதான் இவங்கட வேலை. இதை ஒருத்தராலயும் நிப்பாட்ட ஏலாது."

மற்றவரின் விளக்கத்தை செவிமடுக்கும் நிலையில் செல்லத் துரை விளங்கவில்லை. ஆத்திரமும், கோபமும் அவரின் சிந்தனா சக்தியை துரத்திக் கொண்டிருந்தன. 'செக்கியூரிட்டி கார்டை' அங்கிருந்து எவ்வாறு அப்புறப்படுத்துவது என்ற சிந்தனை தான் நீண்டிருந்தது.

வரிசையில் மேலும் சிலர் இணைந்து கொள்கின்றனர்.

நேரமும் நகர்கின்றது.

**செ**ல்லத்துரை இரண்டு, மூன்று தடவைகள் விடாமல் கொட்டாவி விட்டார்.

நேரத்தைப் பார்த்தார். நான்கு மணி. விடிவதற்கு இன்னும் நேரம் இருந்தது.

வயிற்றில் ஓர் எரிவு. கடந்த சில மாதங்களாக 'அல்சர்' வந்து அவரைக் கண்ட கண்ட நேரங்களில் வாட்டியது. முதல் நாளிரவு ஏழு மணி போல் 'லொட்ஜுக்கு' முன்புறமாகவுள்ள சைவ 'ஹொட்டேலில்' பத்து இடியப்பமும், சொதியும், ஒரு உளுந்து வடையும், அதற்கு மேல் ஒரு கோப்பை பாலும் அவர் வயிற்றை நிரப்பி இருந்தன.

இரவு முழுவதும் தூக்கம் இல்லாததினால் சாப்பாடு செமித்து விட்டது. இப்பொழுது பசி வயிற்றைக் குடைகின்றது. ஏதாவது விழுங்காவிட்டால் எரிவு கூடிவிடும். பக்கத்தில் ஒரு சாப்பாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையும் இல்லை. வரும் பொழுது ஒரு ‘பக்கெட் பிஸ்கட்’டைக் கொண்டு வந்திருக்கலாம். மகள்காரியும் ஒரு தடவை நினைப் பூட்டினாள். வேண்டாம் என்று வந்துவிட்டார்.

இனி மகள் வரும் வரை அந்த இடத்தை விட்டு நகர முடியாது. அவள் ஆறு மணி போல வருவதாகக் கூறியிருந்தாள். நிறைமாதக் கர்ப்பிணி. மருமகன் நாட்டைவிட்டுப் போகும் போது நாளும், பொழுதும் மசக்கையினால் வாடினாள். அவர் அங்கு போய் சட்டுபுட்டென காரியத்தைச் செய்து எல்லா ஆவணங் களையும் அனுப்பி வைத்தார். இங்கும் சில ஆவணங்களைத் தேடிப் பெற வேண்டியிருந்தது. மொழிபெயர்ப்பும் செய்ய வேண்டி யிருந்தது.

எல்லாவற்றையும் திரட்டி விட்டு போன வாரம் ‘எம்பஸி’க்கு காலையில் வரத்தான் அங்குள்ள உண்மை நிலை அவருக்குப் புரிந்தது. முதல் நாளிரவே வரிசையில் நின்று, காலை எட்டு மணி போல் ‘எம்பஸி’ அதிகாரி ஒருவர் இலக்கத் துண்டைக் கொடுத்தால் தான் உள்ளே செல்ல அனுமதி. இந்த உண்மை செல்லத்துரைக்கு கசந்தது. ஓர் இரவு முழுவதும் நித்திரையை தியாகம் செய்யும் நிலையில் அவர் உடல் இல்லை. மகளுக்கும் அது தெரியும்.

“ஐயா, நான் போய் நிக்கட்டோ?”

“நீ.....” செல்லத்துரையின் முகம் கூம்பிவிட்டது. மலிவான கவலை. “வேண்டாம். என்னாலை ஏலும். நிண்டு பார்ப்பம்.”

அவர் ‘லொட்ஜை’ விட்டுப் புறப்படும் போது மகளின் முகத்தில் தெரிந்த பாச உணர்வு, அதையும் மீறிய நன்றி உணர்வு.....

‘லொட்ஜ்’ மனேஜரின் முகம் அவர் மனதில் முற்றுப் புள்ளியிட்டது. இரண்டு மூன்று நாட்களாக அறை வாடகையைத் தா என்று சொல்லி ஒரே நச்சரிப்பு. முதல் நாள் மாலை அதிகாரக் குரலில் ஓர் எச்சரிக்கை. “நாளைக்கு காசை ‘செட்டில்’ பண்ணா ட்டால் நான் வேறை வழியைத்தான் பார்க்க வேணும்” என்று பொருமிவிட்டு, கதவைச் ‘சடா’ரென்று மூடிக்கொண்டு போய்விட்டார்.

ஊரில் இருந்து கொண்டு வந்த பணம் கரைந்துவிட்டது. வெளிநாட்டில் இருக்கும் மருமகனிடமிருந்து காசை எதிர்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அடுத்த நடவடிக்கையாக என்ன செய்வதென்று தெரியாத ஒரு திரிசங்கு நிலை.

எங்கிருந்தோ இருளைத் துளைத்து வந்தவர்கள் போல இரு பொலிஸ்காரர் செல்லத்துரை முன்பாக நின்றனர். "விசா எடுக்கவா" என்று ஒருத்தன் கேட்டான்.

"ஓமோம்" என செல்லத்துரை பெரிதாக தலையை ஆட்டினார்.

"ஆருக்கு?"

"மேளுக்கு."

"எங்கை ஆள்?"

"லொட்ஜில....."

'லொட்ஜ்' என்றதும் இரு பொலிசாரினதும் முகங்களில் இறுக்கம். எந்த 'லொட்ஜ்', மகள் எங்கே? எப்பொழுது கொழும்பு வந்தாய்? மருமகன் எங்கே? மனைவி, மற்றப் பிள்ளைகள் எங்கே என்று நிறையக் கேள்விகள். செல்லத்துரை தடுமாறிவிட்டார். ஒருத்தன் அவர் 'சேர்ட் பொக்கட்'டுக்குள் கைவிட்டான். நனைந்திருந்த சுருட்டுத் தான் அவன் விரலுக்குள் சிக்கியது. கைவிரலை மணந்து பார்த்துவிட்டு அவரைச் சிங்களத்தில் ஏசினான்.

பின் இருவரும் அங்கிருந்து அகன்றனர். தூரத்தில் அவர்கள் நடந்து செல்லும் போது தான் செல்லத்துரை அவர்களைப் பார்வையால் குறிவைத்தார். அவர்கள் அருகாக இரு இளைஞர் பலிகடாக்களாக நடந்தனர். வரிசையில் நின்றவர்கள்.

செல்லத்துரையின் மனம் இப்பொழுது பதட்டத்தில். இன்னும் ஒரு மணித்தியாலத்தில் மகள் வந்து விடுவாள். அவளுக்கு இடம்விட்டுட்டு அவர் அங்கிருந்து அகல வேண்டும். அதன் பின் அவளுக்கு இலக்கத்துண்டு நீட்டப்படும். அதைக் கொண்டு அவள் உள்ளே போக வேண்டும். அங்கு விசாரணை நடக்கும். அவர்கள் திருப்தியடைந்தால் 'விசா' கிடைக்கும். இல்லாவிட்டால் அலைச்சல் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முருகா.....' செல்லத்துரையின் மனதில் நிறைய வேண்டுதல். 'எல்லாம் சரிவந்தால் உனக்கு ஆயிரம் மோதகம் அவிப்பன்', 'அந்த நாள் மாதிரி எண்டால் ஒரு கூத்து கூட ஆடுவன்....'

இருளின் சுமை விலகி, இலேசான வெளிச்சம் வரத் துடிக்கின்றது. 'செக்கியூரிட்டி காரர்ட்'டை ஒருவன் நெருங்குகிறான். அவன் காதில் 'எதையெதையோ' குசுகுசுக்கிறான். 'செக்கியூரிட்டி காரர்ட்' தலையினால் மறுப்புக் கூறுகின்றான். இருவரும் மெல்லிய குரலில் வாக்குவாதப்படுகின்றனர். வாக்குவாதம் அடங்குகின்றது. புதிதாக வந்தவன் தனது 'சேர்ட் பொக்கட்'டுக்குள் கையை விட்டு ஒரு பச்சைத்தாளை எடுத்து நீட்டினான். 'செக்கியூரிட்டி காரர்ட்' அதை லாவகமாக தனது 'சேர்ட் பொக்கட்'டுக்குள் செருகியவன், அங்கிருந்து அகன்றான். அவனுள் நிறைய மகிழ்ச்சி, பெருமிதம். அதை முகம் அழகாகப் புடம் போட்டுக் காட்டியது.

புதிதாக வரிசையில் நின்றவன் செல்லத்துரையைப் பார்த்து அறிமுகப் புன்னகையொன்றை வெளியிட்டான். செல்லத்துரை பல்வித உணர்ச்சிகளினால் தன் நிலைக்கு அப்பால் விளங்கினார். கோபம், ஆத்திரம், சினம், எரிச்சல் என்ற உணர்ச்சிகளின் கலப்பு.....

"நீங்கள் எல்லாம் கள்ளரை வளர்த்து விடுறியள்". பொறுக்க முடியாமல் செல்லத்துரை கூறிவிடுகின்றார்.

"என்ன செய்யுறது. உங்களைப் போல கால்கடுக்க என்னால நிக்க ஏலாது. அதால தான்....." புதியவன் வார்த்தைகளை விழுங்கி னான்.

"அவன் வரிசையில நிண்டு தன்ர இடத்தை வித்தாப் பரவாயில்லை. திடுதிப்பென்று தருணம் பார்த்து வரிசைக்குள்ள புகுந்து ஒரு மணித்தியாலம் நிண்டு போட்டு சுளையா ஆயிரத்தை சுருட்டிக் கொண்டு போயிட்டான்..... அவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும். இல்லாட்டி....."

செல்லத்துரை இன்னும் மறுதலை உணர்ச்சிகள் கலையாத நிலையில் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்துவிட்டது.

வீதியின் சுறுசுறுப்பு அதிகரித்துவிட்டது. பாதசாரிகளின் நடமாட்டம், வாகனங்களின் ஓட்டம் என்று வீதியின் அமைதி குலைகின்றது. இனிமேல் எல்லாமே இயந்திரமயம்தான்.

ஆறு மணி.

அரை மணி நேரம் மேலும் முன்னேறுகிறது.

செல்லத்துரையின் மனம் இப்பொழுது துடிதுடிக்கிறது. மகள் எங்கே? ஆறு மணிக்கு எப்படியும் வந்துவிடுவதாகக் கூறி யிருந்தாளே! எங்கே அவள்?

இப்போது வரிசையில் நின்றவர்கள் தம்மை ஆசுவாசப் படுத்தினர். தலைமயிரை வாருவதும், உடைகளைச் சரிப்படுத்து வதும்..... ஒருத்தி 'சர்'ரென்று நறுமணத்தை தன் கமக்கட்டுக்குள் விசிறினாள்.

"எட்டு மணி போல ஒரு 'ஓ.்.பிஸர்' வந்து 'நம்பர்' குடுப்பார். ஒன்பது மணிக்குத் தான் 'கேட்'டை திறப்பாங்கள்..... பதினைஞ்சு 'நம்பர்' தான் குடுப்பினம். சில வேளையில அதை விடக் கூடவும் குடுப்பார். அது 'ஓ.்.பிஸரைப்' பொறுத்தது....." முன்னால் நின்றவர் இன்னொருவரிடம் கூறுவது கேட்கிறது.

"வரிசையில் ஐம்பது, அறுபது பேர் நிக்கினம் போலை."

"ஓ..... பின்னால நிக்கிற ஆக்களுக்கு தங்களுக்கும் 'நம்பர்' கிடைக்கும் எண்டு ஒரு நப்பாசை....."

செல்லத்துரை முதன்முதலாக நின்றவரிலிருந்து ஒருத்தர் ஒருத்தராக எண்ணினார். அவர் பதின்மூன்றாவதாக நிற்கிறார். நிச்சயமாக இலக்கத்துண்டு கிடைக்கும். மனதில் சற்று ஆறுதல், மகிழ்ச்சி..... ஆனாலும் மகளைக் காணவில்லை என்ற ஆதங்கம்.

இன்னும் ஒன்றரை மணித்தியாலம் நிற்க வேண்டும்.

பசி காதை அடைத்தது. 'பிரசர்' ஏறுவது போன்ற உணர்வு. கைவிரல்களில் ஒரு நடுக்கம். தலையில் சின்னதொரு கிறுகிறுப்பு.

மயக்கத்தின் நுனியில் செல்லத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் தன்பாட்டில் நகர்ந்தது. வீதியில் அடங்கியிருந்த தூசி இவர்களைப் போர்க்கின்றது.

வரிசையின் நுனியில் ஒரு 'சலசலப்பு'. செல்லத்துரை எட்டிப் பார்க்கின்றார். முன்னால் நின்ற இருவர் வாக்குவாதப்படுகின்றனர். இருவருமே உரத்த குரலில் ஒருவரை ஒருவர் தூஷிக்கின்றனர்.

"தமிழங்களுக்கு எங்க போனாலும் சண்டைதான்." பின்னால் இருந்து ஒரு குரல்.

"இது உரிமைப் பிரச்சினையோ தெரிய இல்லை." பின்னால் இருந்து யாரோ ஒருவர் உரத்துச் சிரித்தார்.

சில நிமிட அமளிதுமளி நின்றுவிடுகின்றது.

செல்லத்துரை பொறுமை இழந்தார். அவர் முழு உடலும் பலத்தை இழந்துவிட்டது. வியர்வை நெற்றியில் முத்துக்களாகி விட்டன. சூரியனின் கதிர்கள் உடலைத் துளைத்தன.

மகள் எங்கே?

சுற்றும் முற்றும் பார்க்கிறார். தூரத்தில், கிட்டடியில் என்று பார்வையைச் சுழல விடுகிறார். அவள் தலை கறுப்பு தென்பட வில்லை.

எட்டு மணியாகின்றது.

செல்லத்துரையின் மனதை வேதனை நிரம்பவே அடைத்து விடுகின்றது. இவ்வளவு நேரமும் கால்கடுக்க நின்று, உடலை துச்சமென மதித்து, உறக்கத்தைப் பின்போட்டு, காலநிலையின் வெவ்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு..... உடல் உபாதையைக் கூட்டி..... பிரயாசை யாவுமே வீணாகிவிடப் போகிறதே என்று எண்ணும் போது........

தூதுவராலயத்தின் முன் 'கேட்' திறபடுகிறது. வெள்ளைத் தோல் அதிகாரி வருகிறார். அவர் பின்னால் ஓர் இளமங்கை.

ஒரு கனவு போல.....

நடுத்தர வயது நபரொருவர் செல்லத்துரையை நெருங்கு கிறார். "உங்கடை இடத்தை எனக்கு விட்டுத் தாங்கோ. ஆயிரம் தாறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையின் இதயத்தை ஏதோ தாக்கியது போன்ற உணர்வு. அடிவயிற்றில் பனியின் பாய்ச்சல். கைவிரல்களில் ஒரு பதட்டம்.

செல்லத்துரை சிந்திக்கும் சக்தியை இழந்தார். அந்த சில வினாடிகளுக்குள் விழுமிய எண்ணங்களை மறந்துவிடுகின்றார். கையை நீட்டினார். ஆயிரம் ரூபா தாள் அவர் உள்ளங்கைக்குள் குத்திட்டது.

வரிசையிலிருந்து அவர் வெளியேறிவிட்டார். அவர் முகத்தில் மகிழ்ச்சி, பெருமை.....

இப்பொழுது அவருள் நிறைய சுறுசுறுப்பு. தலைக்குள் விழித்திருந்த மயக்க உணர்வு அகன்றுவிட்டது. நடையில் ஒரு வேகம். வீதி தெளிவாக இருக்கிறது. மக்கள் தெளிவாகத் தென்படுகின்றார்கள்.

செல்லத்துரையின் மகள் நாட்டைவிட்டுச் சென்று மாதங்களாகிவிட்டன. புதிய நாட்டிலேயே ஆண் பிள்ளை ஒன்று பிரசவித்து விட்டாள்.

செல்லத்துரை மீண்டும் ஊருக்குப் போகவில்லை. ஒரு ‘லொட்ஜ்’ வாசியாகிவிட்டார்.

வாரத்தின் மூன்று, நான்கு நாட்கள் அந்த தூதுவராலயத்தின் வரிசையில் அவரைக் காணலாம்.

அந்த ‘செக்கியூரிட்டி கார்ட்’ அவரது நண்பனாகிவிட்டான்.

அவரது ‘ரேட்’ ஆளுக்கு ஏற்றமாதிரி கூடும், குறையும். ஆனால், ஆயிரத்தை விடக் குறையாது.

‘சேர்ட் பொக்கட்’டில் சுருட்டு இல்லை. சிகரெட் தான்.

‘சூழ்நிலைக்கேத்த மாதிரி வாழப் பழகோணும்.’

அடிக்கடி யார் யாருக்கோ எல்லாம் நமுட்டுச் சிரிப்புடன் சொல்லி இருக்கிறாராம். ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லூறும்
# கோழிக் குஞ்சும்

## முல்லைமணி

"சூ..... ஹாய்..... ஹாய் கோதாரியிலை போனது கோழிக்குஞ்சை றாஞ்சிக் கொண்டு போகுது. இந்த மனுசன் வடியப் போட்ட தயிர்மாதிரி சோம்பல் கதிரேக்கை கிடந்து என்ன செய்யுதோ தெரியேல்லை." சீதேவிக் கிழவி ஒரு பாட்டம் திட்டித்தீர்த்தது சாய்மனைக் கதிரையில் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்த நாகமணிக் கிழவருக்கு உறைக்கவில்லைப் போலும். அவர் சுவாரசியமாக அன்றைய செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்தார். முன்பெல்லாம் துயரம் தோய்ந்த செய்திகளை வாசிக்கும் போது கண் பனிக்கும். துன்பமே அன்றாட வாழ்க்கையாகி விட்ட பிறகு எல்லாச் செய்திகளுமே ரசனைக்குரியவை ஆகிவிட்டன.

மற்றவர்களைப் போல அல்லாது அவர் பத்திரிகையின் மேல் மூலையில் இருக்கும் 'இப்பத்திரிகை ஸ்ரீ லங்காவில் செய்தித் தாளாகப் பதிவு செய்யப்பட்டது' என்பது தொடக்கம் 'கிளிநொச்சி ஈழநாதம் அச்சகத்தில் 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது' என்பது வரை எல்லாச் செய்திகளையும் கட்டுரைகளையும், கவிதைகளையும் விளம்பரங்களையும் எழுத் தெண்ணிப் படிப்பது அவரின் வழக்கம். பத்திரிகை வாசிக்காத நேரத்தில் பகவத் கீதை படிப்பார்.

**ஆறுதல் பரிசுக் கதை – 4**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இஞ்சாருங்கோ, உங்களைத் தான். வல்லூறெல்லே கோழிக் குஞ்சைக் கொண்டு போட்டுது'' என்று சீதேவி உச்சஸ்தாயையில் கத்திய போதுதான் நிமிர்ந்தார். மாவீரன் ஆகிப்போன சயந்தன் சுவரில் படச்சட்டத்தில் இருந்து சிரித்துக் கொண்டிருந்தான்.

“என்ன கோழிக்குஞ்சை வல்லூறு கொண்டு போட்டுதோ? அதுக்கு நான் என்ன செய்யிறது?”

சீதேவிக்குப் பத்திக் கொண்டு வந்தது.

“நான் இஞ்சை அடுப்பிலும் நெருப்பிலும் கிடந்து அவியிறன் நீங்கள் கோழிக்குஞ்சைப் பாக்கக்குடாதோ? மனுஷனுக்குக் கொஞ்ச மெண்டாலும் மனச்சாட்சி இருந்தாத்தானே?”

அவளின் ஆவேச வார்த்தைகள் அவரின் உள்ளத்தைக் குத்திக குதறியிருக்க வேண்டும்.

“நானெல்லெ சொன்னனான் கொஞ்சம் வளருமட்டும் அடச்சு வைச்சிருக்கச் சொல்லி..... அதைவிட்டுப் போட்டு மனிசரிலை ஏறி விழுறாய்.”

“அடச்சு வைச்சு என்னத்தைப் போடிறது? ஊரிலை எண்டால் எவளவு நெல்லும் அரிசியும் வீடுகொள்ளாமல் இருந்தது. இப்ப அவங்கள் வயலுக்கை வெடி குண்டெல்லை விதைச்சிருக்கிறாங்கள்.”

விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சீதேவி சமையலைத் தொடர்ந்தாள். ஆறு மாதத்துக்குப் பிறகு மனுஷன் ஆசையருமையாய்ச் சாப்பிடட்டும் என்று கோழி இறைச்சிக்கறியும், எலும்புச் சொதியும், கத்தரிக்காய் தீயலும், முருங்கை இலை வறையும் ஆக்கிவிட்டாள்.

மனுஷன் கொஞ்சம் கோபமாக இருப்பது போலத் தெரிந்தது. என்ன இருந்தாலும் இப்பிடிப் பேசியிருக்கக்கூடாது என்று ஒரு கணம் நினைத்தவள், குரலை இதமாக்கிக் கொண்டு “இஞ்சேருங் கப்பா, சாப்பிட வாருங்கோவன்” என்றாள்.

அவரின் மீது சீதேவிக்கு எந்தவித மனத்தாங்கலும் இல்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். அவள் எரிந்து விழுந்ததும் சீறிச் சினந்ததும் தன் பேரப் பெட்டையின் மீது கொண்ட பாசத்தினால் தான். இடப்பெயர்வால் கெட்டு நொந்து போன மகளின் குடும்ப த்தைப் பற்றி அவள் நினைத்துப் பார்க்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில்லை. அவளின் பேத்தி வசந்தி காதில் ஒரு சின்னத் தோடு கூட இல்லாமல் இருப்பதைப் பார்க்கும் போது பகீரென்றது. கோழிக்குஞ்சுகள் வளர்ந்துவிட்டால் அவற்றை விற்று ஒரு சோடி தோடு வாங்கிப் போட நினைத்தாள்.

“என்ன வரேல்லையே?”

“இல்லை.”

“எனக்குப் பசிக்குது”

“நீ சாப்பிடு.”

திடீரென்று அவள் கண்கள் பனித்தன. குரலை மேலும் கனிவாக்கிக் கொண்டு, “வாருங்கோ ரெண்டு பேரும் சாப்பிடுவம்.”

திருமணஞ் செய்து நாற்பது ஆண்டுகளாகிவிட்டன. அவர்களு க்கிடையில் வேறு ஏதாவது பிரச்சினைகள் இருந்ததாக நினை வில்லை.

இல்லாமையும் இயலாமையும் மனித சுபாவங்களை மாற்றி விடுகின்றனவோ.

“உவன் சாந்தன் வந்தால் வல்லூறைக் கெற்றப்போலால் அடிச்சு விழுத்திப் போடுவன்.”

“சும்மா பேய்க்கதை கதைக்காதை. வல்லூறு கண்ணுக் கெட்டாத தூரத்திலை வட்டமிட்டுத் திடீரென்று வந்து கௌவிக் கொண்டு போகுது. கெற்றப்போலாலை அடிக்க ஏலுமே?”

கோழிக்குஞ்சு இறக்கிவிட்டு இரண்டு நாளையிலை ஒண்டைக் காகம் தூக்கிக் கொண்டு போட்டுது. வேப்பமரத்தில இருந்து கொத்திக் கொண்டிருந்தது. சாந்தன் கெற்றப்போலால் அடித்தான். குறி தவறிவிட்டது.

“வரதன் எண்டால் அச்சொட்டாக அடிச்சிருப்பான். முந்தி எத்தினை வெள்ளைப் புறாக்களை விழுத்தினவன்.”

“உன்ரை கதைக்கு உப்புமில்லைப் புளியுமில்லை. புறாவை விழுத்தலாம். காகத்தையும், வல்லூறையும் விழுத்தேலுமே?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உங்களுக்கென்ன தெரியும்? அவன் இப்ப ஏ.கே.47, எல்.எம்.ஜி எல்லாமெல்லே கொண்டு திரியிறானாம். கிளிநொச்சி யாலை வந்த பெடியள் சொன்னவங்கள். குறிபாத்துச் சுடுறதிலை அவனை மிஞ்சி ஆளில்லையாம்.”

“அப்ப காகத்தையும், வல்லூறையும் சுடுறதுக்கே ஏ.கே.47 வைச்சிருக்கிறான்? எங்கடை பேரன் எண்டாப்போல சின்ன விசயத்துக்குக் கூப்பிட முடியுமே. அவங்கள் மண்ணை மீட்க வெல்லே போராடுறாங்கள்.

இஞ்சை பார் பதினைஞ்சு முட்டை அடை வெச்சு பதின் மூண்டு குஞ்சு பொரிச்சுதெண்டாய். நான் அப்பவே நினைச்சன் பதின்மூண்டு அதிட்டம் கெட்ட நம்பர் எண்டு. காகம் ஒண்டைத் தூக்கிக் கொண்டு போனதைப்பற்றிக் கவலைப்படாதை. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

நாகமணியர் ஒட்டுசுட்டானில் நல்லதொரு விவசாயி. அவருக்கு வயல் தென்னந்தோட்டம், உழுந்துக்காணி என்று ஏகப் பட்ட நிலம். நிலம் அவருக்குச் செல்வத்தை அள்ளித் தந்தது. பிள்ளைகளையெல்லாம் கரைசேர்த்தாயிற்று. இளையவனை நினைத்தால்தான் வயிறு பற்றி எரிகிறது. மாவீரன் விழாவுக்கு நினைவுத் தூபியடியில் சோடித்துக் கொண்டு நின்றவன், திடீரென்று உறுமிக் கொண்டு வந்த கிபீர் விமானம் அஞ்சாறு குண்டுகளை முக்கித் தள்ளிவிட்டுப் போனது. அதில் அகப்பட்டுச் சிதறி போனான் இளையவன். அந்த அகோர சம்பவம் அவர் நெஞ்சிலே நீங்காத ரணமாக இருக்கிறது.

ஊரை விட்டு வேறு எங்கேயாகிலும் போய்விட்டால் நல்லது என்று கூட யோசித்தார் அவர். நடந்ததை மறந்து ஆறுதல் அடையலாம் என்றுதான் எண்ணினார். ஆனால், பிறந்து தவழ்ந்து உருண்டு பிரண்ட மண்ணைவிட்டுப் பிரிய அவரது மனம் இடந்தர வில்லை.

இப்பொழுது போகவேண்டி ஏற்பட்டுவிட்டது. மண்கிண்டி மலையில் இருந்து இடைக்கிடை ஷெல் அடிச்சபடி இருந்தாங்கள். சிவன்கோயில் தூபி அரைவாசி சேதமடைந்துவிட்டது. சங்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத்துக்கும் பாரிய சேதம். நல்ல காலமாக இதுவரை உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. பொறுத்துப் பார்த்துப் போகலாம் என்று சிலர் மட்டும் ஊரில் இருக்கிறார்கள். வயது பின்னிட்ட காலத்தில் திடீரென்று ஓட முடியுமா? "கொஞ்ச நாளைக்கு முள்ளியவளையில் போய் இருப்பம். ஷெல்லடி ஓய்ஞ்ச பின் திரும்புவம்" என்று நினைத்துத்தான் குடும்பத்துடன் போனார்.

பத்துப் பதினைந்து நாளின் பின் ஷெல்லடி ஓய்ந்துவிட்டது. சனங்கள் ஒவ்வொருவராக ஊருக்குத் திரும்பத் தொடங்கிவிட்டனர்.

சீதேவியும் அரிக்கத் தொடங்கிவிட்டாள். "இஞ்சாருங்கோ, சிவராசா விதானையார் குடும்பம் ஊருக்குத் திரும்பிவிட்டுதாம். சிவசம்பர் கம்மாலை திறந்து வேலை செய்யிறாராம். சங்கக் கடையும் நடக்குதாம். நாங்களும் போனால் என்ன? எங்கடை கிணத்துத் தண்ணியைக் குடிச்சுக் கொண்டிருந்தால் பசிகூட வராது. சிவன்கோயில் மணியைக் கேட்டு எத்தினை நாளாச்சு?"

"கொஞ்சம் பொறுத்துப் போவம். நாங்கள் ரெண்டு பேரும் வயதானவர்கள். ஏதும் ஒண்டெண்டால் ஓடவும் மாட்டம்?"

"எல்லாத்தையும் அந்தந்தப்படி விட்டிட்டு வந்திட்டம். றேடியோவை எண்டாலும் கொண்டு வந்திருந்தால் செய்தி யெண்டாலும் கேட்டிருக்கலாம்."

சுவர்க்கடிகாரம் காலை பத்து மணி என்று சத்தம் போட்டுச் சொல்லியது. நாகமணியர் அவசரம் அவசரமாக நாதன் கடைக்குப் போய் செய்தித்தாள் ஒன்றை வாங்கி வாசித்ததும் உறைந்து போய் நின்றார்.

ஒட்டுசுட்டானில் இராணுவம் ஆக்கிரமிப்பு; சனங்கள் சிவன்கோயிலினுள் பரிதவிப்பு.

"இஞ்சேரும், உமக்கு விஷயம் தெரியுமே?"

"என்னப்பா? சொல்லுங்கோவன்....."

"ஒட்டுசுட்டானுக்கு ஆமி வந்திட்டுதாம்; பிடிபட்ட சனம் சிவன் கோயிலுக்கை பரிதவிக்குதாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன சொல்லுறியள்? பெடியள் ஆமியை வர விட்டிட்டாங்களோ?”

“அவையளும் எதிர்பார்க்கவில்லை. விடியப்புறமே ஆமி ஊர் முழுக்கப் பரவீட்டுதாம்.”

“நல்ல பெரிய கோயில்தானே? அதுதான் சனம் அங்கை போய் இருக்குதுகளாக்கும்.”

“ஆயிரம் சனத்தை ஒரு கோயில் தாங்குமே?”

“ஆரப்பா சொன்னது?”

“இஞ்சை பார் பேப்பரிலை போட்டிருக்குது.”

“றேடியோக் கேட்டிருந்தால் நேற்றே தெரிஞ்சிருக்கும். திரும்பிப் போறதெண்டு றேடியோவையும் விட்டிட்டு வந்திட்டம் இப்ப என்ன செய்யிறது?”

“இனி ஒட்டுசுட்டான் போறதை நினைச்சும் பாக்கேலாது.”

“சொந்தக்காரர் எண்டாப் போலை நெடுக அவையின்ரை தாவாரத்திலை இருக்கேலுமே? அவைக்கேன் இடைஞ்சல் குடுப்பான். எலிப்பாளி எண்டாலும் தனிப்பாளி எண்டு சொல்லுவினம். நாங்கள் ஒரு இல்லிடத்தைத் தேடவேணும்”.

“நீ சொல்லுறதும் சரிதான்; ஆனால் காசுக்கு எங்கை போறது?”

“என்ரை நகை எல்லாத்தையும் வண்டிப்பத்தனிடம் வித்துப் போட்டு ஒரு சின்ன மண் வீடெண்டாலும் கட்டுவம்.”

சீதேவியின் ஆலோசனைக்கு வடிவம் கொடுத்து விட்டார் நாகமணியர்.

தாலிக்கொடி ஒன்றுதான் எஞ்சியது.

வற்றாப்பளையில் முடித்துக் கொடுத்தவள் அழுமாப்போல் வந்து நின்றாள். “அம்மா செயந்திக்கு ஒரு கலியாணம் பேசி வந்திருக்கு. பெடியன் சைக்கிள் கடை வச்சிருக்கிறான். நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமான பெடியன். பீடி சிகரெட்டைத் தொடமாட்டானாம்.''

சீதேவிக்கு வாயெல்லாம் பல்.

''எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமே! அவள் நல்லா யிருப்பாள் எண்டு எனக்குத் தெரியும்.''

''அதுசரிதான் அம்மா. காதிலை கழுத்திலை எண்டாலும் ஏதும் போடத்தானே வேணும். அவரும் ஏலாவாளியாகிப் போட்டார். ஆமி அடிச்சதாலே இருமினால் ரத்தம் வருகுது. உழைப்புப் பிழைப் பில்லை. என்ரை நகையெல்லாம் வித்துத் திண்டாச்சு.''

''இந்தா மிஞ்சினது இந்தத் தாலிக் கொடிதான். தாலியைக் கயித்திலை கோத்துக் கட்டுவம்.''

தாய் மகள் உரையாடலை நாகமணியர் கேட்டுக் கொண்டு தான் இருந்தார். அவர் ஏதும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

சீதேவி நூல் கயிற்றில் தாலியைக் கோத்துக் கட்டுவதைப் பார்த்த போது அவருக்கும் கண் பனிக்கத்தான் செய்தது.

''எவளவு செல்வமும் செல்வாக்குடனும் இருந்த குடும்பம். இப்ப இப்பிடியெல்லாம் சீரழிஞ்சு போட்டுது'' என எண்ணிப் பார்க்கத்தான் முடிந்தது.

முள்ளியவளையில் ஒரே பரபரப்பு. ஏழாங்கட்டைக்கு ஆமி வந்திட்டுதாம். ஊராக்கள் ஆறு பேரைச் சுட்டுப் போட்டுதாம்.

சீதேவி தன் உடுப்புக்களை சூட்கேசில் அடுக்கத் தொடங்கி னாள். ''ஏழாங்கட்டைக்கு வந்த ஆமி இஞ்சை வரச் சுணங்குமே. அதுதான் அடுக்கிறன்.''

தூரத்தில் ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம், துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்கின்றது.

''என்ன ஆமி வருகுதோ?''

போராளிகள் அணி அணியாக வந்து குவியத் தொடங்கினர். பென்னம்பெரிய குழல் பொருத்திய பீரங்கிகள். இது வரை கண்டறியாத போர்க் கருவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் ஹெலி ஒன்று வட்டமிட்டுக் கொண்டு போனது. கிபீர் குண்டு வீச்சு விமானம் உறுமிக் கொண்டு வட்டமிட்டது. திடீரெனப் பதிந்தது.

பென்னம் பெரிய முழக்கம். கிணற்றுப் பாருக்கு வெடி வைத்தது போல. ஒரே புகை மண்டலம். கிபீர் முகங்குப்புற விழுந்து எரிந்து கொண்டிருந்தது. ஒரே திருவிழாச் சனக் கூட்டம். என்ன அதிசயம்! அந்த வல்லூறு கூட நிலத்தில் விழுந்து மரண அவஸ்தையுடன் செட்டையை அடித்தது. இறுதியில் செத்துப் போனது.

சீதேவி வீட்டுத் தாவரத்தில் கூனிக் குறுகி ஒதுங்கியிருந்த கோழியையும் குஞ்சுகளையும் பார்த்தாள். பதினொரு குஞ்சு களுக்கும் எந்தச் சேதமும் இல்லை.

"இனிப்பயமில்லை." சீதேவி தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

"எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது." நாகமணியா கீதையை நினைவு கூர்ந்தார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாச்சிக் கிணறு

## உமாதரணி

**வ**ழக்கமான கோடை. தலைக்குமேல் அனலாய்ப் பொழியும் வெய்யில். அசைவை மறந்துவிட்டது போல் திகைத்து நிற்கும் மரங்கள். இந்த வெம்மையில் நடக்கத் துணிவில்லாமல் வீட்டினுள் முடங்கிய மக்கள். வெறிச்சோடிய வீதிகள்.

எல்லாவற்றையும் வெறுமையாய்ப் பார்த்தபடி மொட்டை மாடியில் நின்றேன் நான். சூழலின் வெப்பநிலை ஒவ்வொரு கணமும் உயர்ந்து கொண்டிருப்பது போல் உடம்பெங்கும் கொதிக்கிறது. தோல் பரப்பு முழுதும், நுண்ணிய ஊசிகளால் குத்துவது போல் எரிச்சல். அளவற்றுப் பொங்கும் வியர்வை.

இத்தனைக்கும் மணி பத்தரைதான் ஆகிறது. இப்போதே வெயிலின் தாக்குதலைத் தாள முடியவில்லை. சுட்டெரிக்கும் இந்தச் சூரியன் மேலெழும்பி உச்சிக்கு வரும் போது இந்த பூலோகம் மொத்தமாய் எரிந்து பஸ்பமாகிவிடும் போல் தோன்றியது.

ஒவ்வொரு கோடையிலும் இப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், பூமி ஒரு போதும் எரிந்து போவதில்லை. அதிலிருக்கிற ஜனங்கள் தான் நொந்து நூலாகிறார்கள். அடுத்த கோடை இதைக் காட்டிலும் கடுமையானதாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டு வெம்மையான பெருமூச்செறிகிறார்கள்.

இன்று காலை எழுந்தவுடனேயே, வீட்டினுள் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அதிகாலை தான். எல்லா ஜன்னல்களும் திறந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதுதான். ஆனாலும், நுழைவதற்குக் காற்று இல்லை. மின் விசிறியைப் போட்டாலும் கொதிக்கச் சுடுநீர் அருவியில் குளித்தது. போல் குப்பென்று வியர்த்தது. கையில் காபிக் கோப்பையுடன் மொட்டை மாடியேறிவிட்டேன்.

அப்போது சாலையில் ஒரு பெண். பதினாறு அல்லது பதினேழு வயது மதிக்கலாம். பள்ளி யூனி∴பார்ம் தாவணியில், தலையில் ஒரு குடம், இடுப்பில் இன்னொரு குடம் ஏந்திக் கொண்டு, சிரமமாய்த் தன்னை சமநிலைப்படுத்தியவாறு தடுமாறித் தடுமாறி நடந்து கொண்டிருந்தாள்.

ஒரு மின்னல் போல் தோன்றி மறைந்துவிட்ட அந்தக் காட்சியைப் பார்த்ததிலிருந்துதான் மனம் நிலைகொள்ளாமல் திணறு கிறது. இந்தப் பெண் என்ன படிக்கிறது? பத்தாவதோ, பன்னிரண்டா வதோ, பப்ளிக் தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறதோ, என்னவோ, தினந்தோறும் இப்படித் தண்ணீருக்கு அலைந்து கொண்டிருந்தால் படிப்பதற்கு நேரம் ஏது?

அந்தப் பெண்ணைப் பற்றி நினைக்கையில், என்னுடைய இளம்பராய ஞாபகங்களைத் தவிர்க்க முடியவில்லை. குறிப்பாக, அண்ணாச்சிக் கிணறு!

அப்போது நான் ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்தேன். முந்தைய விடுமுறையில்தான் சைக்கிள் விடப் பழகியிருந்தேன். அதற்காகவே காத்துக் கொண்டிருந்தது போல், அப்பா, என்னை வீட்டின் தண்ணீர் டிபார்ட்மென்டுக்கு முழு பொறுப்பாளனாக்கி விட்டார். “டெய்லி ரெண்டு நடை, நம்ம அண்ணாச்சி தோட்டத்து க்குப் போய் நாலு குடம் தண்ணி எடுத்துகிட்டு வந்துடணும். அதுக்கப்புறம் நீ எங்கே சுத்தினாலும் நான் கேள்வி கேட்க மாட்டேன்! சரியா?”

அப்பாவின் சைக்கிள். எனக்கே எனக்கென்று உரிமையாக வேண்டுமானால் நான் இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டாக வேண்டியிருந்தது. ஆகவே, சைக்கிளின் பின் கேரியரில், ரப்பர் வளையங்களில் தொங்கும் குடங்களை மாட்டினபடி, தினந்தோறும் இரண்டு முறை அண்ணாச்சியின் தோட்டத்துக்குத் தண்ணீர் யாத்திரை!

அண்ணாச்சியின் தோட்டம் எங்கள் வீட்டிலிருந்து ஐந்தாறு மைல் தூரம். நேரான செம்மண் சாலைதான். ஆனால், இடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ரயில் பாதை குறுக்கிடுவதால் அங்கே சைக்கிளை ஓட்டிச் செல்வது முடியாது. சைக்கிளிலிருந்து இறங்கி, இறக்கத்தில் அதைத் தள்ளிச்சென்று, ரயில் பாதையைக் கடந்ததும், மீண்டும் மேலேறி, அதன் பின் வேகப் பயணத்தைத் தொடரவேண்டும்.

ஊருக்கு வெளியே ஒரு சிறிய மளிகைக் கடை வைத்திருந்தார் அண்ணாச்சி. கடைக்குப் பின்னாலேயே அவரது தோட்டம். பிரம்மாண்டமான காட்டுக் கிணறு. தேனாய் இனிக்கும் தண்ணீர். பம்ப்செட்டில் மேலேறி சிறு தொட்டியொன்றை நிரப்ப, அதில்தான் எல்லோரும் தண்ணீர் பிடித்துக் கொள்ள வேண்டும். ஏழைபாழைகளுக்காக முதல் இரண்டு குடங்கள் ஓசி. அதற்கு மேல் தேவையென்றால் குடத்துக்குப் பத்துக் காசோ, இருபத் தைந்து காசோ தரவேண்டும்!

கிணற்றுக்குச் சற்றுத் தள்ளி அண்ணாச்சியின் ஓட்டு வீடு. திண்ணையில் ஒரு மர நாற்காலி. அதன் மீது கால் மேல் கால் போட்டு அமர்ந்தவாறு, தினத்தந்தியை நாலு மணி நேரம் படிப்பார் அண்ணாச்சி. இடையிடையே "சிவகாமி அம்மையாரே வீட்ல எல்லாரும் சௌக்கியம் தானே?" என்னும் விசாரிப்புகள். "யார்றா அவன்? செருப்புக் காலோட தொட்டி மேல ஏறலாமா?" என்னும் அதட்டல்கள்.

அண்ணாச்சியின் மளிகைக் கடையும் விவசாயமும் அவருக்குப போதுமான செல்வத்தைத் தந்திருந்தன. ஆகவே இந்தத் தண்ணீர் வியாபாரத்தை அவர் ஒரு தொழிலாக நினைக்கவில்லை. ஒரு சமூகக் கூடம் போல தினந்தோறும் பத்துப் பதினைந்து மனிதர் களைச் சந்தித்து, ஊர் விஷயங்களைப் பேசிப் பழகுவதற்கான ஒரு வாய்ப்பு. கொஞ்சம் கவித்துவமாய்ச் சொல்வதானால், மிக லேசாய்ச் சுயநலம் போர்த்திய ஒரு சமூக சேவை!

என் அப்பாவுக்கும், அவருக்கும் எப்படிப் பழக்கம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், முதன் முறையாக நான் அவருடைய கிணற்றுக்குத் தண்ணீர் பிடிக்கச் சென்ற போதே அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். "யாரது? ஜூனியர் சிவப்பிரகாசமா?" என்றவாறு குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

"என் பேர் ராமசாமி!" வெடுக்கென்று சொன்னேன் நான்.

"அது சரி உங்கப்பன் பேர் சிவப்பிரகாசம் தானே?" என்று கேட்டுவிட்டு, மறுபடி சிரித்தார். "என்ன படிக்கிறே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ப்ளஸ்டு!"

"பன்னண்டாங்கிளாஸா?" என்று தமிழில் கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டார். பின்னர், "பரீட்சை நேரத்தில, உன்னைப் படிக்கவிடாம தண்ணிக்கு அனுப்பிட்டானா உங்கப்பன்?" என்றார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. எல்லாம் படிச்சிட்டுதான் வாரேன்!" என்றேன் நான்.

"சரி சரி தண்ணி பிடிச்சிட்டு, சீக்கிரமா வீடு போய்ச் சேர்!" என்றவாறு மீண்டும் தினத்தந்தியில் புதைந்து கொண்டார் அண்ணாச்சி.

முழுக்க நிரப்பித் தளும்பிய தண்ணீர்க் குடங்களை சைக்கிளில் வைத்துக் கொண்டு நான் அவரைக் கடந்து செல்கையில், "ஒழுங்காப் படிக்கணும். சரியா?" என்றார்.

நான் அவருக்கு பதில் சொல்லாமலே சைக்கிளின் பெடலை வேகமாய் மிதித்தேன்.

அத்தனை பாரத்துடன் சைக்கிளை ஓட்டுவது சுலபமில்லை என்று சீக்கிரத்திலேயே புரிந்துவிட்டது. முழுக்குடம் நிரப்பிக் கிளம்பினாலும், வழியில் தளும்பிச் சிதறுவது, ரயில் பாதையைக் கடக்கிற போது சிந்துவது ஆகியவற்றால், முக்கால் குடம்தான் வீட்டுக்குக் கொண்டுவர முடிந்தது. ஆகவே, இரண்டு நடை போதாது. மூன்றாவது நடையும் போயாகவேண்டும் என்று அம்மா சொல்லிவிட்டாள்.

இதனால், அண்ணாச்சியும், நானும் அடிக்கடி சந்திப்பதைத் தவிர்க்க முடியவில்லை. என்னிடம் அவர் காசு கேட்கவில்லை. ஆனால், எப்போதும் என் படிப்பைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தா. அதுவே எனக்குத் தாங்க முடியாத எரிச்சலாய் இருந்தது.

அவர் இப்படிக் கவலைப்படுமளவு நான் மோசமான மாணவன் இல்லை. அரை மணி நேரமோ, ஒரு மணி நேரமோ, தண்ணீருக்காகச் செலவிடுவதில் என் மதிப்பெண்கள் குறைந்து விடப் போவதில்லை. ஆனால், இதை என்னால் அண்ணாச்சியிடம் வெளிப்படையாய்ச் சொல்ல முடியவில்லை. ஆகவே அவரும் என்னை விடாமல் உறுத்திக் கொண்டேயிருந்தார்!

அண்ணாச்சியும் அவருடைய கிணறும் எனக்கு முழுக்கப் பரிச்சயமாவதற்குள், பன்னிரண்டாம் வகுப்புக்கான பப்ளிக் பரீட்சை வந்துவிட்டது. ஆகவே, நான் வீட்டோடு முடங்கி, புத்தகங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைத்துக் குடித்து, எல்லாத் தேர்வுகளையும் நல்லபடியாக எழுதி முடித்த பின், மனதினுள் இனம்புரியாத ஒரு நிம்மதி. இனி மேல் நான் தைரியமாக அண்ணாச்சியை எதிர்நோக்கலாம். "நல்லாப் படிக்கணும்!" என்று அவர் சொன்னால் "என்னத்தைப் படிக்கிறது?" என்று கிண்டலாய் பதில் கேள்வி போடலாம்!

ஆனால், அதற்கு வாய்ப்பே இல்லாதபடி அந்த வருடக் கோடை மழையில் எங்கள் வீட்டுக் கிணற்றில் நீர் துளிர்த்து விட்டது. ஆகவே, தண்ணீர் யாத்திரைகள் நிறுத்தப்பட்டன. நானும் உள்ளூர்ப் பையன்களோடு கிரிக்கெட் விளையாடி வெயிலில் கறுத்தேன்.

அதன் பின் தேர்வு முடிவுகளும் கோவையில் எஞ்சினியரிங் சேர்ந்ததும், வீட்டை விட்டு ஹாஸ்டலில் தனியே தங்கியதும், அதனால் விளைந்த உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சினைகளும், மெல்ல மெல்ல வெளியூர்ச் சூழல்களுக்கு நான் பழகிக் கொண்டதும், அதிவேகமாய் நிகழ்ந்துவிட்டன. எப்போதாவது மட்டும் ஊருக்கு வருகிற விருந்தாளியாகிவிட்டேன்.

ஆனால், இந்தக் கால இடைவெளிகள் எல்லாவற்றையும் பொய்யாக்குவது போல், இந்தப் பெண்..... பள்ளிச் சீருடையில் தண்ணீர் சுமக்கிற இந்தப் பெண் என்னைக் கலைத்துப் போட்டு விட்டாள். ஒன்றிரண்டு மாதங்களோடு அந்த அனுபவம் தீர்ந்து விட்டது என்று நான் நினைத்திருந்ததை உடைத்து அண்ணாச்சி யையும் அந்தக் கிணற்றின் நினைவுகளையும் இன்னும் பல சிந்தனைகளையும் எனக்குள் கிளறிவிட்டது இந்தக் காட்சி.

ஒவ்வொரு வருடமும் வெய்யில் அதிகக் கொடுமையாவது போல், தண்ணீர்ப் பிரச்சினையும் தீவிரமாகிக் கொண்டு தான் இருக்கிறது. தாகம் கொண்ட பூமி தரையடித் தண்ணீரை "க்ளக், க்ளக்" என்று விழுங்கிவிட்டது போல் தண்ணீர் மட்டம் குறைந்து குறைந்து காணாமலாகிவிட்டது. அரசாங்கக் குழாய்களில் எப்போதாவது வடிகிற நீரைச் சேகரித்துவைத்து, பல வாரங் களுக்குக் குடிக்கப் பழகிவிட்டார்கள் மக்கள். அன்றன்றைய தண்ணீர்தான் சுகாதாரம் என்கிற எண்ணங்களெல்லாம் அதீத ஆடம்பரமாகி, "எத்தனை நாள் தண்ணியானாலும் காய்ச்சிக் குடிச்சாப போதும்!" என்னும் புது நியாயங்களைத் தோற்றுவித்துக் கொண்டு விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பற்றி நினைக்க, நினைக்க எனக்குள் அளவற்றுப் பொங்கிய சோகத்தில், செய்வதறியாது நான் தவித்துக் கொண்டிருக்கையில், திடீரென்று அந்த யோசனை தோன்றியது. பொடி நடையாய் நடந்து போய், அண்ணாச்சிக் கிணறைப் பார்த்து வந்தால் என்ன?

அவர் என்னை அடையாளம் கண்டு கொள்வாரா தெரியவில்லை. என்றாலும், அந்தக் கிணற்றையும் அவரையும் பார்த்துப் பேசி விட்டு வந்தால், இந்தத் திணறலும், தவிப்பும் கொஞ்சமாவது குறையும் என்று தோன்றியது. கிளம்பிவிட்டேன்!

செம்மண் பாதை இப்போது தார்ச் சாலையாகியிருந்தது. ரோட்டின் இரு புறமும், வறண்டு பிளந்த வயல்கள்.

அண்ணாச்சியின் மளிகைக் கடையில் பெரிய மாற்றங்கள் ஏதுமில்லை. அதன் வாசலில் ஒரு பெரிய டெலி.ஃபோன் பூத் முளைத்திருந்தது. அதைக் கடந்து உள்ளே நுழைந்தபோது வழக்கமான மர நாற்காலியில் அண்ணாச்சி.

தலையில் முன்பைவிட அதிக நரைமுடிகள். லேசாக இளைத்திருந்தார். களைத்திருந்தார். என்னைப் பார்த்ததும் அவரது கண்களில் உற்சாகம் தொற்றிக் கொள்ள "வாய்யா எஞ்சினியரு!" என்றார் கிராமத்து உச்சரிப்பில். "நீ விடுப்புல வந்திருக்கேன்னு உங்கப்பன் சொன்னான்!"

அவருடைய இயல்பான வரவேற்பைக் கேட்கையில், எனது குற்றவுணர்ச்சி அதிகரித்தது. "நல்லாயிருக்கீங்களா அண்ணாச்சி?" என்றேன்.

"எனக்கென்ன?" என்று பெரிதாய்ச் சிரித்தார் அவர். ஒரு இரும்பு நாற்காலியை விரித்துப் போட்டு என்னை அமரச் செய்தார். "படிப்பெல்லாம் முடிஞ்சதா?"

"முடிஞ்சது அண்ணாச்சி. இப்போ பெங்களூர்ல வேலையில இருக்கேன்!"

"ரொம்ப சந்தோசம்!" என்று நெஞ்சில் கைவைத்துச் சொன்னார் அவர். அப்போது அவரது இதழ்களில் மலர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை, என்னைப் பல வருடங்கள் பின்னோக்கிக் கொண்டு சென்றுவிட்டது.

கடைக்கு வெளியே தெரியும் வறண்ட சூழலைப் பார்வை யிட்டபடி சில விநாடிகள் மௌனமாய் அமர்ந்திருந்தேன். பின்னர் திடீரென்று நினைத்துக் கொண்டாற் போல, "இப்பவும் ஜனங்க இங்கே தண்ணி பிடிக்க வர்றாங்களா அண்ணாச்சி?" என்றேன்.

"எங்கே?" என்று அலட்சியமாய் உதட்டைப் பிதுக்கினார் அண்ணாச்சி. "நம்ப கெணறு வறண்டு போய் நாலஞ்சு வருச மாச்சே!"

ஒரு விதத்தில் நான் எதிர்பார்த்திருந்த விஷயம்தான். என்றாலும் அவருடைய வாயால் அதைக் கேட்க ரொம்பவும் வருத்தமாய் இருந்தது. அள்ளி அள்ளிக் கொடுத்த வள்ளல் கைகள், துவண்டு சுருள்வது போல.

"அப்போ தோட்டமெல்லாம்?" தயங்கித் தயங்கிக் கேட்டேன்.

"ஏதோ கவர்ன்மென்ட்காரன் கொடுக்கற தண்ணியில செடிங்க மயங்கிப் பொழைக்குது!" என்றார் அண்ணாச்சி. "தோட்டத்தை விட நம்ம கெணறு வறண்டதுதான் எனக்கு ரொம்ப வருத்தம்" என்றார். தொடர்ந்தும், "ஜீவ நதிமாதிரி எந்நேரமும் கொட்டி கிட்டிருந்தது. திடுதிப்புன்னு ஒரு நாள் காணாமபோச்சு!"

"ஆமாம் அண்ணாச்சி!. அப்போல்லாம் எங்க ஏரியால எல்லா வீடுகளுக்கும் நம்ம கெணறுதானே தண்ணி சப்ளை! அந்தக் கெணறு வத்திப்போச்சுன்னு கேட்கும் போது நம்பக்கூட முடியலை அண்ணாச்சி!" என்றபடி சங்கடமாய்ச் சிரித்தேன்.

இப்படிச் சம்பிரதாயமாய் வருத்தம் தெரிவித்த போது வறண்டு கிடக்கும் அந்தக் கிணறைப் பார்ப்பதற்கு அவர் என்னை அழைத்து விடுவாரோ என்று உள்ளூர ஒரு நடுக்கம் தோன்றியது.

"சரி அதை விடுப்பா. எல்லாம் நடக்கிறதுதான்!" என்று சிரித்தார் அண்ணாச்சி. "இப்போ எல்லா வூட்லயும், நெலத்திலயும் மழை நீர் சேகரிப்புங்கறாங்க. ஏழெட்டு வருஷம் இப்படி மழை பெய்யறதைச் சேமிச்சு வெச்சா நிலத்துக்கடியில தண்ணி மட்டம் தானா உசருமாமே. அப்போ நம்ம கெணத்தில மறுபடி தண்ணி சுரக்கட்டும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய குரலிலும் முகத்திலும் பொங்கும் நம்பிக்கையைப் பார்த்தபடி நான் மௌனமாய்த் தலையசைத்தேன்.

அண்ணாச்சி தொடர்ந்து பேசினார். "ஆனா அதுவரைக்கும் நம்ம மனுசங்க மனசில ஈரம் குறைஞ்சுடாம இருக்கணும். அதுதான் முக்கியம்!" என்று சிரித்தவர், "நாளைக்கு, எல்லாருக்கும் தானே மழைத்தண்ணியைச் சேமிச்சோம்? உன் கெணத்துக்கு மட்டும் தண்ணி வந்திருக்கு எனக்கு வரலையேன்னு அடிதடி வெட்டு, குத்து நடந்துடக் கூடாது பாரு!" என்றார்.

அவருடைய வெள்ளந்தியான பேச்சிற்கு என்னால் வெறுமனே சிரிக்கத்தான் முடிந்தது.

தாளாத வெய்யிலில் என் முகத்தில் துளிர்த்திருந்த வியர்வையை அக்கறையோடு பார்த்த அண்ணாச்சி பானையிலிருந்து ஒரு செம்பு தண்ணீரை எடுத்துக் கொடுத்தார். அந்த வெம்மைக்கு ஜில்லென்று தொண்டையில் இறங்கின நீர் அமிர்தமாய்த் தெரிந்தது. ஆனால், இந்தத் தண்ணீரைச் சேகரிப்பதற்கு அவர் எத்தனை மைல் தூரம் செல்லவேண்டியிருந்ததோ, பாவம்!

"நம்ம கடையில மினரல் வாட்டர் பாட்டிலெல்லாம் விக்கிற தில்லை தம்பி. தண்ணி வேணும்னா யார் வந்து கேட்டாலும் இந்த பானைத் தண்ணிதான்!" என்று சிரித்தார் அண்ணாச்சி. "ஏதோ இந்த மண்ணில் ஈரத்தைத் தொலைச்சுடாம இருக்கிறதுக்கு நம்மால் முடிஞ்ச உபகாரம்!"

"கவலைப்படாதீங்க அண்ணாச்சி. நம்ம கெணறு சீக்கிரத்திலேயே மறுபடிக் கண் திறந்திடும்!" என்றேன் நான். "இந்த உலகத்தில நல்லவங்க இருக்கிறவரைக்கும் அவங்களுக்காக வானத்திலிருந்து மழை பெய்யும்னு திருக்குறல்ல சொல்லியிருக்கு! வானத்தைப் போலவே. நம்ம பூமித் தாய்க்கும் அந்த இரக்க குணம் நிச்சயமாக இருக்கும்!" ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப் பச்சை

## மணிவாசகன்

இருளரக்கனை விரட்டியடிப்பதற்கான கதிரவனின் இறுதிக் கட்டத் தாக்குதல் அரங்கேறிக் கொண்டிருக்கும் அதிகாலை நேரம். விடிந்தும் விடியாத வைகறைப் பொழுதின் குளுமையை, அமைதியை, அழகை ஒரே நொடியில் அஸ்தமிக்கச் செய்த அந்தச் சத்தம் ஊரையே பரபரப்படையச் செய்கிறது. உயிர்ப்பலி எடுப்பதற்காய் யமதர்மன் 'பொம்மர்' உரு எடுத்து வந்து விட்டான்.

'தம்பி சத்தம் கேக்குது. எழும்பி பங்கருக்கை ஓடடா.'

சொல்லிக் கொண்டே ஓட்டப் பந்தயத்தில் ஒலிம்பிக் வீராங்கனைக்கே சவால் விடக்கூடிய வேகத்தில் அம்மா ஓடிக் கொண்டிருக்கிறார். எனக்கு எரிச்சலாயிருக்கிறது.

'சீ..... இதென்ன வாழ்க்கை. உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு ஒவ்வொரு நாளும் ஓட்டமும் நடையுமா..... இதை விட இப்படியே கிடந்து செத்துப் போகலாம்.....'

விரக்தியின் எல்லையில் மனதிற்குள் எண்ணிக் கொண்டவனாய் அப்படியே கட்டிலில் கிடக்கிறேன்.

"டும்........."

'பொம்மர்' தன் கைவரிசையைக் காட்டிவிட்டது. குண்டு கன தூரந் தள்ளித் தான் விழுந்திருக்க வேண்டும். ஆனால்

**ஆறுதல் பரிசுக் கதை – 6**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அதிர்ச்சியிலே கூரையிலிருந்து பெயர்ந்து வந்த ஓட்டுத் துண்டொன்று என் தலைமாட்டில் விழுகின்றது.

சில அனர்த்தங்கள் நடப்பதற்கு முன்பாக ஏதாவது 'சிக்னல்' தெரியுமாம். பாட்டி கதை கதையாகச் சொல்லுவார். அப்படியானால் அடுத்த குண்டு உன் தலையில் தான் என்று இயற்கை எச்சரிக் கின்றதோ?

மனத்திலிருந்த உறுதி ஓட்டிற்குள் தலையை இழுத்துக் கொண்ட ஆமையாக, எங்கோ சென்று ஒளித்துக் கொள்ள சட்டென்று எழுந்து பங்கரை நோக்கி ஓடுகிறேன். மரண பயம் யாரைத்தான் விட்டது?

நான்கு வீடுகளுக்குப் பொதுவான அந்தச் சிறிய பங்கர் ஏற்கனவே நிரம்பி வழிகின்றது. உள்ளே நின்ற இருபது உருப் படிகளுடன் இருபத்தொன்றாவதாக என்னையும் இணைத்துக் கொள்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது.

அப்பாடா! ஒரு காலை வைப்பதற்கு இடங் கிடைத்துவிட்டது. பங்கருக்குள் 'சிதம்பர நடராஜர்' வடிவம் எடுக்கின்றேன்.

இதற்குள் இரண்டு பெண்கள் தங்கள் குடும்பிச் சண்டையை ஆரம்பித்து விட்டார்கள்.

"ஆரப்பா இடிக்கிறது? கொஞ்சந் தள்ளி நில்லுங்கோ பாப்பம்."

"இதுக்கிள்ளை எங்கை தள்ளி நிக்கிறது.... நாங்களே இஞ்சை மூச்சு விட ஏலாமல் நிக்கிறம்..... நெரிபடாமல் நிக்க வேணுமெண்டால் வீட்டிலை தனி பங்கர் வெட்ட வேண்டியது தானே?"

"நீ வந்து வெட்டித் தாவன்."

வார்த்தைகள் தடித்து ஒருமையில் வந்து நின்றன.

"மச்சான், 'ஓயாத அலைகள் 5' தொடங்கிட்டுது"

இளைஞன் ஒருவன் ஜோக்கடிக்க பங்கருக்குள் கொல்லென்ற சிரிப்பொலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை அவலத்திற்குள்ளும், மரண அரக்கன் தலைக்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலையிலும் இவர் களால் இப்படிச் சிரிக்க முடிகின்றதே என்று நினைக்கின்ற போது ஆச்சரியமாகவும் இருக்கிறது.

மற்றக் காலையும் நிலத்தில் வைக்க வேண்டும் என்ற என் நினைப்பை அந்தச் சண்டை அடியோடு கைவிட வைத்துவிட ஒற்றைக் காலிலேயே 'தவம்' செய்கிறேன்......

"பறவாயில்லை. காலையிலை கொஞ்சம் உடற்பயிற்சி யாகவாவது இருக்கட்டும்"

இயலாமை சமாதானமாக மாறுகிறது. மனஞ் சமாதானஞ் சொல்லிக் கொண்டாலும் கால் கடுமையாக வலிக்கத்தான் செய்தது.

"மூன்று குண்டுகளையும் போட்டிட்டாங்கள். வாங்கோ வெளியிலை போவம்"

முன் வீட்டுப் பென்சனியரின் அனுபவபூர்வமான வார்த்தை வயிற்றில் பால் வார்க்க வெளியே வந்து வேண்டா வெறுப்புடன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் செல்லத் தயாராகிறேன்.

"இந்தா தம்பி..... இதைச் சாப்பிட்டிட்டுப் போ."

அம்மா இடியப்பத்தையும் கத்தரிக்காய்க் கறியையும் கொண்டு ஓடி வருகின்றார்.

"இந்த வயதிலும் இப்படி சுறுசுறுப்பாக இருக்க உன்னால் எப்படியம்மா முடிகிறது? இத்தனை துன்பத்திற்குள்ளும் சிரித்தபடியே ஓடி ஓடி வேலை செய்கின்ற வித்தையை எங்கேயம்மா கற்றுக் கொண்டாய்?"

மனதிற்குள் வியந்தவாறே மளமளவென்று சாப்பிட்டுவிட்டு சைக்கிளில் ஏறி மிதிக்கிறேன். அது 'கிறீச்' 'கிறீச்' என்ற சத்தத்துடன் மெள்ள நகருகிறது.

"என்னோடை படிச்சவங்கள் எல்லாம் கொழும்பிலை காரெண்டும் பங்களா எண்டும் வசதியா இருக்கிறாங்கள். நான் இஞ்சை இந்த ஓட்டைச் சைக்கிளோடை கிடந்து மாயுறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கம் பெருமூச்சாக வெளிக்கிளம்புகிறது.

“ஐயா வாறார்..... ஐயா வாறார்.”

சந்தோசம் மேலிட கூடியிருந்த மக்களிடம் காணப்பட்ட சலசலப்பும் ஆரவாரமும் என்னை நிஜவுலகிற்குக் கொண்டு வருகிறது.

“கொஞ்சம் தள்ளி நில்லுங்கோ பாப்பம்...... மனிசர் போற தில்லையே?”

மன உளைச்சலை அந்த அப்பாவிகளிடம் கொட்டியபடியே போய் ஆசனத்தில் அமர்ந்து மேசையிலிருந்த தண்ணீரைக் குடித்து விட்டு சிற்றூழியன் கந்தசாமியைப் பார்க்கிறேன்.

“ஒவ்வொருத்தரா வரிசையா வாங்கோ.” அவன் தொழிலை ஆரம்பித்து விட்டான்.

ஆட்களை அனுப்பச் சொல்லி நான் சொல்லவில்லை. ஒரு நாளும் சொல்வதில்லைத் தான். கடமைக்கு வந்த முதல் நாள் நான் தண்ணீரைக் குடித்து விட்டு ஆட்களை அனுப்பச் சொன்னதிலிருந்து அதையே நேரசூசியாக்கி, ஆசனத்தில் அமர்ந்து தண்ணீரைக் குடித்து விட்டு ஒரு பார்வை பார்த்ததுமே அவன் தொடங்கி விடுவான். காதலர்கள் மட்டும்தான் கண்களால் பேசிக் கொள்ள வேண்டும் என்று சட்டமில்லையே.

இங்கே கந்தசாமியைப் பற்றி கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும்.

கந்தசாமி சிற்றூழியன் என்றாலும் புத்திசாலி. குறிப்பறிந்து செயற்படுவதில் விண்ணன். ஆனால் என்னோடு அதிகம் கதைக்க மாட்டான். ஏதாவது கதைப்பது என்றாலும் நான்காக மடிந்து தட்டுத் தடுமாறிச் சொல்லி முடிப்பான். கேட்டால் மரியாதை என்பான்.

“ஏன் கந்தசாமி உப்பிடிப் பயப்படுறாய்? சும்மா சொல்லன்.”

நானும் எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன். அவன் மாறுவதாயில்லை.

“ஆச்சி கெதியா வாணை.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமி அவசரப்படுத்துகிறான்.

நடக்க முடியாமல் வந்து என்னருகே அமர்ந்த அந்த மூதாட்டியை உற்றுப் பார்க்கிறேன்.

உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆகக் குறைந்த தசைகளையும் இயக்கத்தையும் கொண்ட உருவம் அது. ஒட்டி உலர்ந்த உடல். குழிவிழுந்த கண்கள். தொய்ந்து தூங்கும் கன்னங்கள். கந்தல் உடை.....

வறுமையின் முத்திரைகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

“தம்பி ராசா..... ஒரே கிறுதியாக கிடக்குது..... எழும்பி நடக்கவும் முடியேல்லை..... நல்ல மருந்தாத் தா தம்பி..... உனக்குப் புண்ணியங் கிடைக்கும்.....”

குரல் தளுதளுக்க என் இரு கைகளையும் ஆதரவுடன் பற்றிக் கொள்ள முயன்றவர், “முதலிலை கையை எடுங்கோ பாப்பம். அதுக்குள்ளை சொந்தங் கொண்டாடுறியள்” என்ற அதட்டலில் பயந்து போய் தன்கைகளை விடுவித்துக் கொள்கிறார்.

“உது வருத்தமில்லையெணை..... உடம்பு பலவீனமா இருக்குது. மூண்டு நேரமும் நல்ல சத்தாச் சாப்பிட்டால் உந்தக் கிறுதியெல்லாம் சரியாப் போயிடும்..... பொயிட்டு வாங்கோ.”

சத்தாகச் சாப்பிடக்கூடிய பொருளாதார நிலை அவருக்கு இல்லை என்பது எனக்குப் புரியாமலில்லை. நானும் என்ன தான் செய்ய முடியும்? சத்துக்கான விட்டமின் குளுசைகளை குடுக்கலாம் என்றால் அவையும் தாண்டிக்குளம் தாண்டி வருவதில்லையே. ஏமாற்றத்தோடு அந்த மூதாட்டி எழுந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஒவ்வொருவராகப் பார்த்து முடிப்பதற்குள் மூன்று மணியாகி விட்டது. பசி வயிற்றைக் கிள்ளுகிறது.

‘சாப்பாடுமில்லாமல் இந்தச் சனத்தோடை கிடந்து மாய வேண்டிக் கிடக்குது. எப்படியும் கொழும்புக்கு மாற்றம் எடுத்துக் கொண்டு போயிட வேணும்.’

மனதினுள் திடமாகக் குடிகொண்ட எண்ணத்தைச் செயலாக்க முனைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்து விடுகிறது. சந்தோசத்துடன் கடிதத்தை அம்மாவிடம் காட்டுகிறேன்.

"உனக்கு விருப்பமெண்டால் பொயிட்டு வா தம்பி."

உயிர்ப்பில்லாமல் சொல்லுகிறார்.

அம்மா எப்போதும் இப்படித்தான். என்னுடைய எண்ணத்துக்கும் செயல்களுக்கும் ஒரு நாளும் குறுக்கே நிற்க மாட்டார். அவருடைய விருப்பங்கள், எண்ணங்கள், உயர்ச்சிகள் எல்லாவற்றையும் தன்னுடைய மனதிற்குள் போட்டு மூடி விடுவார். எல்லாத் தாய்மாரும் இப்படித்தான் இருப்பார்களோ?

அம்மாவிற்கு என்னுடைய முடிவில் துளியும் விருப்பமில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அதை நான் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இதைப் பற்றி நான் கிளற அவர் தன் மனந் திறந்து 'போக வேண்டாம்' என்று சொல்லிவிட்டால் என்னுடைய தலைநகரக் கனவு என்னாவது?

இரண்டு நாட்களுக்குள் செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது. ஊரே சோகத்தில் மூழ்கிவிட்டது போலிருந்தது. மக்களெல்லாம் எங்கள் வீட்டிற்குப் படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"யுத்த சீரழிவுக்குள்ளையும் பசிபட்டினிக்குள்ளையும் நோய்நொடிக்குள்ளையும் கிடந்து சீரழியிற எங்களை நீங்கள் தான் கடவுள் மாதிரிக் காப்பாற்றினீங்கள்..... நீங்களும் எங்களைக் கைவிட்டிட்டுப் போனா நாங்கள் என்ன செய்வம்?"

கெஞ்சியவர்களின் கண்களில் பனித்த கண்ணீர்த்துளிகளுக்கு நான் என்ன பதிலைத்தான் சொல்ல முடியும்?

"ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ? நான் போனால் இன்னொரு புது டொக்டர் வருவார்தானே?"

அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக இப்படிச் சொன்னாலும என்னைப் போலவே பலரும் தென்னிலங்கையை நாடிச் செல்லும் நிலையில் புது வைத்தியர் வருவது முயற்கொம்பு என்பதும் நானறியாததல்ல.

ஆக மொத்தத்தில் என்னுடைய பயணம் ஊரில் ஒருவருக்குமே பிடிக்கவில்லை. என்னையும் ரவியையும் தவிர. அவன் பக்கத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் வைத்தியராகப் பணிபுரிபவன். என்னைத் தொடர்ந்து தலைநகரம் வரக் காத்திருப்பவன். எனக்குச் 'சப்போர்ட்' பண்ணித் தானே ஆக வேண்டும்.

அப்பாடா! என்னுடைய ஆசைக்கனவுகளும், கற்பனைகளும் நனவாகும் அந்த நாளும் வந்துவிட்டது. என்னுடைய தலைநகரப் பயணம் ஆரம்பித்துவிட்டது. அந்த நாட்களில் அப்பா வவுனியாவில் வேலை செய்து விட்டு காலையில் புறப்பட்டு பகல் சாப்பாட்டிற்கு வீட்டில் நிற்பார். ஆனால் நான் வவுனியா வந்தடைவதற்கு முழுதாக இரண்டு நாட்கள் பிடித்தன.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அடையாள அட்டை தன்னுடைய முக்கியத்துவத்தை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்கிறது.

தடை முகாமில் இரண்டு பக்கமும் முட்கம்பி அடைக்கப்பட்ட இடத்திற்கூடாக வரிசையாக நகர்த்தப்பட்டு ஒவ்வொருவராக அழைத்து விசாரணை நடக்கிறது. என்னுடைய முறை வந்து விட்டது. முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டே கேள்விக் கணைகள் தொடுக்கப்படுகின்றன. இவர்களுக்குப் பயிற்சியளிக்கும் போதே சிரிக்கக்கூடாது என்று சத்தியம் வாங்கிவிடுகிறார்களோ என்னவோ?

"பெயரென்ன?"

"சங்கர்."

"தொழில்?"

"டாக்டர்"

"புலிக்கு மருந்து குடுத்ததா?"

எனக்கு வந்த எரிச்சலை 'நான் மிருக வைத்தியர் இல்லை' என்று சொல்ல நினைத்தாலும், உயிரின் மீதான ஆசை, ஒரு அசட்டுச் சிரிப்பைச் சிரிக்க வைக்கிறது.

அப்பாடா! ஒருவாறாக விசாரணைகளை முடித்துக் கொண்டு இரவு ரயிலேறி கொழும்புக்கு வந்து சேர்ந்தாயிற்று. தலைநகரின் பிரமாண்டம் இரவைப் பகலாக்கும் மின்னொளியும் ஏசியின் குளுமையும் பட்ட கஸ்ரத்தையும் களைப்பையும் மறக்கச் செய்ய அப்பிடியே தூக்கம் அணைத்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகத்தயா நகிடென்ன." (ஐயா எழும்புங்கள்)

தேனீருடன் நின்ற விடுதிப் பையனின் குரலிலே விழித்த வனாய் மணிக்கூட்டைப் பார்க்கிறேன். ஏழு மணியாகிவிட்டிருந்தது. மளமளவென்று குளித்துத் தயாராகி வைத்தியசாலையை அடை கிறேன்.

வைத்தியசாலை என்னைப் பிரமிக்க வைக்கிறது. நோயாளி களின் நெரிசலிலும் வியர்வையிலும் நனைந்து பழகிய எனக்கு குளிரூட்டப்பட்ட வைத்தியசாலை புது அனுபவத்தைத் தருகிறது.

நோயாளர்கள் வரத் தொடங்கவே நான் தொழிலில் லயித்து விட்டேன். இயந்திர வேகத்துடன் வந்து ஒப்புக்காக உதட்டளவில் ஒரு 'தாங்க் யூ'வுடன் திரும்பிச் செல்லும் இவர்களையும் உளமார அன்பு செய்து தம் இதயத்தில் என்னை வைத்திருந்த ஊர் மக்களையும் ஒப்பிட்டுப் பார்த்த போது இதயத்தின் ஓர் மூலையிலே மெல்லிய நெருடல் ஏற்படத்தான் செய்தது.

எப்போதும் சற்றுத் தூரத்தில் இருந்து பார்க்கும் போது தானே யதார்த்தங்கள் புரிகின்றன.

"தொஸ்தருக்கு வணக்கம்."

தடித்த குரலிலான கொச்சைத் தமிழ் என்னை நிமிர்ந்து பார்க்க வைக்கிறது.

"பெகெத் தென்ன." (மருந்து தாருங்கள்)

ஏதோ தந்து வைத்த ஒரு பொருளைக் கேட்பது போல அவன் கேட்டது எரிச்சலைத் தந்தது. என்னைச் சீண்ட வேண்டும் என்பதற்காகவே வந்திருக்கிறான் என்பதும் விளங்கியது. என்னைச் சுதாகரித்துக் கொண்டு;

"உள்ளுக்கு ஒருவரைப் பார்த்துக் கொண்டல்லவா இருக்கிறேன். போய் வரிசையிலே வாருங்கள்."

என்று சிங்களத்தில் அமைதியாகவே சொல்லுகிறேன்.

"ஆ எகெமத? அபெ பலாத்தட அவில்லா அபடம உகண்ணணவா...... பற தெமலா. உம்பலாவ மறல தாண்ண ஓணே......" (ஆ! அப்படியா? எங்களது பகுதிக்கு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கே படிப்பிக்கிறாய். கெட்ட தமிழா..... உன்னைக் கொல்ல வேணும்).

ஏதோ பிரச்சினை எடுக்கப் போகிறான் என்று உள்ளுணர்வு எச்சரிக்க சிற்றூழியனை அழைத்து அவனை வெளியே அனுப்பும்படி சொல்கிறேன்.

“மே மகத்தயாத்தெக்க ரண்டுவென்ன மட்ட பே. ஒயா கிஹின் லொக்காட்ட கியன்ன” (இந்த ஐயாவுடன் சண்டை பிடிக்க என்னால் ஏலாது. நீங்கள் போய் பெரியவரிடம் சொல்லுங்கள்). முகத்தில் அடித்தது போல் சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

ஆத்திரம் கொப்பளிக்க விறுக்கென்று எழுந்து மேலதிகாரியின் அறைக்குள் சென்று நடந்த சம்பவத்தை ஒப்புவிக்கிறேன்.

“சுட்டக் கலபல நத்துவ வாடிவென்ன.” (கொஞ்சம் கலவர மில்லாமல் அமருங்கள்)

ஆசனத்தைக் காட்டி விட்டு சிற்றூழியனை அழைத்து விசாரித்தவர் செருமலுடனே ஆரம்பிக்கிறார்.

“பதட்டப்பட வேண்டாம். வந்திருக்கிறது ஒரு அரசியல் புள்ளி யின் கையாள். அவங்களை எதிர்த்து நான் ஒன்றும் செய்ய ஏலாது. மற்றது நீங்கள் ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறீர்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நாங்கள் உங்களுடைய பக்கத்துக்கு வர முடியாது. ஆனால் நீங்கள் நாடு முழுவதும் சுற்றுவீர்கள். அவர்கள் உங்களை இங்கே இருக்க விட்டிருப்ப தற்காக நீங்கள் சந்தோசப்பட வேண்டும்.”

ஆங்கிலத்திலே சொல்லி முடிக்கிறார்.

இது வழமையான இனவாதப் பல்லவி தான். ஆனால் டொக்டர் பெர்னாண்டோ போன்ற ஒருவரிடமிருந்து இதனை நான் எதிர்பார்க்கவில்லை. எனது அமைதியைச் சாதகமாக்கிக் கொண்டு அவரே தொடர்கிறார்.

“சரி, சரி, வந்தவருக்கு மருந்தைக் குடுத்துவிட்டு வேலை யைப் பாருங்கள்.”

சொன்னவரை இடைமறித்து;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எனக்கேலாது சேர்! மானம் ரோசம் எல்லாம் எனக்கும் இருக்கிறது.” பொரிந்து தள்ளுகிறேன்.

“அப்படியெண்டால் லீவைப் போட்டிட்டுப் போங்க. இல்லாட்டி வீண் பிரச்சினை வரும். உங்களுக்குத் தான் கஸ்ரம்.”

தொடர்ந்து பேச்சை வளர்க்க விரும்பவில்லை என்பதற்கு அடையாளமாக தொலைபேசியை எடுத்து யாருடனோ உரையாடலை ஆரம்பித்துவிட்டார்.

லீவைப் போட்டுவிட்டு திரும்பி வந்துவிட்டேன். அறைக் கதவைப் ‘படார்’ என்று அடித்துச் சாத்திவிட்டு கட்டிலிலே தொப்பென்று விழுந்துவிட்டேன்.

இங்கே எங்களது கோபத்தைச் சடப்பொருட்களில் தானே காட்ட முடியும்.

கட்டிலிலே புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வருவதாக இல்லை. மனம் கொதித்துக் கொண்டிருக்கும் போது எப்படி நித்திரை வரும்?

கடவுளைப் போல மதித்து, தங்களில் ஒருவராக அன்பு காட்டிய அந்த மக்களைத் தவிக்க விட்டுவிட்டு வந்து இப்படி அவமானப்பட வேண்டி இருக்கிறதே என்ற நினைப்பு கண்களைக் குளமாக்குகிறது.

குளுமை தந்து கொண்டிருந்த ‘எயார்கொண்டிசனும்’ மேசையில் கிடந்த புறியாணிப் பார்சலும் பஞ்சணை மெத்தையும் வெறுப்பேற்றின.

என்னை மதித்த மக்களிடமே மீண்டும் போய்விட வேண்டும் என்ற எண்ணத்தில் மாற்றல் கோரிக் கடிதம் எழுதிவிட்டு இன்னுமொரு கடிதம் எழுதுகிறேன். அது ரவிக்குரியது.

அன்பின் ரவி,

தலைநகரம் சொர்க்கபுரியாகத் தானிருக்கிறது. எல்லா வசதிகளும் குவிந்து கிடக்கின்றன. சுகபோக வாழ்க்கை வாழலாம். ஆனால் ஒரு விசயம். தன்மானத்தையும் தனித்துவத்தையும் மறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதராக (பிராணியாக) வாழச் சம்மதம் என்றால் மட்டுமே இவற்றை அனுபவிக்கலாம். யோசித்து முடிவெடுக்கவும்.

அன்புடன்

சங்கர்.

மீண்டுமொரு முறை கடிதத்தை வாசித்துப் பார்த்த போது மனம் இலேசாகி இருப்பதைப் போலிருந்தது. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை மனம்

## இரா.பரமேஸ்வரன்

**அ**ப்பா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

"செல்வம், பாடம் சொல்லிக் கொடுத்த வாத்தியார். முப்பது வருடப் பழக்கம். மதிக்க வேண்டியதுதான். ஆனா அவர் கடையில சாமான் வாங்கிய பாக்கி ஆறு மாதமாக நிலுவையில் உள்ளது. அதைக் கேட்காமல் விட்டுவிடலாமா? வாத்தியார் மேலே இருக்கிற மதிப்பு மரியாதை வேறு, கடைப்பாக்கி வேறு. இரண்டையும் ஒன்றாய்க் கலக்கக்கூடாது. இதனால் மதிப்பும் தேறாது, பணமும் தேறாது. இண்டைக்கு வாத்தியார் சாமான் வாங்க வந்தால், பாக்கியைக் கொடுத்து விட்டுச் சாமான் வாங்கச் சொல்லு."

நான் மௌனமாக நின்றேன்.

"என்னடா சும்மா நிக்கிறே? உனக்குக் கூச்சமாக இருந்தால் சொல்லு கணக்கப்பிள்ளையை விட்டுக் கேட்கச் சொல்கிறேன்" என்றார்.

"வேண்டாமப்பா." அவசர அவசரமாக மறுத்தேன். கணக்கப் பிள்ளைக்குப் பாறை மனம். நாக்கிலே நரம்பில்லாததினால் எதையும் பேசுவார். வாயில் வருபவற்றை எல்லாம் கொட்டிவிடுவார். பின் விளைவுகள் பற்றி அவருக்குக் கவலையில்லை. பாக்கியை வசூலித்து விட வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் மட்டுமே அவருக்கு.

அப்பா கல்லாவை விட்டு எழுந்தார். நான் அதில் அமர்ந்து கொண்டேன்.

ஆறுதல் பரிசுக் கதை – 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை எதிரே தனது சைக்கிளை நிறுத்திவிட்டு கடையை நோக்கி வந்தான் இளங்கோ. வரும்போதே முணுமுணுப்பு.

"சே..... இந்த அப்பாக்களே மோசம். எப்ப பார்த்தாலும் பணம் பணம் என்று அலையிறாங்க."

"என்னடா விஷயம்?"

"உனக்குத்தான் நம்ம வாத்தியார் கதை தெரியுமே. ஆறு மாத வீட்டு வாடகை பாக்கி. போய்க் கேளுடா என்று அப்பா ஒரே தொல்லை. நேற்றுப் போனேன். அவர் சம்சாரத்துக்குச் சுகமில்லையாம். ஐம்பது ரூபாவை வைத்துக்கொண்டு எந்த மருந்தை வாங்குவது எதை விடுவது என்று தடுமாறிக் கொண்டிருந்தார். இப்படிக் குடுங்க சேர் என்று துண்டைக் கேட்டு வாங்கிப் போய் மருந்து வாங்கிக் கொடுத்தேன். அந்த நிலையில் அவரிடம் எப்படி வாடகையைக் கேட்பது. அப்பா அவரை வீட்டைக் காலி பண்ணச் சொல்லச் சொல்லிச் சொல்கிறார்."

"நான் என்னடா செய்யிறது?"

"இவன் கேசும் நம்ம கேசுதான்."

"ஆமாண்டா இளங்கோ. வாத்தியார் மகன் சதீஷ் கொழும்பிலே என்னடா செய்யிறான்? நல்ல வேலையிலே இருக்கிறான். நல்ல சம்பளமும் வாங்குவதாக சொன்னாங்களே. பாவம் வாத்தியார். மாதாமாதம் கொஞ்சம் அனுப்பி வைக்கலாம் தானே?"

"அவன் ஒழுங்கா அப்பிடி அனுப்பினான் என்றால் நானும் நீயும் ஏன் இப்படி இடிபடவேண்டும்."

"சதீஷ் எங்களை விடப் படிப்பில் கெட்டிக்காரன். மனப்பாடம் செய்வதில் புலி. நல்ல ஞாபகசக்தி. எங்களுடன் விளையாடும் போது அடி உதை வாங்கியவன். இன்று கொழும்பில் நல்ல வேலையில் இருக்கிறான். கம்பெனி ஒன்றின் எம்.டி. ஒருவரின் மருமகன் வேறு. பெரிய இடத்துச் சம்பந்தம். இதனால்தான் வாத்தியார் கூட தனது சேமிப்புக்கள் அனைத்தையும் மகனின் கல்யாணத்தில் போட்டுச் செலவு செய்துவிட்டு இப்போ கவனிப்பார் அற்று நிற்கிறார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணமாகி இரண்டு வருடங்கள் ஆகின்றது. இன்னும் ஒரு தடவை கூட சதீஷ் தம்பதிகள் ஊர்ப்பக்கம் எட்டிக்கூடப் பாக்கவில்லை. வாத்தியாரின் மருமகளைப் பார்க்க வேண்டும் என்று எங்கள் ஊர்ப் பெண்களுக்கெல்லாம் ஆசை.

கல்யாணமான குஷியோ? கடிதம் போட நேரமில்லையோ? மனமில்லையோ?

வாத்தியாருக்கும் தினமும் தபால்காரரை எதிர்பார்ப்பதும் ஏமாறுவதும் வாடிக்கையாகிவிட்டது. அவரின் கடிதங்களுக்கு எதுவித பதிலும் வரவே இல்லை.

இப்பொழுது அவரைக் காப்பாற்றுவது அவரின் பென்ஷன் பணம்தான்.

தமிழ் வாத்தியார் என்பதினால் ரியூஷனுக்குக் கூட எவரும் வருவதில்லை.

கொழும்புக்குப் போய்வர அவரால் முடியவில்லை. போய்வர எங்கிருந்து பணம் கிடைக்கும். அதற்கும் கடன்தான் வாங்க வேண்டும். மனைவியையும் தனியாக விட்டுவிட்டுப் போக முடியாது.

எங்கள் கடையில் ஏறும் கடனை அடைக்க முடியால் ஒருவேளைச் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்படுகிறார்.

"அம்மாவின் உடல்நிலையும் திருப்திகரமாக இல்லை" என்றும் எழுதிப்பார்த்தார். அதற்கும் சதீஷ் மசியவில்லை.

அன்று சதீஷிடமிருந்து தபால் வந்தது. ஆபீசில் வேலை அதிகம் அதையெல்லாம் விட்டுவிட்டு வரமுடியாது. அம்மா குணமடைய கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து விபூதி குங்குமம் அனுப்பியுள்ளேன்..... என்று கடிதத்துடன் மயூரபதி அம்மன் ஆலய விபூதி குங்குமம் வந்து சேர்ந்தது. பணம் வரா விட்டாலும் மகனிடமிருந்து கடிதம் வந்ததில் வாத்தியாருக்கு மகிழ்ச்சி.

இன்று முதல் தேதி. வந்துவிட்டார் வாத்தியார்.

"என்னடா செல்வம் பேப்பரிலே என்ன புதினம்?" பேப்பரை வாங்கிக் கொண்டே சின்னக் காகிதத்துண்டை நீட்டினார். அரிசி, பருப்பு, சீனி என்று அத்தியாவசியப் பொருட்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்வம் இதெல்லாம் முக்கியமாவேனும். இந்த மாதப் பென்ஷன் வந்ததும் தாறேன்."

கணக்கப்பிள்ளையின் வில்லன் பார்வையை மறித்து நானே சாமான்களைப் பொட்டலம் கட்டத் தொடங்கினேன். "என்ன சேர் சதீஷ் லெட்டர் போட்டானாமே?"

"ஆமாம் அவனுக்கு அங்கே என்ன கஷ்டமோ, நேரமில்லை யாம். கல்யாணமான புதிசு அப்படித்தான் இருக்கும். வேலை களுக்கு இடையிலேயும் கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்து விபூதி குங்குமம் அனுப்பியிருந்தான்" என்று கூறியபடி சாமான் களுடன் புறப்பட்டார்.

கொழும்புக்கு வியாபார விஷயமாகப் போகும் போதெல்லாம் சதீஷைப் பார்க்க முயற்சிப்பேன். கிடைக்கவே மாட்டான். இந்த முறை விடப் போவதில்லை.

நாலாங்குறுக்குத் தெருச் சந்தியில் நின்ற என் முதுகில் ஒரு கை தட்டியது. திரும்பினேன். சதீஷ் நின்றான். அவனை ஒட்டி நின்றாள் அவனின் திருமதி.

"எப்படா வந்தனி செல்வம். வா, வந்து காரில் ஏறு. பேசிக் கொண்டே போகலாம்" கார் எங்கோ நோக்கிப் புறப்பட்டது.

"டார்லிங் இவன்தான் செல்வம். இவன் கடை அரிசி, பருப்பைத் தின்றுதான் நான் வளர்ந்தேன். கல்யாணத்தில் பார்த்திருப்பியே?"

அரை வினாடிக்கும் குறைவாக என்னைத் திரும்பிப் பார்த்து 'ஹலோ' என்றாள்.

சதீஷ் சற்றுப் பருத்திருந்தான். வசதி கன்னத்திலும் கழுத்திலும உறுதியான புயத்திலும் தெரிந்தது.

"என்ன சதீஷ் எப்படி இருக்கிறாய். இப்போ எங்கே போகிறோம்?"

"சாப்பாட்டுக்குத்தான். இன்றைக்கு உன் கம்பெனி கிடைச்சி ருக்குது."

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கார் நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத் தொப்பிக்காரன் கதவைத் திறந்து தலையைச் சரித்து ஒரு புன்முறுவல் பூத்தான். காலைப் பாதாளம் வரை அழுத்தும் கம்பளம், வரவேற்பில் முழுகிய உதட்டு முறுவல்கள். எல்லாவற்றிலும் நெடுநாள் பழக்க வாசனை வீசியது.

உள்ளே சென்றதும் "டேபிள் செவண்டீன் பிளீஸ்" என்று வழிகாட்டினான் ஒருவன்.

சதீஷும் மனைவியும் அருகருகே அமர்ந்தனர். நான் எதிரில் அமர்ந்தேன்.

"என்ன செல்வம் வியப்பாக இருக்கிறதா? இதுதாண்டா என்னுடைய பொசிஷன். ஐஸ் வாட்டர் வேணும் என்றாலும் கூட ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருந்துதான் வரும்."

"நேரம் போகவில்லை என்று சொன்னாள். அது தான் டேபிள் புக் பண்ணினேன். நீ என்ன சாப்பிடப் போறே. கூச்சப்படாதே. இவள் சைவம் தான். ஆனால் "ஒம்லட்" சாப்பிடுவாள்."

அவன் வெள்ளைத் தொப்பிக்காரனிடம் ஏதோ பேச, நான் கொஞ்சம் திருமதியை வேடிக்கை பார்த்தேன். தினமும் "பில்ஸ்" சாப்பிட்டு இளமையைக் காத்துக் கொள்ளும் இருபத்து மூன்று வயது. டெயிலரின் கத்திரி தாராளமாக இறங்கியிருந்தது. இருட்டிலும பளபளக்கும் முகம். இறக்குமதி செய்யப்பட்ட சோப்பு, பவுடர் சென்ட் வகைகள் லாவகமாகத் தழுவிய உடம்பு. இப்படிப்பட்ட மனைவியை விட்டு ஒரு வினாடி கூட பிரிய யாராலும் முடியாது. தப்புப் பார்வையைத் திருத்திக் கொண்டேன்.

என் மனதுக்குள்ளே ஒரு மகிழ்ச்சி. எப்படியும் சதீஷ் வாத்தியாருக்குப் பணம் கொடுப்பான். அதை வாங்கிக் கொடுத்து அவர் மனதைக் குளிரப் பண்ணலாம் என்று நப்பாசை.

கணவனைத் தோளால் இடித்துக் கொண்டு அவள் லிப்ஸ்டிக் குக்குச் சேதம் வராமல் சாப்பிட்டாள். சதீஸுக்கும் கூச்சம் இல்லை. என் கண் முன்னாலேயே அவளைச் சுதந்திரமாகத் தொட்டான். கன்னத்தில் விழுந்த முடியை எடுத்துக் காதில் சுற்றி விட்டான்.

பின்னங்கழுத்து வியர்வையைத் தன் கைக்குட்டையால் ஒற்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் வந்தது. ஐந்நூறு ரூபாய் நோட்டை வைத்து விட்டு சதீஷ் எழுந்த போது, போன வாரம் என் கடைக்கு முன் கடன் கேட்டுவந்து நின்ற வாத்தியாரின் முகம் நினைவுக்கு வந்தது.

“அப்புறம் எத்தனை நாள் கொழும்பில் தங்கப்போறே? வியாபாரம் எப்படி நடக்கின்றது?” என்னென்னவோ கேட்டான். தப்பித்தவறிக் கூட அப்பா அம்மாவைக் கேட்கவில்லை. திருமதியும் அப்படித்தான். தனக்கு ஒரு மாமன், மாமி இருக்கிறார்கள் என்ற எண்ணமே இல்லாதவளாகக் காணப்பட்டாள்.

“இப்போ எங்களால் ஊருக்கு வரமுடியாது நிறைய வேலை. வெள்ளவத்தையில் புது மொடல் வீடு கட்டத் தொடங்கி விட்டேன். வேலைகள் நடந்து கொண்டிருக்குது. இவளுக்கும் வீடியோ, சினிமா, கிளப் என்று பொழுது போகின்றது. ஊரிலே என்ன இருக்குது. அங்கே வந்தா உட்காரக்கூட வீட்டில் ஒரு கதிரை இல்லை. கிழிஞ்ச பாயும் அழுக்குத் தலவணியும் தான். எப்ப பார்த்தாலும் தரித்திர புராணம்தான்.”

“அப்பா அம்மா உங்களைப் பார்க்கத் துடியாய் துடிக்கிறாங்க.”

“வந்தாப் போச்சு. எங்கே போயிடப் போறாங்க? அவைக்குக் கொழும்பு புடிக்காது. இவளுக்கு அந்தப் பட்டிக்காட்டுத் தனம் ஒத்து வராது என்ன செய்யிறது?”

“அப்பா, அம்மாவுக்கு மாசா மாசம் ஐந்நூறோ, ஆயிரமோ அனுப்பினால் நல்லது.”

“பணமா? அவயளுக்கா? எதுக்கடா அவைக்குப் பணம்? அங்கே ரெண்டு பேருக்கும் வாற பென்ஷனே அதிகம். நான் அனுப்பிற காசிலதான் அவை வாழவேணுமோ என்ன? அது மட்டுமில்லை இப்போ எனக்குப் பணக் கஷ்டம்.”

நான் எதுவுமே பேசவில்லை.

“இன்று பின்னேரம் ஒரு மியூசிக்கல் ஷோ இருக்குது, ரிக்கற் புக் பண்ணியிருக்கிறேன். நீயும் வா. உன் அரிசி, பருப்பு வியாபாரத்தை முடிச்சிட்டு ஏழரை மணிக்கு வீட்டுக்கு வா.”

ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அங்கே இவன் அப்பன் ஐஞ்சுக்கும் பத்துக்கும் கடன் சொல்லிக்கொண்டு தலைகுனிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க, இங்கே இவனுக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் சாப்பாடும், மியூசிக்கல் ஷோவும்.

இவனைப் பார்த்ததே பாவம். இவனுடன் சாப்பிட்டதே என் குருவுக்குச் செய்த துரோகம்.

"கொழும்புக்குப் போயிருந்தேன், சதீஷைப் பார்த்தேன்."

"அப்பிடியா? எங்களைக் கேட்டானா? மருமகள் எப்படி இருக்கிறாள்? அவளும் எங்களை விசாரித்திருப்பாளே? லெட்டர் களுக்கு ஏன் பதில் எழுதவில்லை என்று சொன்னாள்?" அவரின் பேச்சில் ஓர் ஆர்வம். ஒரு படபடப்புத் தெரிந்தது. அவருக்கு என்ன பதில் சொல்வது என்று நான் சிந்திக்க அவகாசம் தருவது போல் வாத்தியார் மாமி பேசினாள். "நீ போவது தெரிந்திருந்தால் இவர் உன்னோடே கூட வந்திருப்பார். அவனுக்கு ஊறுகாய் என்றால் விருப்பம். கொஞ்சம் தந்து விட்டிருப்பேன்" என்று வாத்தியா மாமி உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள்.

ஊருக்குள் வாத்தியாருக்குக் கடன் கொடுத்தவர்களின் நச்சரிப்பு அதிகமானது.

இந்த நேரத்தில் தான் வாத்தியாருக்கு பென்ஷன் அரியஸ் வந்தது. அதை வைத்துக் கொண்டு கடன் எல்லாவற்றையும் அடைத்து விடலாம் என்று எண்ணினார். கிட்டத்தட்ட ஒரு லட்சம் வரும் என்று கல்வித் திணைக்கள கணக்காளர் சொன்னாராம்.

இனிக் கவலைப்படத் தேவையில்லை. பல பேர் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

நான்கு நாட்கள் கழிந்தன.

அதே தோய்த்துப் போட்ட வேட்டி, விபூதிப்பட்டை, மார்பு வியர்வையில் ஊறிய உடம்போடு ஒட்டிய சட்டை சகிதம் வந்தார் வாத்தியார்.

"செல்வம் இந்த லிஸ்ட் படி கொஞ்சம் சாமான் தா. மிக அவசியமாக வேண்டும். இந்த மாசம் பென்ஷன் எடுத்ததும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக் கடனை அடைத்து விடுகிறேன்" என்று அழாக்குறையாகச் சொன்னார் வாத்தியார்.

"சேர் அரியஸ் வந்ததாகச் சொன்னார்களே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாண்டாப்பா வந்தது, என்ன செய்யிறது சொல்லு. பணத்தை என்ன செய்யலாம் என்று சதீஸைக் கேட்கலாமென்னு கொழும்புக்குப் போனேன். அங்கே சதீஷ் எனக்கு மேலே கஷ்டத்தில் இருக்கிறான். அவன் ஒரு வீடு கட்டத்துவங்கி விட்டானாம். பணக்கஷ்டம் என்றான். ஓ என்று அழுதும்விட்டான். இப்போ ஒரு அறை எடுத்துத்தான் இருக்கிறானாம். அது வசதி யில்லாத இடமாம். என்னையும் வந்து தங்கச் சொன்னான். நான் தான் அவனுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடாதெண்டு பென்ஷன் காசையெல்லாம் அவனுக்குக் கொடுத்துட்டு, உன் கஷ்டம் உன்னோட என் கஷ்டம் என்னோட என்று வந்து விட்டேன்" என்று எண்சாண் உடம்பையும் கூனிக்குறுகி என் முன் அவர் நின்று, "அப்பாவிடம் சொல்லி சாமான்களை" என்று இழுத்தார்.

சட்டென்று எனக்கு அவர் மனம் புரிந்தது.

அந்த மனம். தன் மகனுக்குத் தன்னையும் தன் உழைப் பையும், வருமானத்தையும் கொடுத்துக் கொடுத்து, அப்படிக் கொடுப்பதிலேயே பெருமையும் சுகமும் காணும் ஒரு தந்தை மனம். பிரதிபலனாக கால்க்காசைக் கூட மகனிடமிருந்து வாங்கக் கூச்சப்படும் தந்தை மனம்.

இன்று இரவு அப்பா கணக்குகளைப் பார்ப்பார். வாத்தியார் கணக்கில் பார்வை இடறும்.

அப்பாவின் தாக்கலுக்கு இப்பொழுது முதலே என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுவும் ஒரு தந்தை மனது. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லில் எழுதிய வாழ்வு

## அ.நிஷாந்தன்

நிலத்தில் அறுந்து விழுந்த இடியென தொடர்ந்தது யுத்தம். குருதி குடித்து நிமிர்ந்து நடந்தது கொடிய யுத்தம். தெருவெங்கும் மனித உடல் மணத்து நாய் தின்ன நடந்தது யுத்தம். பின்னொரு நாளில் போர் கொஞ்சம் ஓய்ந்தது. நான்காண்டுகள் சூன்யமாய்க் கிடந்த அழிக்கப்பட்ட ஒரு கிராமத்தின் வான் வெளியில் குருவிகள் பறக்கத் தொடங்கின. தூக்கணாங்குருவிகள் எரிந்துபோன தம் கூடுகளையும் குஞ்சுகளையும் பற்றிய துயரமான நினைவுகளோடு தம் பழைய மரங்களில் உட்காரத் தொடங்கின. வெளவால்கள் ஆந்தைகளை விடவும் வேற்றினப் பறவைகளும் அக்கிராமத்தில் தங்கள் பாடல்களைப் பாடத் தொடங்கின.

“அம்மா நாங்க இனி வீட்ட போகலாந்தானே” என்று சின்னவன் துள்ளிக் குதித்தான். எட்டு வயது நிரம்பினாலும் வயதுக்கு மிஞ்சிய உடல்வாகு அவனுடையது. துருதுருவென இருப்பான். வட்ட முகத்தில் எதையாவது ஆராய்ந்து கொண்டிருக்கும கண்கள். கெம்பிக் கொண்டிருக்கும் தலைமுடி. சிவப்பும் கறுப்பும் வெள்ளையுமாய்ப் பறக்கும் பெரிய வண்ணத்துப் பூச்சியென்றால் அவனுக்கு உயிர். எப்படியாவது உயிருடன் அதைப்பிடித்து விடுவான். பூவில் அதைத் தேன் குடிக்க நிர்ப்பந்திப்பான். பின்பு அதன் கண்ணீர் கண்டு அதைப் பறக்கவிடுவான். அப்பா வாங்கிக் கொடுத்து அவனால் தன் தங்கச்சியென்று சொல்லப்படும் கண்ணை வெட்டிவெட்டி மூடுகின்ற அந்தச் சின்னப் பொம்மை, ஊரைவிட்டு அவர்கள் இடம்பெயர்ந்து ஓடிய போது அவனால் எடுக்க முடியாமல் போனது. அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன இதயத்தில் ஏக்கத்தை உருவாக்கும். தமையனோடு நாவல் பழம் பொறுக்கும் போதும் தன் தங்கச்சியையும் எடுத்துக் கொண்டுதான் போவான். அவர்களின் மாமர நிழலில் மணல்குவித்து அவன் விளையாடிக் கொண்டிருந்த போதுதான் அவர்களின் வீட்டினருகில் யுத்தப் பிசாசு தரையிறங்கியது. மணல்க் கும்பியிலேயே தன் தங்கச்சியை விட்டு விட்டு அம்மாவின் தோளில் அவன் தொங்கிய நினைவுகளும் தொடர்ந்து வெடித்த குண்டுகளுமாய் ஒரு புள்ளியாய்த் தொடங்கி நீளுமவன் நினைவுகள்.

"நான் போய்த் தோட்டப் புட்டியில இந்த முறை பத்து நிலையம் "வெண்டியும் கீரக்கொட்டையும் போடுவன்" என்று கத்தினான். புளியமரத்தில ஏறி குருவி முட்டையெடுத்து கோழியில அடவைப்பன்" என்று சிரித்தான். அம்மா அம்மா என்று சின்னவன் கூப்பிட்டாலும் சரஸ்வதி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். இழந்து போன அவள் வாழ்வும் தகர்ந்து போன வீடும் சொத்துக்களும் பற்றிய நினைவுகள் அவளிற்கு துயரத்தை கொடுத்துக் கொண்டிருந்தன. கணவனின் அன்பு முகம் நினைவில் வந்து சில கண்ணீர்ப்பூக்களை அவளிடமிருந்து பறித்துச் சென்றது. தன் வாழ்வின் துயரங்களின் நீட்சியில் கண்ட அனுபவங்களை வைத்து தன் போன்ற எத்தனை பெண்கள் இப்படியிருப்பார்கள் என்று நினைத்த போது வாழ்வின் மீது வெறுப்புக்கோடுகளையே கீறியது அவள் மனம். பெருமூச்சொன்று வழமைபோல் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றது.

"எல்லாச் சனங்களும் தங்கட தங்கட வீட்ட போகுதுகள் சரஸ்வதி எப்ப போகப் போறாய்?" என்று இவர்களின் தூரத்துச் சொந்தக்காரியும் இருப்பிடம் கொடுத்தவளுமான பரிமளத்தின் வார்த்தைகள் ஏளனத்தையும் திமிரையும் குழைத்துக் கொண்டு சரஸ்வதியின் நினைவைக் கலைத்தது. கோடிப்புறத்திலுள்ள கொட்டிலை வாடகைக்குக் கொடுத்தவள் ஒரு கோடி பணத்தை கொடுத்தவள் போல கதைப்பதைக் கண்டு இயற்கை தனக்குள் சிரித்துக் கொண்டது. "என்னமோ போறத்துக்குள்ள வாங்கின காசையும் வட்டியையும் தந்தாச் சரி" என்றாள். "எங்கட காணிய இந்தமுற குத்தகைக்குக் குடுத்திட்டு அதில வாற காசில உங்கட கடன தந்திடுவன்" என்றாள் சரஸ்வதி.

ஊருக்குப் போவது பற்றிய நினைவுகளில் சரஸ்வதி மூழ்கிக் கிடந்த போது தொலைவில் ஒரு குண்டு வெடிக்கும் சத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. அப்போது சின்னவன் "எப்ப அம்மா குண்டொன்றும் வெடிக்காது? எல்லாச் சனமும் எப்ப அம்மா நிம்மதியா இருப்பாங்க? சமாதானம் எப்ப அம்மா வரும்?" என்று தாயைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தான். "குண்டுக்கும் துவக்குக்கும் என்ன தெரியும் செல்லம்? அது தன்ர வேலையை சரியாத்தான் செய்யுது" என்றாள் சரஸ்வதி. அவன் பலமுறை அவளிடமிதைக் கேட்டிருக்கிறான். முடிவிலியாய் நீண்டு செல்லும் மரண ஓலத்திற்குக காரணமானது எதுவென்று அவளெப்படிப் பதில் சொல்வாள். மனித உணர்வுகள் புரிந்து கொள்ளப்படாத அவலத்தை அவளெப்படிப் புரிய வைப்பாள் அவனுக்கு. "நாளைக்கு காணிக்குப் போய்த் துப்பரவாக்குவம். சின்னவன் நீ வாறாய்தானே" என்றாள் சரஸ்வதி. "நான் வராம வேற யார் வாறது? இண்டைக்கு வெள்ளி பள்ளிக்கூடம போக மாட்டன். நாளைக்கும் நாளையிண்டைக்கும் எனக்குக் கொண்டாட்டம்" என்று கத்திவிட்டு தமையனின் சைக்கிளை எடுத்துக் கீழ் "வாறால்" ஓடினான் சின்னவன். அந்தச் சைக்கிள் அவர்களின் அப்பா பாவித்தது. இப்போது அப்பாவின் ஞாபகமாக நின்று குடும்பத்தின் சுமைகளை தன்னாலியன்றபடி சுமக்கிறது அது. எனினும் கவலைகளால் துருவேறிக் கொண்டிருந்தது சரஸ்வதியின் மனம்போல. ராசன் தான் குடும்பத்தின் மூத்த பிள்ளை. அவனைப் படிப்பிக்க வேண்டும் என்பதற்காக அவளின் கைகள் உலக்கையோடு உறவுவைத்து காய்த்துப் போயிருந்தது. யாருக்கும் மாவிடித்துக் கொடுக்கும் போது ராசன் நல்ல ஒரு உத்தியோகத்தில் வருவது போல் ஒரு காட்சி அவள் மனதில் விரியும். வியர்வையை விரயமாக்கி இயலாமையிலும் உழைத்தாள் அவள். இப்போது அவனும் பத்தாவது படித்துக் கொண்டிருந்தான். ராசனும் தன் குடும்பத்தின் நிலையை மாற்ற வேண்டுமென்று கஸ்ரப்பட்டுப் படித்தான். லீவு நேரத்தில் எவருக்கும் தோட்டத்தில் வேலை செய்து கொடுப்பான். வீட்டுச் செலவையும் படிப்புச் செலவையும் ஈடுசெய்ய முயற்சிப்பான். தோற்றும் போவான்.

தண்ணீரை மட்டும் வயிற்றில் நிரப்பிவிட்டு எத்தனை நாள் பள்ளிக்கூடம் போயிருப்பான் அவன். வயிறெரிந்து கொண்டிருக்கும் போது படிப்பதென்பது அனுபவித்தால்தான் புரியும். ராசன் பள்ளிக் கூடம் விட்டு வந்தாலும் சின்னவன் ஓடிப்போய் அவன் கழுத்தில் கிடந்து தொங்கினான். கழுத்து வலித்தாலும் ராசன் அவனை ஒரு போதும் ஏசியதில்லை. உடுப்பு மாற்றி சாப்பிட உட்கார்ந்த ராசனிடம், "தம்பி நாளைக்கு காணிக்குப் போவமே" என்றாள் சரஸ்வதி. காணி பற்றி அவள் சொல்ல, இனிய அந்த இறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குள் நுளைந்தான் அவன். அவன் வளர்த்த வெள்ளை என்ற நாய்க்குட்டி அவனின் நெஞ்சில் ஏறிப்படுத்துக்கிடந்து கடித்தது. தலைமுடியைப் பிடித்து இழுத்தது. அவனது கிழிந்த சாறத்தைக் கவ்விக்கொண்டு வீட்டைச் சுற்றி ஓட, அதை அவன் துரத்திக் கொண்டிருந்தான். அப்பா சில வேலையாட்களோடு பனியில் குளித்துப்படுத்திருந்த நெல் வயலில் குருவிக் கூடுகளைத் தவிர்த்து அவதானமாக அருவி வெட்டிக்கொண்டிருந்தார். குருவி பறந்து பறந்து குஞ்சுகளுக்கு இரை கொடுத்துக் கொண்டிருந்தது. பூவரசம் மரங்களில் வளர்ந்த குருவிச்சை மரங்களும் அதில் மஞ்சள் நிற மாம்பழக் குருவிகளும் துள்ளிக் கொண்டிருக்க பூவரச மர இலையில குழல் செய்து ஊதிக்கொண்டிருந்தான் அவன். சின்னவன் ஒரு கம்புடன் வண்ணத்துப்பூச்சிகளைக் கலைத்துக் கொண்டிருந்தான். வேலியோரத்தில் சடைத்து நின்ற நாயுண்ணி மரங்களும் அவற்றிற் கேயுரிய அந்த மணமும், அழகிய பூக்களும் அவனைக் கவர்ந்து கொண்டிருந்தன. மாமர நிழலில் நின்று அவன் போளை அடித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பிடித்த கத்தரிக்கலர் போளையொன்று அவன் கையில் சுழன்று விளையாடியது. நெல் வயலின் மாணவர் களான கொக்குகளும் மாடுகளின் மேலிருந்து அவற்றை இம்சைப் படுத்தும் கரிக்குருவிகளும் முட்களை நிமிர்த்தியபடி நின்ற எலுமிச்சை மரங்களும் யுத்த விமானங்கள் போல் நிமிர்ந்து நின்ற அவன் தோட்டத்து வாழைமரங்களும் அவன் நினைவுகளில் மிதந்து கொண்டிருக்க, "ஏன் தம்பி சாப்பிடாமல் யோசிச்சுக் கொண்டிருக் கிறாய்" என்று சரஸ்வதி கேட்க சோற்றையும், தேங்காய்ப்பாலற்ற அந்தப் பூசணிக்காய்க் கறியையும் பிசைந்து கொண்டிருந்தான். நாலு கறி காய்ச்சினாலும் மீன் வேணுமெண்டு அம்மாவோடு சண்டைபிடிப்பவன் அவன். இப்போது தன் நிலையை நினைத்த போது இருதயத்தை ஏதோ நெரிப்பது போல் உணர்ந்தான்.

புகை மண்டலம் வான் வரை எழும்ப ஊர் மக்கள் ஓலமெழுப்பி தெரியாத் திசைகளில் ஓட விழுந்து வெடித்த ஆட்லறியின் சிரிப்பு பனை மரங்களை முண்டமாக்கி இயற்கையைக் கிழித்த போது மாடு மேய்க்கப்போன தந்தையைத் தேடி ராசன் ஓடிய நினைவுகளும் அவர்களின் காளைகளான சிவப்பனும் கறுப்பனும் வாயால் நுரைதள்ளி காயத்தால் குருதிதள்ளி மல்லாந்த படி துடித்துக் கொண்டிருக்க கொஞ்சம் தள்ளி விண்ணை நோக்கி வெறித்த கண்களோடு நெஞ்சறுந்து கிடந்த தந்தையின் அந்த முகம், அந்தக் காட்சி அவன் மனத்தசையில் முள்ளாய்க் குத்திக் குத்தி அவனது வாழ்க்கைப் பாதையை திசைதிருப்ப முனைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் விடிய ஊருக்குப் போக ஆயத்தமானார்கள். சின்னவன் தன் தங்கச்சியைப் பற்றிய நினைவுகளோடு கலந்திருந் தான். ஊரை நெருங்க நெருங்க கண்ணில்படுகின்ற ஒவ்வொன்றும் பழைய நினைவுத்துளிகளை மழையாக்கியது. ஊரின் சந்தியில் முளைத்திருந்த ஒரேயொரு தேத்தண்ணிக் கடையையும், சிரிப்பிழந்த சில முகங்களையும் தாண்டி அவர்கள் போனார்கள். அப்பாவின் பழைய சைக்கிளில், வெட்டப்படாது சடைத்த பூவரசம் மரங்களோடு வளையும் புழுதித் தெருவினூடு அவர்கள் போனார்கள். பலரின் சிரிப்பொலிகளை தின்று விட்டு பொம்பர் தோண்டிய கிணறுகள் அதியாய்க் கிடக்க அவர்கள் போனார்கள். காணியருகில் வந்த போது அவர்களாலேயே அடையாளம் காணமுடியாமல் போனது. எஞ்சியிருந்த சுவர்களில் யுத்தத்தின் சிவப்புக்கை கீறிய ஓவியங் களும் மரங்களின் கண்ணீர் கலந்த நிலமுமாய் கிடந்த வளவில் பெயர் தெரியாப் புதர்கள் புல்லரித்து நிற்கக் கால மாற்றத்தை ஜீரணிக்க முடியாமல் நின்றாள் சரஸ்வதி. பழைய நினைவுகள் கண்வழி வழிந்து கொண்டிருந்தன. அவர்களின் ஒவ்வொரு பாதங்களையும் அந்த நிலம் ஆயிரம் தடவை முத்தமிட அவர்களின் பார்வையை அள்ளி அள்ளிக் குடித்துக் கொண்டது அந்தக் காற்று. சின்னவனின் தோட்டப்புட்டியில் தொட்டாச்சிணுங்கிகள் தொல்லை யின்றி வளர்ந்திருந்தன. “அம்மா எல்லாம் காடாய்ப் போச்சு” என்றான் சின்னவன். பலநிறத் துளிரெடுத்து ஒட்டுவைத்து வளர்த்த ராசனின் செவ்வரத்தை நின்ற இடத்தில் சில வேப்பிலையும், ஏதோ சருகும் கும்பலாய்க் கிடந்தது.

சிதைந்த வீட்டின் கற்குவியலை சின்னவனின் கண்கள் துலவியபோது நீலமாய் அவன் கண்களில் அது தட்டுப்பட்டது. அது பாடசாலைச் சீருடையில் தைத்த ராசனுடைய காற்சட்டை. அதைத்தான் சின்னவன் தன் நாலு வயதுக்காலப்பகுதியில் அண்ணனுக்குத் தெரியாமல் எடுத்து வரிந்து கட்டிக் கொண்டு திரிவான்.

இப்போது அது மாரி மழையிலும் வெய்யிலிலும் கிடந்து தும்பாய்ப் போனது. அதை எடுத்து உதறி விட்டு பக்குவமாய் ஒரு மூலையில் வைத்தான் சின்னவன். அப்போதுதான் அவன் தேடிவந்த அவனது தங்கச்சியின் கையொன்று அனாதரவாகக் கிடந்து சின்னவனைப் பார்த்துக் கொண்டிருந்தது. கையை விட வேறெதுவும் அங்கிருக்கவில்லை. ஆட்லறியோ, பொம்பரோ தன் தங்கச்சியை கொடூரமாய் தின்றுவிட்டதென்பதை எட்டு வயதிலும் அனுபவங்கள் அவனுக்குக் கற்பித்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்புகள் தம் உணர்கொம்புகளைத் திருப்பித்திருப்பி தமக்குள் ஏதோ பேசிக் கொண்டன. காயப்பட்டு நின்ற அவர்களின் கறுத்தக் கொழும்பான் மாமரத்திலிருந்து கிளிகள் தங்கள் கண் களால் ஏதோ கதைத்துக் கொண்டன. பின் பறக்கத் தயாராயின. முள்முருக்கை மரத்தின் சிவப்புப் பூக்களிலிருந்து தேன் குடித்துக் கொண்டிருந்த பூக்குடிச்சான் ஒன்று வேகமாய் எங்கோ பறந்து போயிற்று. சின்னவன் தன் தங்கச்சியைத் தேடிக் கொண்டு புதர் நிறைந்த வீட்டின் பின்புறத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். எல்லாத் துயரத்தையும் தனக்குள் புதைத்து வைத்திருந்து பின் அதை உரிமை மாற்றம் செய்துவிட்டு மறையக்கூடியதும் ஒருவனின் சகல மகிழ்ச்சியையும் பறித்து புதைத்து விடக் கூடியதுமான அது மௌனமாய் மண்ணிற்குள் புதைந்து கிடக்க, சின்னவன் தன் தங்கச்சியைத் தேடிக் கொண்டிருந்தான்.

பாரிய அந்த வெடிச் சத்தமும், "அம்மா" என்ற அந்த அலறலும், அந்தப் புகை மண்டலமும் சரஸ்வதியையும், ராசனையும வந்தடைந்த போது தன் துயரத்தை சின்னவனில் முழுமையாக இறக்கி விட்டு அது மாயமாகியிருந்தது. சின்னவன் தன் பிஞ்சுக் காலொன்றை இழந்துவிட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவன் பிஞ்சுக்காலின் தோல், நரம்பு, தசை, எலும்பு, நகம் எல்லாம் அந்த மிதிவெடியால் சப்பித் துப்பப்பட்டுக் கிடந்தன. வெளியேறிய குருதி ஒவ்வொரு மணபருக்கைகளுக்குள்ளும் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்தது. இவ்வளவு காலமும் எங்களை விட்டு எங்கு போனாய் என்பது போல் உரிமையோடு அந்த மண் அவன் குருதியை தனக்குள் உள்வாங்கிக் கொண்டது. அம்மா கட்டியிருந்த பழைய சேலையின் பாதியால் கிழித்துக் கட்டிக் கொண்டு மயக்கமடைந்து கொண்டிருந்த சின்னவனை நெஞ்சில் தாங்கியவாறு அப்பாவின் சைக்கிளில் மூச்சு வாங்க ஓடிக் கொண்டி ருந்தான் ராசன் பிரதான வீதியை நோக்கி. கிரவல்த் தெருவின் புழுதியை சின்னவனின் குருதி பல இடங்களில் செயலிழக்கச் செய்து கொண்டிருந்தது. தார் வீதியில் விழுந்த குருதி கொஞ்சம் கசிந்து பின் உறைந்து நின்றது.

வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவிற்குள் சின்னவன் கொண்டு போகப்பட, சரஸ்வதியும், ராசனும் வெளியே அழுது கொண்டிருந்தார்கள். ராசன் தன் கண்ணீரை ஒரு கையால் துடைத்துக் கொண்டு மறு கையால் தாய்க்கு ஆறுதல் கூற முயன்றான். கண்ணீரை மட்டுமே தனக்குத் தானம் பண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடச் சக்தியில்லாமல் இருந்தாள் சரஸ்வதி. உள்ளே வைத்தியர்கள் இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள். சின்னவனின் உணர்வுகள் யாவும் படிப்படி யாய்க் குறைந்து சென்றன. தன் தாய் தமையனின் முகம், தன் தங்கச்சியைப் பார்க்க வேண்டும் என்கிற ஆவல் அவனுக்குள் எழுந்து பின் அழிந்து போயிருக்கக்கூடும். ராசன் கதவின் இடுக்கினூடு உள்ளே நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த போது சின்னவனை வெள்ளைத் துணியொன்றால் முழுமையாக மூடிவிட்டு அவர்கள் வெளியே வந்தார்கள்.

சரஸ்வதியும், ராசனும் எழுப்பிய அவலமான அந்த ஓசைகள் அந்த வைத்தியசாலைக் கட்டடத்திற்குப் புதிதல்ல. பித்துப்பிடித்தவள் போல் தன்னருகில் நின்ற தாயை மூடியும் மூடாமலும் கிடந்த தன் கண்களால் சின்னவன் பார்த்துக் கொண்டு கிடந்தான். 'எப்ப அம்மா குண்டொன்றும் வெடிக்காது?' 'எப்ப எல்லாச் சனமும் நிம்மதியா இருப்பாங்க?' 'எப்ப அம்மா சமாதானம் வரும்?' என்ற அவனது வழமையான கேள்விகள் அந்தப் பார்வையில் கலந்து கிடந்தன. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரிகள்

## என்.சொக்கன்

அந்த மைதானமெங்கும் சிறிய, பெரிய வியாபாரிகள் வியாபித்திருக்க, கால் வைக்கவும் இடமில்லாதபடி ஜனக்கூட்டம் ஒழுங்கற்ற வரிசையில் அமைந்த கடைகள் யாவும் அகல விரித்த கித்தான் துணிகளின் மேல் கடந்த விநாடியில்தான் திடீரென்று முளைத்தவையாகத் தோன்றின. அவற்றினிடையே போனால் போகிறதென்று ரிப்பன் விரித்தது போல் மக்கள் நடமாடுவதற்கு இடம்விடப்பட்டிருந்தது. இரைச்சலே அவ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாகியிருக்க, மக்கள் குனிந்தும், குத்துக்காலிட்டு அமர்ந்தும், வேண்டிய, வேண்டாத பொருட்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார் கள். விற்கிறவர்கள், வாங்குகிறவர்கள் என இருதரப்பினரும் அக்கிரம விலைகளிலும், அநியாய பேரங்களிலும் ஒருவரை யொருவர் ஏமாற்றப்பார்க்கிற கயிறிழுப்புப் போட்டியில் யார் ஜெயிக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. 'ஸூடான மாஸாலாக் கட்லே சார் கட்லே' என்று பிரம்புக் கூடையைத் தூக்கிக் கொண்டு ஒரு சின்னஞ்சிறுவன் மிகச்சிறு இடைவெளிகளிலும அசாத்தியமாய்ப் புகுந்து புறப்பட்டான்.

என் மனைவி முந்தின கடையில் கற்பூர வில்லைக்கு விலை விசாரித்துக் கொண்டிருக்க, நான் பெருமூச்சோடு அந்த இடத்தை நோட்டமிட்டேன். ஒரு பெரிய சூப்பர் மார்க்கெட்டில் கிடைக்கிற பொருட்களையெல்லாம் விட அதிகமான பொருட்கள் அந்த மைதானத்துக்குள் கிடைத்துவிடும் போல. எங்கே எது விற்கிறது என்று தெரிந்து, பேரம் பேசவல்ல துணையொன்றும் பக்கத்தில் இருந்துவிட்டால், அங்கே செலவழிப்பதைப் போல பாதி விலையில்

ஆறுதல் பரிசுக் கதை – 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே எல்லாவற்றையும் வாங்கிவிடலாம் என்று தோன்றியது. பார்க்கப் பார்க்க கண்கள் வலிக்குமளவு அல்லது சலிக்குமளவு பொருட்கள் - கலர் கோலப் பொடிகள். சரம்சரமாய் மல்லிகைப் பூவும், இன்னபிற பெயர் தெரியாத பூக்களும். அன்றாடம் வாடி விடுகிற அவற்றைக் கேலி செய்வது போல் பக்கத்திலேயே பளபளப்பான செயற்கை மலர்களும் விளக்குமாறு, ஹேங்கர், எல்லா அளவுகளிலும் பிளாஸ்டிக் அல்லது எவர்சில்வர் டப்பாக்கள். பாட்டில்கள், பல வண்ண நட்சத்திரங்களையும், பூக்களையும் வெவ்வேறு கோணத்தில் அள்ளித் தெறித்த சேலைகள் மற்றும் பிற பெண்ணுடைகள், காய்கறிகள், கொத்தமல்லி விதை, சுண்ணாம்புக் கற்கள், ஹவாய் செருப்புகள், அஸ்கா சர்க்கரை, மருதாணிப் பொடியும், அச்சுகளும், பழைய, புதிய மற்றும் பைரேட்டெட் புத்தகங்கள், கவரிங் நகைகள், அசட்டுத் தித்திக்கும் தேங்காய் அல்வா, தேள் அல்லது பாம்பு வடிவ டாட்டு நகைகள், குழந்தை பொம்மைகள், மரத்தில் செதுக்கின கைவினைப் பொருட்கள், மலைபோல் குவிந்திருக்கிற ரெடிமேட் ஆடைகள், சந்தனக் கட்டிகள், இதய மற்றும் பூ-வடிவ பலூன்கள் - எந்த தர்க்க வரைமுறைக்கும் உட்படாத முரட்டு வரிசையில் அடுக்கியிருந்த கடைகளில் பாதியைப் பார்ப்பதற்குள் எனக்கு போரடித்துவிட்டது. ஆனால், என் மனைவி அப்படியில்லை. 'ஒவ்வொரு கடையிலும் ஒரு பொருளாவது வாங்காவிட்டால் இன்றிரவுக்குள் நீ ஒரு மான்குட்டியாய் மாறிப்போவாய்' என்று யாரோ கோபக்கார முனி சபித்துவிட்டது போல் ஆமை வேகத்தில் கடைதோறும் நடந்து எதையேனும் போணி பண்ணுவாள். வாங்கியது போதும் என்று அவள் திருப்தியடையும் வரை நானும் அவள் பின்னே நடந்து, கேட்கிறபோதெல்லாம் காசு எடுத்துக் கொடுக்க வேண்டும்!

வலது பக்கம் திரும்பின போது என் முன்னே ஒரு அலங்காரப் பொருட்களின் கடை. அங்கே ஒரு சிறிய பெண் - அதிகபட்சம் பதினைந்து வயதிருக்கலாம். ஸ்டிக்கர் பொட்டுகளைக் குவித்து வைத்துத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள். சின்ன முக்கோணம் அல்லது முற்றுப்புள்ளியில் ஆரம்பித்து பெரிய தோசைக்கல் வரை ஜியோமிதி - வரைகணித சாத்தியமான அத்தனை வடிவங்களிலும், அளவுகளிலும், என் போன்ற சாதாரணர்களின் அறிவுக்கெட்டிய ஏழெட்டு வண்ணங்களிலிருந்து மாறுபட்ட நூற்றுக்கணக்கான புதுப்புது கலர்களிலும் ஏராளமான வகைப் பொட்டுகள் அவள் முன்னே செவ்வக அட்டைகளாய் நிறைந்திருந்தன. தன் வயதுக்குப் பொருந்தாத பொறுமையுடன் அவள் ஒவ்வொன்றாய் எடுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து, அது தனது நெற்றியில் எப்படியிருக்கும் என்பதை மானசீகமாய்க் கற்பனை செய்து அதை நிராகரிக்கவோ, தேர்ந்தெடுக்கவோ செய்தாள். இப்படித் தேர்வுசெய்த அட்டைகளை அடுக்கடுக்காய் அவள் தனது இடது கையில் நிரப்பியிருக்க, மொத்தம் அறுபதாவது இருக்கும் என்று தோன்றியது எனக்கு. ஒரு அட்டையில் பத்து பொட்டுகள் என்று வைத்துக் கொண்டாலும், மொத்தம் அறுநூறு வகையான பொட்டுகள் - தினம் தினம் காலையில் இவற்றிலிருந்து எந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஒட்டுவது என்று முடிவு செய்வதற்குள் வாழ்க்கை சலித்து அல்லது வெறுத்துப் போய்விடாதா?

அரைக்கிலோ உலர்ந்த திராட்சை வாங்கிக் கொண்டு என் மனைவி நகர, நானும் அவள் பின்னே நடந்தேன். இந்த மைதானத்தில் நான் வாங்கத் தகுந்த பொருட்கள் ஏதேனும் கிடைக்குமா என்று ஆவலோடு தேடிப்பார்த்த போது, என்னைப் போலவே இன்னும் பல கணவர்கள் அல்லி ராஜ்ஜியத்து அர்ஜுனர்களாய் அலைந்து கொண்டிருப்பதைக் கவனிக்க முடிந்தது. உதட்டில் மெல்லிய புன்னகையொன்று எழுந்தது.

அடுத்த கடையில், மூங்கிலால் செய்த பூக்கூடையொன்றை அறுபதிலிருந்து இருபது ரூபாய்க்கு விலைக்குறைப்பு செய்யக் கோரிக் கொண்டிருந்த என் மனைவியின் தைரியத்தை எப்போதுமான பிரமிப்போடு பார்த்தபடி வேறு பக்கம் திரும்பினேன். சுவாரஸ்யம் தேடி அலைந்த கண்கள் இடது பக்கமிருந்த சிறு படிகளின் மேல் நகர்ந்து, அதன் உச்சியிலிருந்த சிங்க பொம்மையில நிலைபெற்றன. முரட்டுப் பற்களை வெளிக்காட்டாமல் பெரிதாய்ச் சிரித்தபடி சந்தோஷமாய் கைகள் உயர்த்திக் குதூகலிக்கும் சிநேகமுள்ள சிங்கம். அதன் வித்தியாசத் தன்மையால் கவரப்பட்டு, இன்னும் உன்னித்த போது அந்தச் சிங்கம் திடீரென்று உயிர் பெற்றெழுந்து என்னை ஆசையோடு அழைப்பதாய் ஒரு கற்பனை பிம்பம் தோன்றியது எனக்குள். குடுகுடுவென்று ஓடிப்போய் அதன் நீள்முதுகில் உட்கார்ந்து கொண்டு சவாரி செய்கிற விருப்பமெழ, அசட்டுச் சிரிப்பொன்றில் அதை மறைத்துக் கொண்டேன்.

சிங்க பொம்மையின் கீழ்ப்பக்கத்தில் ஒரு நீண்ட பிளாஸ்டிக் பாய் விரித்து, அதில் அடுக்கடுக்காய் ரெக்ஸின் உறைகள் - டி.வி, வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், தொலைபேசி, மிக்ஸி, கிரைண்டர் என வீட்டிலுள்ள பெரியவர்களைத் தவிர ஏனைய அனைத்தையும் தூசு படியாமல் பாதுகாக்கவல்ல பல வண்ண உறைகள் அழகாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பிவைக்கப்பட்டிருக்க, அவற்றை அசட்டையாய் நகர்த்தியபடி ஒரு இளைஞன் நின்றிருந்தான். முழுக்கைச் சட்டை அணிந்திருந்த போதும் அதன் கையிறுதி பட்டன்கள் தளர்த்தி விடப்பட்டிருந்ததால், அவனது வலது கை சூம்பி வளைந்திருப்பதை நன்கு பார்க்க முடிந்தது. இன்னும் கவனித்துப் பார்த்த போது இடது கையிலும் சில விரல்கள் முழுமையில்லாமல் சிதைந்திருப்பது தெரிந்தது. சற்றே சுருங்கின கண்கள். அடர் தாடி, தளர்ந்த முகம்.

நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வயதான பெண்மணி யொருவர் அவனை நெருங்கி, ‘மிக்ஸி கவர் இருக்காப்பா?’ என்று கீச்சுக்குரலில் விசாரித்தார். ‘இருக்குங்களே’, அவன் கையிலிருந்த சிறு துண்டை ஓரமாய்ப் போட்டுவிட்டு, மையத்திலிருந்த பிளாஸ்டிக் பையை அவசரமாய் எடுத்துப் பிரித்தான். தனது குறைபட்ட கைகளால் அந்த ரெக்ஸீன் உறையை அவன் வெளியிலெடுக்கத் திணறுவதை நான் தவிப்போடு பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால் ஏற்படுகிற தாமதத்தில் இந்த அம்மாள் வேறு கடைக்குப் போய்விடுவாரோ என்கிற பதட்டம் அவன் முகத்தில் வெளிப்படை யாகத் தெரிய, இன்னும் இரண்டு முறை கவரைக் கீழே தவறவிட்டான். ஒரு வழியாய் அதை வெளியில் எடுத்து, விரித்து சுமாரான மிக்ஸி வடிவம் போல் செய்து அந்த அம்மாளிடம் நீட்டிய போது அவர் அதை ஆவலோடு வாங்கிக் கொண்டார். ‘பட்டர்.ஃப்ளை மிக்ஸிக்கு சரிவருமாப்பா?’ என்று சந்தேகத்தோடு அவர் கேட்க, ‘எல்லா மிக்ஸிக்கும் ஒரு கவர்தான் மேடம். சூப்பரா .ஃபிட் ஆகும். சரியில்லைன்னா ரிடர்ன் கொண்டு வாங்க’ என்றான் சிநேகமாய்ச் சிரித்து. பக்கத்திலிருந்து சிங்கம் அவர்கள் இருவரை யும் ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தது.

அந்த உறையின் எல்லா திசைகளிலும் கைகளை நுழைத்து அதன் பலத்தைத் தன்னாலானவரை பரிசோதித்துத் திருப்தியடைந்த பின் அந்த அம்மாள் ‘என்ன விலையப்பா?’ என்றார்.

‘முப்பத்தைஞ்சு ரூபாய் மேடம்.’

‘அய்யோ’, பாவனையாய் நெஞ்சில் கைவைத்துக் கொண்டார் அவர். ‘பதினைஞ்சு ரூபாய்க்குக் கொடுப்பியா?’

பலமாய் அடிபட்டது போல் அவன் முகத்தில் இருள் படர்ந்தது. ‘கட்டாது மேடம்’ என்றான். ‘நாங்களே இருபத்தஞ்சு ரூபாய்க்கு எடுக்கறோம்.’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது எதிர்வாதங்களை அவர் மதிக்கத் தயாரில்லாமல், செத்த எலியைப் பிடிப்பது போன்ற பாவனையில் இரண்டு விரல்களால் அந்த மிக்ஸி கவரைப் பற்றித் தொங்கவிட்டபடி 'பதினைஞ்சு ரூபாய்ன்னா கொடுப்பா. இல்லைன்னா வேண்டாம்'.

கெஞ்சுகிற குரலில் அவன் மீண்டும் 'இல்லை மேடம். இருபத்தஞ்சுன்னா எடுத்துக்கங்க' என்றான்.

'இருபத்தைஞ்சு ஜாஸ்தி. வேண்டாம்ப்பா.' வீசியெறிவது போல் அவன் முன்னே அதைப் போட்டு விட்டு அவர் விறுவிறுவென்று நடக்க, அவன் ஏமாற்றத்தோடு அவர் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். சில விநாடிகளுக்குப் பின் அவன் திரும்பிய போது உலகத்துச் சோகமெல்லாம் அவன் கண்களில் சேர்ந்து கொண்டது போல் முகத்தின் தளர்வு இன்னும் அதிகமா யிருந்தது. கவலையோடு தலையைக் குனிந்து கொண்டவன் நிமிர்ந்து பார்க்கையில் சிங்கம் இன்னும் சிரித்துக் கொண்டு தானிருந்தது. அவன் அதைக் கவனிக்காதவனாய், மிக்ஸி உறையை மடித்து மீண்டும் கவருக்குள் சிரமத்தோடு திணித்தான். வேறு யாரேனும் வருவார்களா என்ற எதிர்பார்ப்போடு நிமிர்ந்து கொண்டவன், இடது கையால் ஒருமுறை வலதுகையை வருடி விட்டுக் கொண்டான்.

என் மனைவியோடு நகர்ந்தபடி வெவ்வேறு கோணங்களில் அவனையே தொடர்ந்து வெறித்துக் கொண்டிருந்தேன். ஊனமுற்ற அவனுக்கு வியாபாரத்தில் உதவியாய் யாரும் அவனோடு இல்லை என்பதும், களைத்து அமர்வதற்கு ஒரு நாற்காலியும் கூட அவனிடத்தில் இல்லை என்பதும் பெரிய அநீதியாய்த் தோன்றியது. அவன் கடை முன்னே அவ்வவ்போது நின்று கவனிக்கிறவர்களும், விலை விபரம் விசாரிக்கிறவர்களும், ஏதேனும் ஒரு உறையை வாங்கிப்பார்த்து, அது கிழியுமா என்று சந்தேகத்தோடு பரிசோதிக்கிறவர்களும் - இப்படி யாரும் அவனது குறையைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. பிளாஸ்டிக் பையில் இறுக நிரம்பியிருக்கும் விதவிதமான உறைகளை வெளியே எடுத்துக் காட்டுவதற்கு அவன் சிரமப்படும் போது யாருக்கும் அவனிடமிருந்து அதை வாங்கி, தாங்களே பிரித்துப் பார்த்துக் கொள்ளக்கூட தோன்றாதது மனிதாபிமானமற்ற சமூகத்தின் வக்கிரமான சாட்சியாயிருந்தது.

நான் அவனை முதன்முதலாய் கவனிக்க ஆரம்பித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலிருந்து அநேகமாய் ஒரு முழுச்சுற்று வந்திருந்தோம். இப்போது அவன் எனது வலது பக்கமாய் யாரிடமோ பேரம் பேசிக் கொண்டிருந்தான். நான் என் மனைவியின் தோளைத் தொட்டு, ‘சுஜா, நம்ம வாஷிங் மெஷினுக்கு ஒரு கவர் வாங்கணும்ன்னு சொல்லிட்டிருந்தியே’ என்றேன் மெல்ல.

எனது திடீர் அக்கறையில் அவளுக்கு மயக்கமே வந்திருக்க வேண்டும். அந்த ஆச்சரியத்தை மறைக்கமாட்டாமல் புன்னகைத்து, ‘ஆமாம். அதுக்கென்ன இப்போ?’ என்றாள்.

‘அங்கே ஒருத்தன் ரெக்ஸின் கவரெல்லாம் வித்து கிட்டிருக்கான். பார்க்கலாமா?’ அவனைச் சுட்டிக் காட்டிக் கேட்டேன்.

அவள் தன் கையிலிருந்த சிறு பிளாஸ்டிக் கவர்கள் யாவையும் என்னிடம் கொடுத்துவிட்டு ‘பார்க்கலாமே’ என்று முன்னே நகர்ந்தாள். குறுகின படிகளில் மெல்லமாய் ஏறி சிநேகமுள்ள சிங்கத்தை நெருங்கினபோதுதான் அதன் மறுபக்கமும் இன்னொருவன் ரெக்ஸின் உறைகள் விற்றுக் கொண்டிருப்பது தெரிந்தது.

‘இங்கேயே பார்க்கலாமே’, சுஜா சாதாரணமாய்க் கேட்டதும் நான் திகைத்துப் போனேன். இங்கே வேண்டாம். சிங்கத்தின் இன்னொரு பக்கத்திலிருக்கிற என் கவன நாயகனிடத்தில்தான் வாங்க வேண்டும் என்று எப்படி இவளுக்குச் சொல்வது என்று தெரியாமல் அவள் காட்டின இன்னொரு கடையை வெறித்தேன். அறுவாள் மீசைக்காரன் ஒருவன் என்னைக் கூர்ந்து பார்த்துச் சிரித்தபடி, ‘என்ன கவர் வேணும் சார்? புதுசா ஸி.டி. ப்ளேயர் கவர்கூட வந்திருக்கு’ என்று ஒரு வெளிர்பச்சை உறையை எடுத்து அசுரவேகத்தில் திறந்து, மூடிக்காட்டினான். ஜிப் பிரிகிற, சேர்கிற ஒலி நாராசமாய் என் காதுகளைத் துளைத்தது.

சுஜா என்னையே புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க, நான் சிறிய யோசனைக்குப் பின் அவளிடம் நேரடியாகவே சொன்னேன். ‘அந்த கடைக்காரன் கை கொஞ்சம் ஊனமாயிருக்கு சுஜா. பாவம் அவன்ட்ட வாங்கினா ஏதோ நம்மாலான சின்ன உதவியா இருக்கும்’. நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் சட்டென்று சிங்கத்தின் மறுபுறம் திரும்பிப்பார்த்தாள். சூம்பின கைகளோடு பத்து ரூபாய் நோட்டுகளை எண்ணிக் கொண்டிருக்கிற அவனை சில விநாடிகளுக்கு வெறித்துப் பார்த்தவள். ‘சரி’ என்றாள் வெறுமனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இணையற்ற விடுதலை உணர்வோடு அவளைப் பார்த்துச் சிரித்தேன். தொடர்ந்து கவனமாய், 'அவன்ட்ட எதுவும் பேரம் பேசாதே சுஜா. பாவம். பிழைச்சுப்போறான்' என்றேன். அவள் மௌனமாய்த் தலையாட்டிவிட்டு சிங்கத்தைக் கடந்து நடக்கலானாள்.

பைகளையெல்லாம் மறு கைக்கு மாற்றிக் கொண்டு நான் நடக்க முற்பட்ட போது அறுவாள் மீசைக்காரன் என்னை வில்லன் போல் பார்த்து, 'ரேட் பார்த்துப் போட்டுக்கலாம் சார். எடுங்க' என்றான் மிரட்டலாய். 'வே..... வேணாம்பா.' திணறலாய்ச் சொல்லி விட்டு நான் விலக அவன் என்னையே முறைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சுஜா வாஷிங் மெஷின் கவரைப் பிரித்துவைத்து அளவு பார்த்துக் கொண்டிருக்க, நான் சிங்கத்தின் மறுபக்கமிருந்த கடைக்காரனை மீண்டுமொருமுறை பயத்தோடு பார்த்தேன். சட்டைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்தபடி அவனும் என்னைப் பார்த்தான். ஏனோ அவன் ஒரு முறை சிரித்தது போலிருந்தது. உண்மையைச் சொல்வதென்றால், அவனது முறைப்பை விட, சிரிப்புதான் என்னை அதிகம் பயமுறுத்தியது. சட்டென்று திரும்பிக் கொண்டேன்.

அந்த மாத இறுதியில் ஒரு வியாழக்கிழமை ராகவேந்தர் கோவிலுக்குப் போய்த் திரும்பும் போது சுஜா மார்க்கெட் மைதானத்துக்குச் செல்ல விரும்பினாள். 'தேங்காய் தீர்ந்து போச்சுங்க. பத்தே நிமிஷம். அதை மட்டும் வாங்கிட்டு கிளம்பிடலாம்'.

மெயின் ரோட்டின் இருபுறமும் ஜரிகைக் கரை கட்டினது போல் நெடுக நீண்டிருந்த வாகன வரிசையில் என்னதையும் நுழைத்து நிறுத்திவிட்டு மைதானத்துள் நுழைந்தோம். சுஜா தேங்காய்க் கடையைத் தேடிப் போக, நான் ஆவலோடு சிநேகமுள்ள சிங்கத்தைத் தேடினேன். ஒவ்வொரு தேங்காயாய் குலுக்கிப்பார்த்து அவள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கையில் திடுமென்று அந்தச் சிங்கம் என் கண்ணில் பட்டது. 'வாய்யா, வா. என்ன கொஞ்ச நாளா ஆளையே காணோம்?' என்று தோளில் தட்டி விசாரிப்பது போல் அதன் பழகின சிரிப்பு. அனிச்சையாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் கீழே இறங்க, அன்றைக்குப் பார்த்த அதே தாடி இளைஞன். அதே சட்டையாகவும் இருக்கலாம். குறைபட்ட அதே கைகளால், அதே ரெக்ஸின் உறைகளை அஸ்வாரஸ்யமாய்ப் புரட்டினபடி வாடிக்கையாளருக்காகக் காத்திருந்தான்.

இனம்புரியாத ஆவலில் சிங்கத்தின் மறுபுறம் அறுவாள் மீசைக்காரனைத் தேடினேன். அவனைக் காணவில்லை. ஆனால் அன்றைக்குப் பார்த்த இன்னொரு ரெக்ஸின் உறைக் கடை அங்கேயேதான் இருந்தது. இப்போது அதை கவனித்துக் கொண்டிருந்த நடுத்தர வயதுக்காரரின் இரு கைகளும் சூம்பி வளைந்திருந்தன.

மலையளவு அதிர்ச்சியோடு நான் பார்வையைத் திருப்பின போது, சற்றுத்தள்ளி அந்த அறுவாள் மீசைக்காரன் பொம்மை ரயில்கள் விற்றுக்கொண்டிருந்தான். அதே வினாடியில் அவனும் திரும்பிப் பார்க்க, எங்கள் பார்வைகள் எதிர்பாராத கோணத்தில் சந்தித்துக் கொண்டன. என்னை அடையாளம் கண்டுகொண்ட பாவனையில் கையிலிருந்த நீண்ட ரயில் பெட்டியை ஒரு முறை சுழற்றிப் போட்டு லாவகமாய்ப் பிடித்துக் கொண்டான் அவன். அவனது கண்கள் சிங்கத்தையும், அதன் இரு புறமுமிருந்த கடைகளையும் ஒருமுறை பார்த்துத் திரும்பின. 'இப்போது என்ன செய்வாய்?' என்பது போல் கேலியாய் என்னைப் பார்த்துப் புன்னகைத்தான் அவன்.

அந்த வியாபாரியின் இதழோரத்தில் வழிந்த குரூரச் சிரிப்பை என்னால் நெடுநாளைக்கு மறக்க முடியவில்லை. அன்றிலிருந்து நான் சுஜாவுடன் மார்க்கெட்டுக்குப் போவதில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்று நீர்

## ம.திலகபாமா

மேலே எழும்பி வர முடியாத படிக்கு ஆழத்தில் மணல், சுக்காம் பாறை, கருங்கல் பாறை என எல்லாவற்றுக்கும் அடியிலாக, எல்லாவற்றுக்கும் இடையிலிருந்தும் எதிலும் கலந்து விடாதவளாக ஊற்றாய் நான் இருந்ததை முதல் முதலில் யார் கண்டடைந்தார்களோ தெரியாது. நிலம் இரண்டாய் பிளக்க வேர் விட்ட மரமொன்றின் வேராய் இருக்கலாம். எனது ஓட்டங்களின் உணர்வுகளை மெல்லிய அதிர்வுகளை உணரத் துவங்கிய ஒரு சில கவட்டைக் குச்சிகளாய் இருக்கலாம். கவட்டைகள் பற்றியிருக்கும் உன் கை வலிக்கத் திருகித்தான் தெரிய வைக்க வேண்டியிருக்கின்றது. ஆழமொன்றில் ஓடுகின்ற என் உணர்வலைகளின் ஓட்டத்தை சொல்லும் இருப்பை.

எனக்கென்று ஒரு குணம், மணம், நிறம் என்றிருந்த போதும் சமயங்களில் எனைச் சூழ்ந்திருந்த நிலத்தின், மண்ணின் கருங்கல் கொண்டிருந்த உப்பின் உவர்ப்பை, நிறத்தை சமயங்களில் தாங்கியிருந்த போதும் நான் எனக்கென்றிருந்த மணத்தை, நிறத்தை, குணத்தை மீட்டுக் கொண்டுவரக்கூடியவளாகவே இருந்தேன். ஆழமொன்றில் சிறைபட்டுக் கிடந்த போதும் சுதந்திரமாகவே இருந்தேன். எனைச் சூழ்ந்திருந்த நிலம் இன்னாருக்கென்று உடைமையாக்கப்பட்ட போதும் நான் அவ்வாறு அடையாளம் காணப்படாததால்.

ஓட்டங்கள் புரியத் துவங்க சிறையெடுப்பு துவங்குகின்றது. புரியத் தருவதில்லை என இது வரை எனக்குள்ளிருந்த வைராக்கிய

ஆறுதல் பரிசுக் கதை – 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தையும், குற்றஞ்சாட்டியிருந்த சுட்டு விரல்கள், புரியத் தந்ததால் நேர்ந்து விட்ட சிறையிருப்பையும், காணததாகவே நடித்துப் போகின்றன சுட்டு விரல்களின் விழிகள். இனி புரியத் தருவதில்லையென தன்னை அகலிகையாக்கிக் கொள்கின்றன கிணற்றுக்குள் வந்திருந்த நீர். தனது தலைமுறை அணுக்களுக்குள்ளும் திணித்து வைக்கின்றன. நிலத்தைக் கடற்பாறைகளும், மண்வெட்டிகளும் பிளக்கத் துவங்குகின்றன. உடைமையாய்த் தனைக் கருத இடம் தந்த நிலம் துகிலுரியப்படுகின்றது பாஞ்சாலியாய். பஞ்ச பூதங்கள் தலை குனிந்து அடிமைப்பட, பலியிடப்படுகிறது அரவானாய் களப் பலியாய். குருசேத்திரம் துவங்க சமநிலம் வெட்டுப்பட்டு பள்ளங்கள் உருவாக்கப்பட்டு தற்காலிக மேடுகள் தலை கனத்து ஆடுகின்றன. அதன் மேலும் ஆங்காங்கே சின்னச் சின்ன செடிகள் ஆண்டுகள் பலவாய் இருந்திருந்த தென்னைகளைக் காட்டிலும் உயர்வாய் இருப்பதாய் சிரித்து வைக்க இடம் பெயரத் தேவையில்லா தென்னைகள் தன் காலடியில் தவழ்ந்து ஓடும் நதியில் தனது முற்றிய கொப்பரைகளை மிதக்க விடுகின்றன. ஓடுகின்ற நீரில் இழுத்துச் செல்லப்படுகின்ற கொப்பரைகள் கரையொதுங்குகின்ற வேளைகளில் புதைத்துக் கொள்கின்றன வேர் விடுதலுக்காய். மரங்கள் இடம்பெயராது என்பதை பொய்யாக்கி.

கொத்தலிலேயே கையோடு வந்துவிடும் மண் அடுக்குகள் இடம் மாற நகர மறுத்த பாறைகள் வெடிமருந்துகளில் சிதறித் தெறிக்கின்றன. இதோ நிலக்காரனுக்கு உடைமையாகிப் போயிருந்ததாய் அவனால் கருதப்பட்ட கிணற்று நீர் தழும்பாது அமைதியாய் கிடக்க சொந்தமாக்கிவிட்ட பிரமையில் கல்லிட்டு எறிந்தபடி நகருகின்றான். எத்தனை முறை உவிந்த போதும் நிரப்பிக் கொள்கிறது தன்னை. பச்சை பசும் நீர் உணர்வற்றதாய் கோழையாய் பிறர் அடையாளப்படுத்தித் திரிய ஓடவும், வீழவும், அடித்துச் செல்லவும் கூடிய தனது நீரோட்டத்தையும், தான் தனதென்று காட்டித் தெரியாத உயிரையும் மீன்குஞ்சுகளுக்கும், தலைப்பிரட்டைகளுக்கும் பரிசளித்தபடி சுவாசிக்கின்றது.

கிணறு தரையோடு தரையாய் பூமிக்குள் புதைந்திருந்தது. வேரில்லாது, கிளையில்லாது மடை வழி ஓடி எல்லா புல் பூண்டு மரம் செடி கொடிகளின் வழியாக பூத்து காய்த்து, கனிந்து சாறாகி, விதையாகி, மீண்டும் விருட்சமாகி அதன் வேர் கிணற்றின் பக்கச் சுவரைப் பெயர்த்துக் கொண்டு கிணற்றின் ஆழம் வரை மூழ்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சு வாங்கியது புதையாது ஓடிக் கொண்டிருந்த நதியொன்று. ஒரு மழைக்காலத்து வெள்ளம் ஓடி வந்து கிணற்றுக்குள் ஓடுகின்ற வேகத்தில் பக்கச் சுவற்றை அரித்து அரித்து பொந்தாக்கியிருக்க அதற்குள் புறாக் குடும்பமொன்று பத்திரமாய் இருந்தது.

தன் குண்டு உடல் தூக்கி பொந்திலிருந்து கிணறு எதிரொலிக்க பறந்த புறா காலை நேரத்து தண்ணீர் பாய்ச்சலில் பூமி உறிஞ்சாது விட்டு விட்டிருந்த துளிகளை அருந்தியது. கிணற்றுள் தண்ணீர் போதும் போதுமென்றிருந்த போதும்.

கிணறு புறாக்களின் குரலில் இயலாமைகளை அனத்தலாய் வெளிப்படுத்த அதன் எச்சங்களை உள்வாங்கி விதை மிதக்கப் பண்ணி காற்றின் அலையடிப்பில் தன் கரையோரச் சுவற்றில் பதித்தது அந்த விதையை.

பகலில் சூரியனையும், இரவில் நிலவையும் மீந்த நேரங்களில வானையும் தனக்குள் புதைத்துக் கொண்டிருந்தது கிணறு. சூரியன் தனக்குள்ளிலிருந்ததை, நிலவுக்குச் சொல்லாது. நிலவிலிருந்ததை சூரியனுக்கும் சொல்லாது. தான் யாருக்கும் சொந்தமில்லையென நிறுவிக் கொண்டிருந்தது. நீள் வரப்போடு நீண்டிருந்த பாதைகள் என்னருகே வந்ததும் நின்று சுற்றிக் கொண்டு போகின்றன. காற்று மண்டலமேகி கடந்து கொண்டிருந்த காற்று தாண்டித்தழுவி எனக்குள் எனை சுற்றியிருந்த சுவற்றுக்குள் சுழன்று கொண்டிருக்க உள்ளே வாழவென்று உயிரை நீரிலிருந்து பெற்றிருந்த தவளைகள் கிணற்றின் பெருமையை பேசித் தீர்ப்பதாய் உரத்துக் கத்திக் கொண்டிருக்க ஓடும் ஆறு கண்டு, வீழும் அருவி கண்டு, மீண்டு தப்பி கிணற்றுள் வந்து வீழ்ந்த தவளை குழம்பியது பெருமை பேசும் கிணற்றுத் தவளை கண்டு. கிணற்றுத் தவளைகளோ புதிதாய் வந்த நபருக்கு தங்களது இருப்பிட பிரமாண்டம் தரும் பேராச்சர்யமே குழப்பங்களின் காரணமென்று எண்ணி சிலாகித்தபடி கேள்வி எழுப்பியது. "நீ பார்த்த ஆறு இதில் பாதி இருக்குமா? அருவிகள் இதில் கால்வாசித் தண்ணீராவது கொண்டிருக்குமா?" என்று.

கிணற்று நீர் சிரித்துக் கொள்வது பாவம் யாருக்கும் கேட்பதில்லை. இரு தவளைகளும் உணர்ந்த நீர் தானில்லை என்று உணராதிருப்பதை எண்ணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றின் மேட்டில் பூத்திருந்த பூவரசு வேரை மண்ணுக்குள் விட்டிருந்த போதும் பூக்களை, பூக்களின் வாசங்களை, காற்றுக்கும், தேனை, தேனின் ருசியை, வண்டுகளுக்கும் தந்து விட்டு விதையாய் மாறிய பின் உயிர்க்க வேண்டிய நேரம் வரும் போது மட்டும் மண்ணோடு இணைந்து விட இதுவரை கிளைகளோ பூக்களோ இலைகளோ மறந்துவிட்டிருந்த மண்ணின் நினைவு இப்பொழுது தான் வந்து சேர்கின்றதாய் விதைகளை மண்ணுக்கு பரிசென பல்லைக் காட்டிச் சொல்கிறது. "எங்கிருந்த போதும் என் வேர் தாங்கிய மண் நீயல்லவா?" என்று.

மேலிருந்து கீழிறங்கிய பார்வைகளில் தெறிக்கும் நிராகரிப்பை கூடத் தந்து விட எண்ணாத உணர்வுகள் தாங்கியிருந்த மண்ணும் சிரிக்கின்றது. ஒரு நாள் கிணற்று நீரின் சிரிப்பைக் காண நேர்ந்ததையும் எண்ணியபடி.

பூவரசு வேர்கள் மண் துளைத்து கிணற்றுக்குள் தன் வேர்களை விட்டு அத்துமீறல்களை அன்பால் செய்ததாய் நிகழ்த்திக் கொண்டிருக்க கிணறு முதல் முறையாய் கொதிக்கிறது. உள்ளிருந்த மீன்களும், தவளைகளும் தவிக்கின்றன பொறுக்காது.

ஊற ஊற தன் பெருமை உணராது உறிஞ்சித் தீர்த்த நில உடைமைக்காரனிடம் கிணற்று நீர் முதல் முதலாய் பேசிற்று "தந்த அன்புகளுக்கு மீண்டும் தருவாயென்று ஆழாக்குகள் நீட்டவில்லை" இருந்தும் எனக்குள் எதிர்பார்ப்புகள் இருக்காதா? ஊற்றெடுத்த பிரவாகம் நான் அடங்கிக் கிடப்பது நாலு சுவருக்குள். மீறிப் போக முடியாதென்பதாலா? இல்லை தேவையில்லை என்பதால் ஆனால் நிகழ்ந்த என் உள்ளிருப்பின் வலி உணராத உனக்கு இனி நான் தேவையுமில்லையென" உரைக்க

கண்ணகி பேசக் கேட்டவன். காற்றும் பேசக் கேட்டவன். அலையும் சிலும்பாத கிணற்று நீர் பேசக் கேட்டு திணறுவான் கோபமுறுவான், பின் தேறுவான். மனம் ஆறுவான். "கிணற்று வெள்ளம் நீ யார் கொண்டு போகக் கூடும். பொறுத்திரு நானும் தருவேன். பத்திரப்படுத்து உன் ஆழாக்குகளை. எதிர்பார்ப்புகளை துறப்பதுவே புரட்சி. அன்பால் அடக்க நினையாதிருப்பதே இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு. பதினெட்டாம் நூற்றாண்டுகளைத் தாண்டி மீண்டு வா. நீர் அழுத்த புதைந்த வேர்கள் பட்ட இடத்தின் புழுதி தட்டி விட்டு போ என்பதுவே புதுமை என அறிவு ஜீவித்தனமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தீர்மானித்திருந்த ஒன்றாய் கிணற்று நீர் இருக்க போதிக்க, நாலு சுவர் தாண்டி எங்கு போய்விடும் அலட்சியத்தில் கிணற்று நீரின் உயிர் தாங்கிய உடல் மீது நிறுவ நினைத்த கட்டிடச் செங்கல்களை அதை அவன் அன்பின் பேரால் கட்டி விட்ட தாஜ்மகாலாய் அடையாளப்படுத்தி விட அனுமதிப்பதில்லை எனும் தீர்மானிப்பில், தனக்குள்ளும் அலைகள் உண்டாக்கி தகர்த்துப் போகிறது கிணற்று நீர்.

ஒரு நாள் யாரும் எதிர்பார்த்திராத பொழுதொன்றில் மீன்கள் துள்ளத் துடிக்க முட்டைகளை புதைத்துவிட தவளைகள் வேறு வழியில்லாது இடம்பெயரலை யோசிக்க, பூவரச வேர்கள் தடம் மாறி இன்னும் ஆழம் போகத் தீர்மானிக்க பொந்தில் அமர்ந்த குண்டுப் புறாக்கள் குஞ்சுகள் சிறகு ஏக அடுத்த பருவம் தங்கலும் இங்கில்லை என வாழ்ந்த கூடுதனை தீர்ந்து கொண்டிருக்கும் நாட்களை முழுக்கக் கலைத்துத் தீர்த்துவிடத் தீர்மானிக்க கிணறு வற்றிப் போனது.

கிணற்று வெள்ளம் போகாது என தீர்மானித்திருந்த நிலவுடைமைக்காரன் நினைப்பு பொய்க்க பக்கத்து தோட்டக்காரன் போட்ட ஆழ்குழாய் கிணற்றில் உடைபட்ட பாறையோடு அடைபட்டிருந்த கிணற்று ஊற்று யாரும் அறியாப் பொழுதொன்றில் யாரும் நினைத்திடாத பாதையொன்றில் யாரும் தீர்மானித்திடாத ஒன்றாக கையிருந்த ஆழாக்குகளை இருந்திருந்த கிணற்றின் சேறுகளோடு புதைய விட்டு தன் பாதையை மாற்றி பயணி த்திருந்தது.

மேட்டில் நிலவுடைமைக்காரன் எறிகின்ற கல், தொலைத்து விட்டிருந்த அலைகளின் ஒப்பாரியென சப்தமெழுப்ப ஓடத் துவங்கியிருந்தான் தீமானிப்புகள் நீரில்லாமலே மூழ்கிப் போனதை எண்ணி. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REACH MORE TAMIL READERS AT LESS COST
BY ADVERTISING

தினக்குரல்
THINAKKURAL
තිනක්කුරල්

# THINAKKURAL

THINAKKURAL PUBLICATIONS (PVT) LTD.

68, Ellie House Road, Colombo-15.
Advertising / Circulation: 2 529 233, 4 618 938 Editorial : 4 618 939
General: 2 522 555, 2 523 216 Fax: 2 540 691
e-mail : thinakkural@yahoo.com

**Grandpass:**
180, Grandpass Road, Colombo-14
Tel :4741078 Fax :4741079

**Wellawatte:**
4C-6, Fussels Lane, Wellawatte.
Tel / Fax : 4513403

**Vavuniya:**
93, New Bus Stand Complex,
Kandy Road, Vavuniya.
Tel : 024-2224619

**Kandy:**
135 -17/3, Nabeesa Complex,
Kotugodella Veediya, Kandy.
Tel : 081-2203358

**Wattala:**
146B-1/4, Pearl Park, Negombo Road,
Wattala. Tel :4812243

தினக்குரல்
තිනක්කුරල්
THINAKKURAL

336, K.K.S. Road, Jaffna. Tel: 021-222 2127 Fax: 021-222 3735

Website : www.thinakural.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுக்குரிய கதாசிரியர்கள்

**முதலாம் பரிசு**
தாட்சாயணி

**இரண்டாம் பரிசு**
மு.சிவலிங்கம்

**மூன்றாம் பரிசு**
சாந்தினி வரதராஜன்

**ஆறுதல் பரிசுகள்**
சாரங்கா தயாநந்தன்
ஜூனைதா ஷெரீப்
சோ.ராமேஸ்வரன்
முல்லைமணி
உமாதரணி
மணிவாசகன்
இரா.பரமேஸ்வரன்
அ.நிஷாந்தன்
என்.சொக்கன்
ம.திலகபாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org